July 2022

தமிழ்

13ம் ஆண்டில்

நற்றமிழரின் நாடித்துடிப்பு




VARSHA™
IDLI/DOSA BATTER
Eat Fresh!
Eat the Best!
VARSHA
Ready to Cook
Idli / Dosa Wet Mix
1Kg
Traditional taste that Lingers

iதமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு

July 2022

சுவடி — 12
ஓலை — 5

வணக்கம் பல

மக்களின் பிரதிநிதிகளால், மக்களின் உணர்வுகளை புரிந்து கொண்டு ஆட்சி செலுத்துவதற்கு வழிவகை செய்யக்கூடியது அரசு எந்திரம். ஆனால் சடப்பொருட்களாலான எந்திரம் போலாகினால் கேலிக்கூத்தல்லவா? நடைமுறை காலத்திற்கு ஒவ்வாத சட்டங்களை நீக்கி, நடைமுறைக்கு வேண்டிய சட்டங்களைப் புகுத்தி மனிதகுல மேம்பாட்டிற்கு உழைக்க வேண்டிய முக்கியமான பொறுப்பில் உள்ளதுதான் அரசு. அதிகாரத்தில் அமர்ந்திட்டாலே சட்டங்கள் இயற்றிடலாம், இருப்பதை எப்படியும் வளைத்திடலாம் என்ற நினைப்பில் இருந்தால், இன்னல்கள் வரலாம். இக்கட்டான சூழல்களைத் தவிர்க்க வரவேண்டிய ஆட்சியாளர்கள், சமயங்களில் பல இக்கட்டான சூழ்நிலைகளை உருவாக்குவதற்காகவே வந்து அமர்ந்து விட்டால் என்னவென்பது?

அமெரிக்காவில் கொண்டு வரப்பட்டிருக்கும் கருக்கலைப்புச் சட்டமானது, பெண்களின் மனநிலை, உடல்நிலை இரண்டையும் கருத்தில் கொள்ளாமல் உலகின் முற்போக்குத்தனமான நாடென்று எண்ணிக்கொண்டு மிகவும் பிற்போக்குத்தனமான, மத அடிப்படையிலான ஒரு சட்டத்தை இயற்றப்பட்டது, முற்றிலும் கண்டித்தக்கது! உக்ரைன் விவகாரம் முடிவு கண்ணுக்கு புலப்படவில்லை! மேற்குலக நாடுகள் ஒத்திசைந்து தாளம் போடுவது போலவும், எதிர்ப்பாட்டு பாடுவது போன்ற நிலையுமாக இருக்கிறார்களேயன்றி முடிக்க நினைந்ததாகத் தெரியவில்லை! வல்லரசுகள் நினைத்தால் நடக்கும் என்ற நிலையை எப்போது உலக நாடுகள் ஒன்றாகக் கூடி மாற்றுமோ, அப்போதுதான் மனித குலத்தில் சமதர்மம் நிலவும்!

கச்சத்தீவு விவகாரம் இந்தியாவுக்கு தலைவலியாகவே இருந்து வருகிறது. முந்தைய காலத்தில் செய்த தவற்றினை சரி செய்ய சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. இந்தியா சொல்வதை எல்லாம் கேட்க வேண்டிய இலங்கையை இறுக்கிப் பிடித்து கச்சதீவைச் சொந்தமாக்கிக் கொள்வதற்கான தருணமிது! தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்திற்கு மிகப்பெரிய கேள்விக்குறியை எழுப்பி உயிர் பலி வாங்கும் கச்சத்தீவு, இனி இந்தியாவுக்குச் சொந்தமாக வேண்டும் என்ற ஒரு நிலையை ஆளும் அரசு விரைந்து முடிவெடுத்து ஆவன செய்ய வேண்டும்! மேலும் இன்றைய உலக நாடுகள் மற்றும் தமிழர் நலம் குறித்த நல்ல பல ஆக்கங்களோடு மலர்கின்ற 'அய் தமிழ்' இதழை வழமை போலவே வரவேற்று வாசியுங்கள்! நேசியுங்கள்!

நேசப்பகிர்தலுடன்

ஆசிரியர் குழு

உள்ளே...



ஆண்டவன் பேரால்
உரிமை மறுப்பு

ஆதிக்க மனம்

அரசியல் சதுரங்கம்

சொச்ச தீவு யாருக்கு?

தமிழே தமிழே
சேரமான் கனவு
அறிவோம் தமிழர் பெருமை
சிவகாமியின் சபதம்

சுழல் காப்போம்

மருத்துவ தமிழ்

உறவுகளைப் பேணுவோம்!

IThamil Monthly Magazine
Chief Editor & Publisher
Sivanesan
Editor
Khottravan
Editorial Team
Ganesan
Navani
Shanthakumar
Art Editor
Sriram
Art & Marketing Director
Jaya
Printers
Kanagam Pathippagam
Contact us:
editor@ithamil.com

*இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது

ஆண்டவன் பேரால்

உரிமை

கருக்கலைப்பு உரிமை சட்டம் ரத்து செய்யப்பட்டது

அமெரிக்காவில் கருக்கலைப்பு உரிமையை தேசிய அளவில் சட்டபூர்வமாக்கிய 50 ஆண்டுகால உத்தரவை அந்நாட்டு உச்ச நீதிமன்றம் ரத்து செய்திருக்கிறது. இதன் மூலம் கருக்கலைப்புக்கு தடை விதிக்கும் அதிகாரத்தை தனிப்பட்ட மாகாணங்களே இனி செய்ய இந்த தீர்ப்பு வாய்ப்பாக மாறியுள்ளது.

அமெரிக்காவில் 1973ஆம் ஆண்டில் ரோ மற்றும் வேட் இடையிலான வழக்கில், 'கருக்கலைப்பு என்பது பெண்ணின் தனிப்பட்ட உரிமை, அது அரசியலமைப்பு உரிமை' என்று தீர்ப்பு அளிக்கப்பட்டது. இதேபோல, 1992ஆம் ஆண்டில் பெனிசில்வேனியா மற்றும் கேசே இடையிலான வழக்கில், '22 முதல் 24 வார கர்ப்பத்தை சம்பந்தப்பட்ட பெண் சட்டபூர்வமாக கருக்கலைப்பு செய்து கொள்ளலாம்' என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

இந்த நிலையில், இன்று வெளியாகியுள்ள தீர்ப்பைத் தொடர்ந்து, அமெரிக்காவில் கருக்கலைப்பு உரிமைகள் மாற்றப்படும். கருக்கலைப்பு நடைமுறைக்கு தடை விதிக்க இனி மாகாணங்கள் ஒவ்வொன்றாக நடவடிக்கை மேற்கொள்ளும்.

அநேகமாக அமெரிக்கா மாகாணங்களில் பாதியாவது கருக்கலைப்புக்கு தடை விதிக்க ஏதுவாக புதிய சட்டம் அல்லது கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பைத் தொடர்ந்து, கருக்கலைப்புக்கு தடை விதிக்கும் சட்டங்களை 13 மாகாணங்கள் இயற்றியுள்ளன. மற்றவை சில புதிய கட்டுப்பாடுகளை விரைவாக நிறைவேற்ற வாய்ப்புள்ளது. மொத்தத்தில், கருத்தரிக்கும்

வயதுடைய சுமார் 36 மில்லியன் பெண்கள் கருக்கலைப்புக்காக செல்ல முடியாத நிலையை இது ஏற்படுத்தும் என்று பிளாண்ட் பேரன்ட்ஹுட் என்ற கருக்கலைப்பு சேவை வழங்கும் சுகாதார அமைப்பு கூறுகிறது.

15 வாரங்களுக்குப் பிந்தைய சிசுவை கருக்கலைப்பு செய்வதற்கு மிஸ்ஸிசிப்பி மாகாணம் விதித்த தடையை எதிர்த்து நடைபெற்ற டாப்ஸ் மற்றும் ஜாக்சன் மகளிர் சுகாதார அமைப்பு இடையிலான வழக்கை உச்ச நீதிமன்றம் விசாரித்தது. கன்சர்வேட்டிவ் உறுப்பினர்களை பெரும்பான்மையாகக் கொண்ட அந்த நீதிமன்ற அமர்வில், கருக்கலைப்புக்கு வழங்கப்பட்டு வந்த அரசியலமைப்பு உரிமைக்கு முடிவு காணும் வகையில், சித்தாந்த அடிப்படையில் தீர்ப்பு வழங்கப்பட்டது.

"எனவே கருக்கலைப்புக்கான உரிமையை அரசியலமைப்பு வழங்கவில்லை என்று நாங்கள் கருதுகிறோம் ... மேலும் கருக்கலைப்பை ஒழுங்குபடுத்தும் அதிகாரம் மக்களுக்கும் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கும் திரும்ப வழங்கப்பட வேண்டும்" என்று தீர்ப்பின் ஒரு பகுதியில் கூறப்பட்டிருக்கிறது.

இந்த தீர்ப்பு உச்ச நீதிமன்றம் ஏற்கெனவே

அளித்த தமது சொந்த தீர்ப்புக்கு தலைகீழாக உள்ளது. இப்படி நடப்பது மிகவும் அரிதான செயல். மேலும் தேசத்தை பிளவுபடுத்தும் அரசியல் வாதங்கள் இதன் மூலம் தூண்டப்பட வாய்ப்புள்ளதாக கருதப்படுகிறது.

கருக்கலைப்பு பற்றிய கருத்துக்கள் தொடர்பாக முரண்பட்ட நிலைபாடு நிலவும் மாகாணங்களில் (பென்சில்வேனியா, மிஷிகன், விஸ்கான்சின்

போன்றவை) — தேர்தல் அடிப்படையில் ஒவ்வோர் முறையும் தடை விதிக்கும் சட்ட நடைமுறையை தீர்மானிக்க முடியும்.

மற்றவற்றில், தனி நபர்கள் கருக்கலைப்புக்காக வெளி மாகாணங்களுக்குச் செல்லலாமா அல்லது அவர்கள் கருத்தரித்த முதல் மூன்று மாதங்களில் கருக்கலைப்பு செய்வதற்கான முழுமையான உரிமையை வழங்கியது, ஆனால் இரண்டாவது மூன்று மாதங்களில் கருக்கலைப்பு செய்து கொள்ள கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. அதுவே 6—9 மாதங்களில் கருக்கலைப்பு செய்வது அறவே தடை



அஞ்சல் சேவைகள் மூலம் கருக்கலைப்பு மருந்துகளை ஆர்டர் செய்யலாமா என்பது உள்ளிட்ட புதிய சட்டப் போராட்டங்களுக்கு இந்தத் தீர்ப்பு வழிவகுக்கலாம். கலிபோர்னியா, நியூ மெக்சிகோ, மிஷிகன் உள்ளிட்ட பல மாகாணங்களில் ஜனநாயக கட்சியை சேர்ந்த ஆளுநர்கள் 'ரோ — வேட்' வழக்கில் முந்தைய தீர்ப்பு ரத்து செய்யப்பட்டால், கருக்கலைப்பு உரிமையை தங்கள் அரசியலமைப்பிற்குள் உள்ளடக்கும் திட்டங்களை ஏற்கெனவே அறிவித்துள்ளனர்.

இந்த நிலையில், கருக்கலைப்பு உரிமைகளை எவ்வாறு பாதுகாப்பது என்பது குறித்து அமெரிக்க துணை அதிபர் கமலா ஹாரிஸ் ஏழு மாகாணங்களின் ஜனநாயக கட்சியின் அட்டர்னி ஜெனரல்களுடன் விவாதித்தார் என்று ராய்ட்டர்ஸ் முகமை செய்தி வெளியிட்டுள்ளது.

பின்னணி

1973ஆம் ஆண்டு நடந்த மைல்கல் ரோ — வேட் வழக்கில் உச்ச நீதிமன்றம் ஏழுக்கு இரண்டு வாக்குகள் மூலம் ஒரு பெண்ணின் கர்ப்பத்தை கலைக்கும் உரிமை அமெரிக்க அரசியலமைப்பால் பாதுகாக்கப்படுகிறது என்று தீர்ப்பளித்தது.

அந்தத் தீர்ப்பு அமெரிக்கப் பெண்களுக்கு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் கடந்த பல தசாப்தங்களில், கருக்கலைப்புக்கு எதிரான தீர்ப்பை சுமார் ஒரு டஜன் மாகாணங்கள் திரும்பப் பெற்றுள்ளன.

ரோ — வேட் வழக்கு: எளிதில் புரிந்து கொள்ள உதவும் சில பின் குறிப்புகள்

1971இல் கருக்கலைப்பு செய்யத் தவறிய பெண் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இது ரோ வெர்சஸ் வேட் வழக்கு என்று அழைக்கப்படுகிறது.

கருக்கலைப்பு வசதிகளை எளிதாக அணுக வேண்டும் என்றும் கர்ப்பம் மற்றும் கருக்கலைப்பு தொடர்பான முடிவு பெண்ணின் கையில் இருக்க வேண்டும் என்றும் அது அரசு அல்ல என்றும் மனுதாரர் கூறினார்.

இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, 1973இல் நீதிமன்றம் தனது தீர்ப்பை வழங்கியது. அதில் கருக்கலைப்பு சட்டபூர்வமானது மற்றும் கருக்கலைப்பு தொடர்பான முடிவுகளை எடுக்க கர்ப்பிணிப் பெண்ணுக்கு அரசியலமைப்பு உரிமை அளிக்கிறது என்று தெரிவிக்கப்பட்டது. இதன் பிறகு, மருத்துவமனைகளில் பெண்களுக்கு கருக்கலைப்பு வசதிகளை வழங்குவது கட்டாயமாக்கப்பட்டது.

ஆனால் அதன் பிறகு விஷயம் தீவிரம்

அடைந்தது. மதக் குழுக்களுக்கு இது மிகப்பெரிய பிரச்னையாக இருந்தது, ஏனென்றால் கருவுக்கு வாழ உரிமை உண்டு என்று அவர்கள் நம்பினர். இந்த விவகாரத்தில் ஜனநாயக கட்சி மற்றும் குடியரசு கட்சி இடையே கருத்துகள் வேறுபட்டன. 1980வாக்கில், இந்த பிரச்னை மத ரீதியிலானதாக மாறியது.

ஏற்பட்டது. கடந்த 1973ஆம் ஆண்டில் அவர் அமெரிக்க உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். அங்கு அவரது வழக்கை சாண்ட்ரா பென்சிங் என்ற 20 வயதான ஜார்ஜியா பெண் தொடுத்த வழக்குடன் சேர்த்து விசாரிக்கப்பட்டது. டெக்சாஸ் மற்றும் ஜோர்ஜாவில் கருக்கலைப்புச் சட்டங்கள் அமெரிக்க அரசியலமைப்புக்கு எதிராக இருக்கிறது என்று அவர்கள் வாதிட்டனர்.

ரோ – வேட் – என்ன வழக்கு?

1969 ஆம் ஆண்டில், 'ஜேன் ரோ' என்ற புனைப்பெயரைக் கொண்டு நார்மா மெக்கோர்வி என்ற 25 வயதான திருமணமாகாத பெண் ஒருவர், டெக்சாஸில் உள்ள குற்றவியல் கருக்கலைப்புச் சட்டங்களை எதிர்த்து வழக்கு தொடுத்தார்.

தாயின் உயிருக்கு ஆபத்து உள்ள சூழ்நிலைகளைத் தவிர, மற்ற நிலைகளில் கருக்கலைப்பு செய்வது சட்டத்திற்கு புறம்பானது என்று வழக்கில் டெக்சாஸ் நீதிமன்றம் தடை விதித்தது.

கருக்கலைப்புக்கு எதிரான சட்டத்தை ஆதரிப்பவர் ஹென்றி வேட். அவர் டல்லாஸ் மாகாணத்தின் வழக்கறிஞர். அதனால், இந்த வழக்கு ரோ — வேட் என்று அழைக்கப்படுகிறது.

நார்மா மெக்கோர்வி வழக்கு தொடுத்தப்போது, தனது மூன்றாவது குழந்தையுடன் அவர் கர்ப்பமாக இருந்தார். மேலும் அவர் பாலியல் வன்முறை செய்யப்பட்டதாகக் கூறினார். ஆனால், அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. இதனால், அவர் குழந்தையைப் பெற்றெடுக்க வேண்டிய கட்டாயம் ஏனெனில், அவை ஒரு பெண்ணின் தனி மனித உரிமையை மீறுகின்றன என்று அவர்கள் வாதிட்டனர்.

இந்த விவகாரத்தில், ஏழுக்கு இரண்டு வாக்குகள் மூலம், கருக்கலைப்பைத் தடை செய்யும் அதிகாரம் அரசுக்கு இல்லை என்று நீதிபதிகள் தீர்ப்பளித்தனர். கர்ப்பத்தைக் கலைக்கும் ஒரு பெண்ணின் உரிமையை அமெரிக்க சட்டம் பாதுக்காக்கும் என்று நீதிபதிகள் தீர்ப்பில் குறிப்பிட்டனர்.

இந்த வழக்கு பெண்களின் உரிமையை எப்படி மாற்றியது?

இந்த வழக்கு 'டிரைமெஸ்டர்' (மூன்று மாத கணக்கு) முறையை உருவாக்க அனுமதிக்கிறது. அதாவது:

1. கர்ப்பத்தின் முதல் மூன்று மாதங்களில் கருக்கலைப்பு செய்வதற்கான முழு உரிமை தரப்படுகிறது.

2. இரண்டாவது மூன்று மாதங்களில், சில அரசுக் கட்டுப்பாடுகளுடன் கருக்கலைப்பு செய்ய

அனுமதிக்கப்படுகிறது.

3. கருப்பைக்கு வெளியே வாழக்கூடிய கட்டத்தை அந்த சிசு நெருங்கி விடுவதால், கடைசி மூன்று மாதங்களில் கருக்கலைப்புகளை கட்டுப்படுத்தவோ தடை செய்யவோ மாகாணங்களுக்கு உரிமை அளிக்கப்படுகிறது.

ரோ — வேட் வழக்கில், இறுதி மூன்று மாதங்களில், ஒரு பெண்ணின் உயிரையோ உடல்நலத்தையோ காப்பாற்றுவது அவசியம் என்று மருத்துவர்கள் சான்றளித்தால் மட்டுமே எந்தவொரு சட்டபூர்வ தடையையும் மீறி கருக்கலைப்பு செய்ய முடியும் என்பதை வலியுறுத்தியது.

ரோ – வேட் வழக்கு எப்படி ரத்து?

15 வாரங்களுக்குப் பிறகான கருக்கலைப்புக்கு மிஸ்ஸிசிப்பி மாகாணம் தடை விதித்ததற்கு ஆதரவாக உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இதன் மூலம், மில்லியன் கணக்கான அமெரிக்கப் பெண்களுக்கு கருக்கலைப்பு செய்வதற்கான அரசியலமைப்பு உரிமையை அந்த தீர்ப்பு முடிவுக்குக் கொண்டுவந்துள்ளது. தனிப்பட்ட மாகாணங்களால் இப்போது இந்த நடைமுறைக்கு மீண்டும் தடை விதிக்க முடியும். அமெரிக்காவில் உள்ள மாகாணங்களில் பாதி, புதிய கட்டுப்பாடுகளையும், தடைகளையும் அறிமுகப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பைத் தொடர்ந்து கருக்கலைப்பை தானாகவே தடை செய்யும் மாற்று சட்டங்களை ஏற்கெனவே 13 மாகாணங்கள் இயற்றியுள்ளன. இன்னும் சில மாகாணங்கள், புதிய கட்டுப்பாடுகளை விரைவாக நிறைவேற்ற வாய்ப்புள்ளது. உச்சநீதிமன்றத்தில் ஒன்பது நீதிபதிகள் உள்ளனர். அவர்களில் ஆறு பேர் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த தலைவர்களால் நியமிக்கப்பட்டவர்கள்.

2022 ஆம் ஆண்டு மே மாதம், இவர்களில் ஒருவரான நீதிபதி சாமுவேல் அலிட்டோவின் விரைவில் குறிப்பிடப்பட்ட கருத்து ரகசியமாக வெளியானது. அதில் ரோ — வேட் தீர்ப்பு 'மிகவும் தவறானது' என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

அமெரிக்க உச்ச நீதிமன்றத்தின் சமீபத்திய தீர்ப்புக்கு முன்பே, கருக்கலைப்பை எதிர்க்கும் குரல்கள் அங்கு வலுப்பெற்றுள்ளன.



1980ஆம் ஆண்டில், ஒரு பெண்ணின் உயிரைக் காப்பாற்றுவதற்கு அவசியம் இருக்கும் நிலையைத் தவிர, கருக்கலைப்புக்கு அரசு நீதியைப் பயன்படுத்துவதைத் தடை செய்யும் சட்டத்தை நீதிமன்றம் உறுதி செய்தது.

பின்னர் 1989ஆம் ஆண்டில், அரசு மருத்துவமனைகளில் அல்லது அரசு ஊழியர்களால் கருக்கலைப்பு செய்வதைத் தடை செய்ய மாகாணங்களுக்கு அனுமதி அளித்தது. 1992ஆம் ஆண்டு, மற்றொரு முக்கிய வழக்கில், உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பு மிகப்பெரிய தாக்கம் ஏற்படுத்தியது. மருத்துவம் அல்லாத காரணங்களுக்காக முதல் மூன்று மாதங்களில் கருக்கலைப்பு செய்ய மாகாணங்கள் கட்டுப்பாடு விதிக்கலாம் என்று அந்த தீர்ப்பு கூறியது.

இதன் விளைவாக, பல மாகாணங்கள் ஏற்கனவே கட்டுப்பாடுகள் விதித்துள்ளன. இளம் கர்ப்பிணிகள் கருக்கலைப்பு குறித்து எடுக்கப்படும் முடிவில், அவர்களின் பெற்றோர்களோ ஒரு நீதிபதியோ தலையிட வேண்டும் என்பன போன்ற கட்டுப்பாடுகள் உள்ளன.

மேலும், ஒரு பெண் கருக்கலைப்பு கிளினிக்கிற்கு செல்லும் நேரத்திற்கும், கருக்கலைப்பு செய்யப்படும் சமயத்திற்கு இடையில் உள்ள காத்திருக்கும் நேரம் போன்ற கட்டுப்பாடுகள் ஏற்கெனவே பிற மாகாணங்களில் உள்ளன.

இதன் விளைவாக, பல பெண்கள் கருக்கலைப்பு செய்ய அதிக தூரம் பயணம் செய்ய வேண்டியுள்ளது. பெரும்பாலும் மாகாணங்களின் எல்லைகளைத் தாண்டி, அவர்களுக்கு அதிக பணம் செலுத்த வேண்டியுள்ளது.

கொந்தளிப்பும் மகிழ்ச்சியும் ஏன்?

உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பிற்குப் பிறகு, அமெரிக்காவின் சில மாகாணங்களில் கருக்கலைப்பு கிளினிக்குகள் மூடப்பட்டுள்ளன. இந்த முடிவின் நேரடி தாக்கம் ஆர்கன்சாஸ் மாகாணத்தில் உள்ள லிட்டில் ராக் பகுதியின் கருக்கலைப்பு மருத்துவமனையில் காணப்பட்டது.

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு விவரம் ஆன்லைனில் பதிவேற்றப்பட்டவுடனேயே அங்கு கருக்கலைப்புக்கு தடை விதிக்கப்பட்டது. கருக்கலைப்பு கிளினிக்கின் கதவுகள் மூடப்பட்டன. மருத்துவமனை ஊழியர்கள், கருக்கலைப்புக்காக முன்பதிவு செய்த நோயாளிகளை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, நீதிமன்ற தீர்ப்பைத் தொடர்ந்து அவர்களின் அப்பாயின்ட்மென்ட் ரத்து செய்யப்பட்டதாகக் கூறினர்.

தீர்ப்புக்குப் பிறகு அமெரிக்க அதிபர் ஜோ பைடன் நாட்டு மக்களுக்கு ஆற்றிய தொலைக்காட்சி உரையில், கருக்கலைப்புக்காகப் பெண்கள் பயணம் செய்வதை மாகாண மற்றும்

உள்ளூர் அதிகாரிகள் தடுக்காமல் இருப்பதை உறுதி செய்ய முயற்சிப்பதாகக் கூறினார். நாட்டின் சுகாதாரத்துறை, கருக்கலைப்பு மாத்திரைகள் முழுமையான அளவில் கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என உத்தரவிட்டுள்ளதாகவும் பைடன் தெரிவித்தார்.

அமெரிக்க துணை அதிபர் கமலா ஹாரிஸ் தமது ட்விட்டர் பக்கத்தில் தமது நிலைப்பாட்டை பகிர்ந்துள்ளார். "அமெரிக்காவில் இன்று பல்லாயிரக்கணக்கான பெண்கள் உடல்நலம் மற்றும் கருக்கலைப்பு மருத்துவ வசதியைப் பெற முடியாமல் இன்றிரவு படுக்கைக்கு செல்வர். அமெரிக்க மக்களின் அரசியலமைப்பு உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன," என்று கமலா ஹாரிஸ் கூறியுள்ளார்.

அமெரிக்காவில் பெண்களின் கருக்கலைப்புக்கான அரசியலமைப்பு உரிமையை அமெரிக்க உச்ச நீதிமன்றம் தடை செய்துள்ளது. கருக்கலைப்பிற்கு எதிராக உச்ச நீதிமன்றம் அளித்துள்ள இந்த தீர்ப்பினால் அமெரிக்கப் பெண்கள் தங்களுடைய கருக்கலைப்பு உரிமையை இழக்க உள்ளனர்.

இந்தத் தீர்ப்பு வெளியானதும், நீதிமன்றத்திற்கு வெளியே குழுமியிருந்த, கருக்கலைப்பு உரிமைக்கு எதிரானவர்கள், தங்கள் மகிழ்ச்சியை பகிர்ந்துகொண்டனர். ஆனால் நாட்டின் பல பகுதிகளிலும் மக்கள் இந்தத் தீர்ப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். அமெரிக்க அதிபர் ஜோ பைடன், 'நீதிமன்றம் இதுவரை செய்யாத பிழையைச் செய்துள்ளது. நாட்டை 150 வருடங்கள் பின்னோக்கி செல்ல வைத்துள்ளது. இதன்மூலம் பல அமெரிக்க மக்களின் வாழ்க்கையை நீதிமன்றம் கேள்விக்குறியாக்கியுள்ளது' என்று கூறியுள்ளார்.

ஜனநாயகக் கட்சியின் சபாநாயகர் நான்சி பெலோசி, 'குடியரசுக் கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள உச்ச நீதிமன்றம், அந்தக் கட்சியின் இருண்ட மற்றும் தீவிர இலக்கை அடைந்துவிட்டது. அமெரிக்க பெண்களுக்கு, இன்று தங்கள் அம்மாக்களைவிட குறைவான சுதந்திரமே உள்ளது. இந்தக் கொடூரமான தீர்ப்பு மூர்க்கத்தனமானது மற்றும் இதயத்தைத் துன்புறுத்துகிறது' என்று கூறியுள்ளார்.

இதற்கிடையில், கருக்கலைப்பு உரிமை வழங்கிய ரோ மற்றும் வேட் இடையிலான தீர்ப்பை நீண்ட காலமாக எதிர்த்து வருபவரான முன்னாள் அதிபர் மைக் பென்ஸ், வாழ்வின் புனிதத்தை ஒவ்வொரு மாகாணமும் ஏற்றுக்கொள்ளும் வரை ஒவ்வொரு மாகாணத்திலும் கருக்கலைப்பு எதிர்ப்பு பிரசாரத்தை நிறுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

கருத்துப் ப(ட)டம்

நன்றி: தினமலர்

சொல்றாங்க... சொல்றாங்க...

"கருக்கலைப்பு உரிமைச் சட்டம் ரத்து செய்யப்பட்டது அமெரிக்காவுக்கு மோசமான நாள்!"

ஜோ பைடன்

(யாரோ சிலர் எப்படியோ சிலர் என்றிருந்தால் பரவாயில்லை! நாடே இப்படி இருந்தால் எப்படி?)

"உக்ரைன் போர் பல ஆண்டுகள் நீடிக்கும். இந்தப் போரில் உக்ரைனுக்கு தொடர்ந்து ஆதரவளிக்க மேற்கு நாடுகள் தயாராக வேண்டும்!"

ஜென்ஸ் ஸ்டோல்டன்பெர்க்

(ஏற்கெனவே மேற்கு நாடுகள் அளித்து வரும் அபார ஆதரவால் உலக நாடுகள் ஆச்சரியத்தில் மிதக்கின்றன. இதிலே இன்னும் பல ஆண்டுகள் ஆதரவா? கேட்கவே சிலிர்(சலி)க்கிறது!)

"காவிரி ஆற்றின் குறுக்கே மேகேதாட்டு அணை கட்ட விட மாட்டோம்"

ஸ்டாலின்

('நாங்கள் சொன்னதைச் செய்வோம்!' என்று வந்த முதல்வரே... இதையும் செய்யலாமே!)

"பிரச்சினைகளை பேசித் தீர்க்கலாம்; பொதுக்குழுவுக்கு வாருங்கள்!"

இ.பி.எஸ்

அடடா! என்னவொரு அரவணைப்பு!.. பொது வாக்கெடுப்பு நடத்த தொண்டர்களை அழைக்கும் துணிவு உண்டா?)

ஆதிக்க

உக்ரைன் எப்போதுமே போர்களின் பூமி! – வரலாற்றுப் பார்வை

போர்களின் பூமி என்று அழைக்கப்படும் உக்ரைனின் வரலாற்று பின்னணி குறித்து பார்க்கலாம். ஐரோப்பாவிலேயே மிகுந்த ஏழ்மையான நாடு உக்ரைன். அதிக விவசாய நிலங்கள் இருக்கும் நாடு. ரஷ்யாவுக்கு அடுத்து ஐரோப்பாவில் இரண்டாவது பெரிய பரப்பளவு கொண்ட நாடு. 4 கோடிக்கும் மேற்பட்டோர் உள்ளனர். தொழில் புரட்சிக்குப் பிந்தைய நவீன காலத்தில் உக்ரைன் எப்போதும் ரஷ்யாவின் ஒரு

பகுதியாகவே இருந்துள்ளது. கி.பி. ஆயிரமாம் ஆண்டுகளின் தொடக்கத்தில், கீவியன் ரஸ் என்ற பேரரசு உக்ரைனை ஆட்சி செய்தது. தற்போதைய தலைநகரின் கீவ் என்ற பெயர் அதனால் வந்ததே.

தற்போதைய உக்ரைன், பெலாரஸ், போலந்து மற்றும் ரஷ்யாவின் பல பகுதிகளை உள்ளடக்கியதாக கீவியன் பேரரசு இருந்தது. விளாடிமிர் தி கிரேட், அந்தப் பேரரசின் புகழ்பெற்ற அரசர். கீவியன் ரஸ் என்ற பேரரசின் பெயரிலிருந்தே ரஷ்யா என்ற பெயர் உருவானது. 13ஆம் நூற்றாண்டில் மங்கோலியப் படையெடுப்பு கீவியன் பேரரசை வீழ்த்தியது. அதன்பின் போலந்து, லிதுவேனியா, ஆஸ்திரியா, ரஷ்யா ஆகிய நாடுகளின் மன்னர்கள் உக்ரைனைப் பங்கு பிரித்துக்கொண்டார்கள்.

நாட்டின் பெரும்பகுதி போலந்து வசம்போக, அதை எதிர்த்து உக்ரைன் மக்கள் கிளர்ச்சி செய்தனர். பல்லாயிரம் பேர் இறந்த இந்த கிளர்ச்சி 'கொசாக் கிளர்ச்சி' என்று வரலாற்று ஆசிரியர்களால் அழைக்கப்படுகிறது. இதை சாதகமாக வைத்துக்கொண்டு, உக்ரைனின் பெரும் பகுதியை ரஷ்ய மன்னர்கள் ஆக்கிரமித்தனர். முதல் உலகப் போரைத் தொடர்ந்து ரஷ்ய கம்யூனிஸ்ட் புரட்சி, அம்மன்னராட்சியை வீழ்த்தியது. அந்த நேரத்தில் உக்ரைன் தலைவர்கள் சிலர் இணைந்து, தனி நாட்டை உருவாக்கினர்.

ரஷ்ய கம்யூனிஸ்ட் ஆதரவுடன் உக்ரைன் 1918ஆம் ஆண்டு தனி நாடாக உருவானது. உக்ரைனில் இருந்த ரஷ்ய மன்னரின் ஆதரவாளர்களுக்கும், கம்யூனிஸ்ட் ஆதரவாளர்களுக்கும் இடையே போர் மூண்டது. ஆயிரக்கணக்கான மக்களை பலிகொண்ட இந்தப் போர் 3 ஆண்டுகள் நீடித்தது. உக்ரைன் முழுக்க சோவியத் யூனியனின் கட்டுப்பாட்டில் வந்தது.

சோவியத் யூனியன் கட்டுப்பாட்டில் இருந்த உக்ரைன் பகுதியில் உக்ரைனின் மொழி,

மனம்

ராம்குமார்

பாரம்பரியக் கலைகள், பண்பாடு எல்லாவற்றையும் மீட்கும் முயற்சியை அரசே ஆதரித்தது. 1939ஆம் ஆண்டு ஹிட்லரின் நாஜிப் படைகள் போலந்தை தாக்கின. அதேநேரத்தில் சோவியத் ரஷ்யாவும் போலந்து மீது போர் தொடுத்தது. இரண்டு நாடுகளும் போலந்தை பங்கு பிரித்துக்கொண்டன. போலந்தின் வசமிருந்த உக்ரைன் பகுதிகள் எல்லாம் சோவியத் வசம் வந்தன. இன்றைய உக்ரைன் தலைநகரான கீவ் நகரை ஜெர்மனி படைகள் முற்றுகையிட, சோவியத் படைகள் அவர்களை எதிர்த்துப் போரிட்டன. இரண்டு

ஆண்டுகள் போர் புரிந்தும் கீவ் நகரை ஹிட்லரின் நாஜி படைகளால் ஆக்கிரமிக்க முடியவில்லை. இருதரப்பிலும் ஆயிரக்கணக்கான உயிரிழப்புகள் ஏற்பட்டன. கிழக்கு உக்ரைன் மக்கள் சோவியத் ராணுவத்துடன் இணைந்து ஹிட்லர் படைகளை எதிர்த்துப் போரிட்டனர். மேற்கு உக்ரைனில் இருந்த சில குழுக்கள் ஜெர்மன் படைகளுடன் இணைந்து, போலந்துக்கு எதிராக போர் புரிந்தன. இரண்டாம் உலகப்போரில் ஜெர்மனி தோற்றப் பிறகுதான் உக்ரைனில் அமைதி திரும்பியது. அந்தப் போரில் உக்ரைன் பிரதேசத்தில் மட்டுமே 60 லட்சம் பேர் இறந்தனர். போரால் ஏற்பட்ட பஞ்சத்தை காரணமாக வைத்து, உக்ரைனில் இருந்த மக்களில் பலரை சைபீரியப் பிரதேசத்துக்கு அனுப்பினார் ஸ்டாலின். அந்த இடங்களில் ரஷ்யர்களைக் கொண்டுவந்து குடியமர்த்தினார். இப்படித்தான் உக்ரைனில் ரஷ்யாவின் ஆதிக்கம் நிறுவப்பட்டது. ஸ்டாலின் மறைவுக்குப் பிறகு சோவியத் யூனியனில் ஆட்சிக்கு வந்தார் நிகிதா



குருசேவ். உக்ரைன் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளராகவும் இருந்தவர். இரும்புத்தாதுவும் நிலக்கரியும் அதிகம் இருந்த பகுதி என்பதால், வேகமான தொழில் வளர்ச்சி உக்ரைனில் வந்தது. ஒருகட்டத்தில் ஐரோப்பாவிலேயே பெரிய தொழில் மையமாக உக்ரைன் இருந்தது. சோவியத்தின் புகழ்பெற்ற விஞ்ஞானிகள், விளையாட்டு வீரர்கள், கலைஞர்கள் பலர் உக்ரைனில் உருவானார்கள். குருசேவுக்குப் பிறகு சோவியத் யூனியனை ஆட்சி செய்த பிரஷ்னேவ் இங்கிருந்து சென்றவர்தான். 1991ஆம் ஆண்டு சோவியத் யூனியன் உடைந்தபோது உக்ரைன் தனி நாடாக உருவானது.

சோவியத் யூனியனிலிருந்து 7 லட்சத்து 80 ஆயிரம் படைவீரர்கள் கொண்ட ராணுவமும், அணு ஆயுதங்களும் உக்ரைனுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. உக்ரைன், உலகிலேயே அதிக அணு ஆயுதங்கள் கொண்ட மூன்றாவது வல்லரசாக மாறியது. அணு ஆயுதங்களை வைத்திருக்க விரும்பாத உக்ரைன் எல்லா அணு ஆயுதங்களையும் அழிப்பதற்காக ரஷ்யாவிடம் கொடுத்து, நான்கே ஆண்டுகளில் அணு ஆயுதமே இல்லாத தேசமாகிவிட்டது. உக்ரைன் மக்கள்தொகையில் ஐந்து பேரில் ஒருவர் ரஷ்ய இனத்தவர்.

நாட்டில் பெரும்பாலானவர்களுக்கு ரஷ்ய மொழி பேசத் தெரியும். ரஷ்ய ஆதரவாளராக இருந்த உக்ரைன் அதிபர் விக்டர் யனுகோவிச் 2013ஆம் ஆண்டு ஐரோப்பிய யூனியனுடன் இருந்த உறவைத் துண்டித்தார். உக்ரைன் மக்கள் வீதிக்க வந்து போராட, இந்தப் போராட்டத்தை அமெரிக்கா தூண்டிவிடுவதாக புதின் குற்றம் சாட்டினார். பல மாதங்கள் நீடித்த போராட்டத்தால் விக்டர் அரசு வீழ்ந்தது. விக்டர் ரஷ்யாவுக்கு ஓடினார். இதனால் புதின் உக்ரைன் மீது 2014ஆம் ஆண்டு படையெடுத்தார். அதன் தெற்கில் இருந்த கிரீமியாவை ரஷ்யாவுடன் இணைத்துக்கொண்டார். அந்த மோதலின் இரண்டாவது கட்டம் தான் இப்போதைய போர்.

ஜார் மன்னர் மகா பீட்டரை வியந்து போற்றுபவர் ரஷ்ய அதிபர் விளாதிமிர் புதின். இது பரவலாக அறியப்பட்டதுதான். ஆனால் இப்போது மகாபீட்டரைப் போன்றே தாம் செயல்படுவதாக இப்போது கருதத் தொடங்கியிருப்பதாகத் தெரிகிறது. மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பு மகா பீட்டர் நடத்திய போர்களுடன் இன்று தாம் நடத்திக் கொண்டிருக்கும் யுக்ரேனியப் போரை புதின் ஒப்பிடுகிறார், வெளிப்படையாகவே. பேரரசைக் கட்டியெழுப்பும் புதினின் திட்டம் யுக்ரேனுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

அண்டை நாடான எஸ்தோனியாவை எரிச்சலடைய வைத்திருக்கிறது. புதினின் கருத்துகளை "முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது" என்று எஸ்தோனியா கூறியிருக்கிறது. இளம் விஞ்ஞானிகள் மற்றும் தொழில்முனைவோரை சந்தித்து பேசியபோது, ஜார் மன்னர் மகா பீட்டர் பற்றிய தனது கருத்தை புதின் கூறினார். விஞ் ஞானிகளிடமும் தொழில்முனைவோரிடமும் அறிவியல் பற்றியும் தொழில் பற்றியும் பேசுவதற்கு முன்பாக புவிசார் அரசியல் ஆதிக்கம் தொடர்பான அவரது போரைப் பற்றிப் பேசினார். மகா பீட்டர் தமக்கு ஒரு முன்மாதிரி என்று அவர் கூறினார்.

18—ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மகா பீட்டர் நடத்திய வடக்குப் போர்களை புடின் குறிப்பிட்டுப் பேசினார். "அவர் ஸ்வீடனுடன் சண்டையிட்டு, அவர்களின் நிலங்களைக் கைப்பற்றினார் என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் அவர் எதையும் கைப்பற்றவில்லை; அவர் அதை மீட்டெடுத்தார்! மீட்பதற்கும் வலுப்படுத்துவதற்குமாக இது எங்களிடம் வீழ்ந்ததாகத் தெரிகிறது" என்று கூறிய புதின் ஒரு புன்னகையுடன் முடித்தார். யுக்ரேனையும் அங்கு அவர் நடத்தும் போரையும் புதின் குறிப்பிடுகிறார் என்பது இங்கு தெளிவாகப் புரிந்துவிடுகிறது.

சமீப காலமாக ரஷ்யாவின் கடந்த கால வரலாற்றை மேற்கோள்காட்டுவதையே புதின் வழக்கமாகக் கொண்டிருக்கிறார். இன்றைய காலகட்டத்துக்கு ஏற்றவாறு அதைப் பொருத்திப்

பேசுகிறார். யுக்ரேனைத் தாக்குவதற்கு பல மாதங்களுக்கு முன்பு, அவர் ஒரு பெரிய கட்டுரையைத் தயாரித்தார். அதில் அவர் நாட்டின் வரலாற்று உரிமையைப் பற்றி வாதிட்டார்.

பிப்ரவரி 24 அன்று ரஷ்யா யுக்ரேனை ஆக்கிரமித்தபோது அது ஒரு சிறப்பு நடவடிக்கை என்றுதான் போலியாகக் கூறினார் புதின். நாசிச ஒழிப்புக்கும், அச்சுறுத்தலைக் குறைப்பதற்கும் கிழக்கு டான்பாஸ் பகுதிக்கு மட்டுமானது என்று அப்போது தெரிவித்தார். ஆனால் அவர் இப்படிக் கூறிக் கொண்டிருந்தபோது, அவரது துருப்புக்கள் கியேவில் நோக்கி நகர்ந்து குண்டுவீசிக் கொண்டிருந்தன. 100 நாட்களுக்கும் மேலாக, உக்ரேனியப் பிரதேசத்தின் ஐந்தில் ஒரு பகுதி ரஷ்ய ராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. அங்கெல்லாம் ரஷ்யாவுடன் சேருவதற்கான வாக்கெடுப்பு பற்றி பேசும் பொம்மை நிர்வாகங்களே உள்ளன. இப்போது புதின் தனது "நடவடிக்கை" உண்மையில் ஓர் ஆக்கிரமிப்புதான் என்பதை ஒப்புக்கொள்ளும் அளவுக்கு துணிந்திருக்கிறார்.

தனது துருப்புகள் தரையில் உருவாக்குவதற்கு நடத்தும் போர் பற்றிய யதார்த்தத்தை மேற்கு நாடுகள் இறுதியில் ஏற்றுக்கொள்ளும் என்றும் அவர் நம்புகிறார். செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கை ரஷ்யாவின் புதிய தலைநகராக மகா பீட்டர் உருவாக்கியபோது ஓர் ஐரோப்பிய நாடு கூட அதை அங்கீகரிக்கவில்லை. ஆனால் இப்போது அதை எல்லோரும் ஏற்றுக் கொள்கிறார்கள் என்று குறிப்பிடுகிறார் புதின். ரஷ்யாவை நவீனப் படுத்துவதற்காக ரகசியமாக ஐரோப்பா முழுவதும் சுற்றுப் பயணம் செய்தவர் மகா பீட்டர்

மகா பீட்டரின் போர் பற்றிய புதினின் பேச்சால் பால்டிக் நாடுகள் கொந்தளித்திருக்கின்றன. இப்போது எஸ்தோனியாவில் உள்ள நார்வா மீது மகா பீட்டர் நடத்திய தாக்குதல் பற்றி சிலாகித்துப் பேசியதற்கு ரஷ்யத் தூதரை அழைத்து அந்த நாடு கண்டனம் தெரிவித்துள்ளது. வரலாற்றில் தேர்ந்தெடுத்த பகுதியை மட்டுமே புதின் பயன்படுத்துகிறார். மகா பீட்டர் ஒரு கொடுங்கோல் சர்வாதிகாரியாக அறியப்பட்டாலும், மேற்கத்திய சித்தாந்தங்களையும், அறிவியல், பண்பாடுகளையும் ஏற்றுக் கொள்ளக்கூடியவர். ஐரோப்பாவின் சாளரமாக செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கை உருவாக்கினார். ரஷ்யாவை நவீனப்படுத்தும் தாகத்தில் ஐரோப்பா முழுவதும் பயணம் மேற்கொண்டிருந்தார். ஆனால் புதினின் தொடர்ச்சியான அடக்குமுறை ஆட்சியில்

பீட்டர் உருவாக்கிய சாளரம் மெதுவாகத் மூடத் தொடங்கியது. யுக்ரேன் மீதான போர் மீதமிருந்ததையும் மூடிவிட்டது.

புடினின் அடக்குமுறை ஆட்சி அந்த சாளரத்தை மெதுவாக மூடித் தொடங்கியது; யுக்ரேன் மீதான போர் அதை முற்றிலுமாக அடைத்துவிட்டது. புதிய சிந்தனைகளைத் தேடி மகா பீட்டர் மேற்கொண்டது போன்ற பணத்தை புதின் மேற்கொள்வது இப்போது சாத்தியமில்லை என்றே தெரிகிறது. 18 ஆம் நூற்றாண்டின் ஜார் மன்னர் பற்றி இளம் தொழில்முனைவோருக்கு விளக்கும்போது, அவர்களுக்குப் பின்னால் சொற்கள் மின்னின: 'எதிர்காலம்', 'நம்பிக்கை', 'வெற்றி'. மேற்கத்திய எதிர்ப்புகளையும் பொருளாதாரத் தடைகளையும் எதிர்கொள்வது என்பதில் ரஷ்யா உறுதியாக உள்ளது.

ஆனால் வரலாற்றுப் புத்தகங்களிலிருந்து புதினுக்கு இன்னொரு பாடம் கிடைக்கலாம். மகா பீட்டர் பால்டிக் முதல் கருங்கடல் வரையிலான நிலத்தை கைப்பற்றினார். ஆனால் ரஷ்யா தொடங்கிய வடக்குப் பெரும் போர் 21 ஆண்டுகளாக நீடித்திருந்தது.

வாய்ச்சொல்லில் வீரர்கள்!

இந்திய விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்ட மகாகவி பாரதியார் அந்தத் தீவிரத்திற்கு முட்டுக்கட்டையாக இருந்த பலரையும் தன் கவிதைகளில் வசைபாடி இருக்கிறார். தன் காலத்தில் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தைப் போற்றிப் பாராட்டியவர்ககளைப் பற்றித் தனது படைப்புகளில் அவர் குறிப்பிடுவதைப் படிக்கிற வேளையில் வேதனையாக இருக்கிறது. ஆங்கிலேய அதிகாரிகளின் அடக்குமுறைச் சட்டங்கள், இந்திய நாட்டினுடைய வளர்ச்சிக்கு உறுதுணையானவை என்று நம் நாட்டவர்களே வரிந்து கட்டிக் கொண்டு ஆதரவு தெரிவித்த அந்த வேளையில் அவர்களை சினந்து சீறுகிறார்.

விடுதலைக்கு வேண்டிய காரியங்களில் அவர்கள் ஈடுபடுவதில்லை. அப்படி ஈடுபடுகிறவர்களுக்கு உதவுவதும் இல்லை. மாறாக அவர்கள் தாய்நாட்டிற்கு எதிராகவும் ஆங்கிலேயர்களுக்கு ஆதரவாகவும் செயல்படுவது பாரதியாருக்குப் பெருங்கோபத்தை ஏற்படுத்துகிறது. அவர்களைப் பார்த்து நடிப்புச் சுதேசிகள் என்று பெயரிட்டழைத்து,

நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத் திறமு மின்றி,
வஞ்சனை சொல்வா ரடீ! — கிளியே!
வாய்ச் சொல்லில் வீரரடி.
கூட்டத்தில் கூடிநின்று கூவிப் பிதற்ற லன்றி,
நாட்டத்தில் கொள்ளா ரடீ! — கிளியே!
நாளில் மறப்பா ரடீ” —என்று அவர்களின் இயல்பினைத் தனது பாடலில் அடையாளம் காட்டுகிறார்.

இன்றைக்கும் கூட இந்த வாய்ச்சொல் வீரர்கள் குறைந்தபாடில்லை. ஒரு நாட்டின் வளர்ச்சிக்குத் தேவையான திட்டங்களில் கவனம் செலுத்தாமல் சமுதாயத்திற்குத் தேவையில்லாத செய்திகளைச் சொல்லி மக்களைக் குழப்புவதோடு தேவையற்ற சர்ச்சைகளையும் இவர்கள் உண்டாக்கி விடுகிறார்கள்.

இந்தத் துறை, அந்தத் துறை என்றில்லாமல் எல்லாத் துறைகளிலும் இந்த வாய்ச்சொல் வீரர்கள் இன்றைக்கு வளர்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் உதிர்க்கிற கருத்துகளாலும் இவர்கள் தூண்டுகிற செயல்களாலும் சமூகத்திற்கு சிறிதளவேனும் நன்மை உண்டா என்று கேட்டால் இல்லை என்றுதான் பதில் சொல்ல முடியும்.

அதனினும் கொடிய துயரம், இவர்கள் வீசுகிற வாய்ச்சொற்களைப் பெரிதாகக் கருதிச் சமூக ஊடகங்கள் அதற்கு முக்கியத்துவம் தந்து விடுகின்றன. உடனே அதற்கு மறுப்பும் ஆதரவுமாக பல தரப்புகளிலிருந்தும் மீண்டும் வாய்ச்சொற்கள் முளைக்கத் தொடங்குகின்றன. இந்த வம்புகளால் சமூகத்தில் இயல்பாகச் செயல்படுகிறவர்களின்



கவனம் திசை திருப்பப்படுகிறது. அடுத்த தலைமுறையினர் குழப்பமடைகிறார்கள். இந்த வீரர்களின் வெற்று வாய்ச்சொற்கள் தீர்வு காண முடியாத பல சிக்கல்களை உருவாக்கி சமூகத்தைப் பிளவுபடுத்தும் தன்மை பொருந்தியவை.

நல்ல சொற்களுக்கு எத்தனை அதிகமான வலிமையும் நன்மையும் உள்ளதோ, அதைவிட அதிகமாகத் தாழ்ந்த சொற்களுக்குக் கொடுமையும் தீமையும் உண்டு. நேர்மைத் திறமில்லாதவர்களும் நெஞ்சில் துணிவில்லாதவர்களும் தாங்கள் கருதிய தீமைகளை எளிதில் அடைவதற்கும் சமூகத்தில் பிரிவினையைத் தூண்டுவதற்கும் இந்த வெற்றுச்சொற்களைப் பரப்புவதைத் தங்கள் செயலாகக் கொள்கிறார்கள் என்பது பாரதியாரின் கணிப்பு. இதற்குரிய சான்றுகளைத் தனது படைப்புகளின் பலவிடங்களிலும் எடுத்துக் காட்டுகிறார். 'விரைந்து கேட்க; மெல்லச் செல்லுக' எனும் பைபில் வாசகத்தைச் சுட்டிக் காட்டுகிற

முனைவர்
சொ. அருணன்

பாரதியார், இராமகிருஷ்ண பரமஹம்ஸர் கூறிய 'பிறர் குணதோஷங்களைப் பற்றித் தர்க்கிப்பதிலே பொழுது செலவிடுவோன், பொழுதை வீணே கழிக்கிறான். தன்னைப் பற்றி சிந்தனை செய்தாற் பயனுண்டு. ஈசனைப் பற்றி சிந்தனை செய்தாற் பயனுண்டு. பிறரைப்பற்றி யோசித்தல் வீண். வாதாடுவதனால் பிறன் தனது பிழைகளை அறிந்து கொள்ளும்படி செய்ய முடியாது. தெய்வத்தின் திருவருள் ஏற்படும்போது, அவனவன் பிழைகளை அவனவன் தெரிந்துகொள்ளுவான்' என்னும் அற்புதக் கருத்தினையும் பொருந்தக் காட்டுகிறார்.

மேலும், ஹெர்மஸ் என்ற புராதன மிசிர (எகிப்து) தேசத்து ஞானியின் 'மகனே, விவாதத்திலே நேரங்கழித்தல் நிழலுடனே போராடுவதற்கு நிகராகும்' என்னும் அற்புத வாக்கையும் நமக்கு உணர்த்துகிறார். ஸொக்ராதெஸ் என்ற கிரேக்க ஞானி கூறுவதாக, 'அறியாதார் பேச்சை நிறுத்தினாற் கலக மில்லை' என்பதையும் அறிவுறுத்துகிறார்.



மேலும், 'எல்லாவித அலங்காரங்களும் உவமையணியின் விஸ்தாரங்களைத் தவிர வேறென்றுமில்லை; உபமாலங்காரமே அலங்கார சாஸ்திரத்தின் பிராணன் என்று பழைய இலக்கணக்காரர் சொல்லுகிறார்கள்' என்று குறிப்பிடும் பாரதியார், 'பிரான்ஸ் தேசத்தில் மஹாகீர்த்தி பெற்று விளங்கிய நெப்போலியன் சக்ரவர்த்தியின் மதம் அப்படியன்று. 'உவமையணி விரிவணி ஒன்றும் பெரிதில்லை. புனருக்தி (மீட்டுரை) தான்



மேலான அலங்காரம். அதாவது, நம்முடைய ககூஷியைத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டேயிருக்க வேண்டும். எதிராளி சொல்லும் பேச்சைக் கவனிக்கவே கூடாது. நம்முடைய ககூஷியை ஓயாமல் சொல்லவேண்டும். அடிக்கடி எந்த வார்த்தை சொல்லுகிறோமோ அந்த வார்த்தை மெய்யாய்ப் போகும்' என்று நெப்போலியன் சொல்லியதாக ஒரு கதை. லௌகீக காரியங்களிலே இது நல்ல உபாயம். நம்முடைய நியாயத்தைச் சொல்லிக்கொண்டே இருக்கவேண்டும். திரும்பத் திரும்பச் சொல்லுவதனால், பொய் கூட மெய்யாகத் தோன்றும்படி செய்துவிடலாம்' என்று நெப்போலியன் கதையையும் சான்று காட்டுகிறார்.

மாணிக்கவாசகர் இதனை 'பொய்யர்தம் மெய்' என்கிறார். பொய்யை மெய்யாகச் செய்கிற வித்தையை மேற்கொள்பவர்களையே பாரதியார் 'வாய்ச்சொல் வீரர்கள்' என்கிறார் போலும். இந்த அடையாளத்தைக் காண்பதற்கு பாரதியாருக்கு வழிகாட்டியவர் திருவள்ளுவர்தான். இனியவை கூறலில் தொடங்கி, புறங்கூறாமை, பயனில சொல்லாமை, வாய்மை, சொல்வன்மை என்று வெளிப்படையாக சொல்லின் வலிமையை விளக்கும் திருவள்ளுவர், ஏனைய பல அதிகாரங்களிலும் சொல்லினைக் குறித்துச் சுட்டத் தவறவில்லை. அதைப்போலவே பாரதியாரும் வள்ளுவரின் அமுதனைய கருத்துகளான, 'யாகாவா ராயினும் நாகாக்க' 'சொல்லிற் பயனுடைய சொல்லுக' என்பன போன்ற மொழிகளையும் பல இடங்களில் குறிப்பிட்டுக் காட்டுகிறார்.

வள்ளுவரைப் பின்பற்றியே, 'பொய்யே குறளை கடுஞ் சொல் பயன் இல் சொல் எனச் சொல்லில் தோன்றுவ நான்கும்' என பொய், புறங்கூறல், கடுஞ் சொல், பயனற்ற சொல் என்று நால்வகைக் குற்றங்கள் சொல்லிலே தோன்றுவன' என்கிறது மணிமேகலை. முன்னிருக்கும் மூன்றையும் இணைத்துப் பேருருக் கொள்வதே நான்காவதாகிய பயனற்ற சொல் என்பது அதன் உட்கருத்து.

சொற்களைக் குறித்துப் பலவாறு கூறுகிற திருவள்ளுவர், நயனற்ற சொற்களைச் சொன்னாலும் பரவாயில்லை. பயனற்ற சொற்களைச் சொல்லாதது அறம் என்பதாய்,

'நயனில சொல்லினும் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று' —என்று தீர்ப்பளிக்கிறார். நன்மையும் அழகும் இல்லாத சொற்களைச் சொன்னாலும் கூட, பயனேதும் இல்லாத வெற்றுச் சொற்களைச் சொல்லாதது சான்றோருக்கே நன்மையுடையதாம் என்றால் மற்றவர்க்குத் தனித்துச் சொல்ல வேண்டுமா என்ன?

வெற்றுப் புகழ் மொழிகளும் கூடப் பயனற்ற சொற்களே. பொதுவாக 'கவிதைக்கு பொய்யழகு'





என்று ஒரு பொய்மொழி வழக்கில் இருக்கிறது. அதிலும் மன்னரைச் சார்ந்து அவரிடம் பொருள் பெறும்போது அவரைப் பொய்யாய்ப் புகழ்வது சிலரது வழக்கம். ஆனால் அவ்வாறு பொய்யாய் புகழ்பவர்கள் மெய்ப்புலவர்கள் அல்லர்.

சங்கப் புலவர் வரிசையில் சேர்ந்த வன்பரணர் என்பவர் தமக்கு மட்டும் அல்லாமல் தம்மோடு சேர்ந்த தமிழ்ப் புலவர் அனைவருக்குமாக ஓர் உண்மையைப் புகட்டுகிறார். தமிழ்ப் புலவர்கள் ஒருகாலும் பொய் கூறுவதில்லை என்பதுதான் அது. பெரிய அரசர்களிடத்து அவர்கள் தரும் பரிசிலைக் கருதியே புலவர்கள் சென்றாலும், அவ்வரசர்கள் செய்யாதவற்றையெல்லாம் மிகுத்துக் கூறிப் பொய்யாய்ப் புகழுதல் அப்புலவர்கட்குரிய பண்பு ஆகாது என்பது வன்பரணர் உணர்த்தும் கருத்து.

பீடுஇல் மன்னர் புகழ்ச்சி வேண்டிச்
செய்யா கூறிக் கிளத்தல்
எய்யாது ஆகின்றுஎம் சிறுசெந் நாவே (புறம்—148)

'பிறருக்கு வாரி வழங்கும் பெருமை இல்லாத அரசரைப் புகழ வேண்டி அவர் செய்யாதனவற்றைச் செய்ததாகக்கூறி அவர் குணங்களைக் கூறுதலை அறியாது எம்முடைய சிறிய செம்மையான நாக்கு' என்பது இந்தப்பாடலின் பொருளாகும்.

புலவருடைய நாவானது மற்றவருடைய நாவினைப் போலத் துணிந்து பொய் கூறாமையின், செம்மையான நா என்கிறார் வன்பரணர். ஆனால், தாமும் ஒரு புலவராதலால் புலவர்களுடைய நாவின் பெருமையை எடுத்துக் கூறும்பொழுதும் தற்புகழ்ச்சி ஏற்பட்டுவிடாமல் இருப்பதற்காக 'சிறு' என்ற அடைமொழி தந்து 'சிறு நா' என்று அடக்கத்துடன் கூறிக்கொள்கிறார்.

வன்பரணர் போன்ற பெரும் புலவர்களும் தற்பெருமை கொள்ளாமல் இவ்வளவு அடக்கத்துடன் தம்மைப்பற்றிக் கூறிக் கொள்வதானால், அத்தகைய புலவர்கள் வாழ்ந்த இனத்தின் பெருமையை எவ்வாறு கூறுவது? பாரதியார் ஏன் 'வாய்ச்சொல் வீரர்' என்று மொழிந்தார் என்பது இப்போது புரிகிறது.

'வயது ஆக ஆக தலைமுடி நரைத்துப் பற்கள் விழுவதற்கு பதிலாக, நாக்கே விழுந்துவிடுமாறு ஏற்பாடு செய்தால், நாட்டில் குழப்பமே இருக்காது' என்றார் அறிஞர் ஒருவர். மகாகவி பாரதியார் சுட்டிய இந்த 'வாய்ச்சொல் வீரர்கள்' மட்டும் திருந்திவிட்டால் நமது நாட்டின் பாதி பிரச்னைகள் தீர்ந்து விடுமே! அவர்கள் திருந்துவார்களா?

அரசியல்

பொன்னியின் செல்வர்கள் நாம்! – என்ன செய்யப்போகிறோம்?

உலக வரலாற்றில் மிக நீண்ட நதிநீர் தாவாவாக காவிரிப் பிரச்சினை மாற்றப்படுகிறது. 3,600—க்கும் மேற்பட்ட நதிநீர் ஒப்பந்தங்கள் இதுவரை உலகில் கணக்கிடப்பட்டிருக்கின்றன. 10 ஐரோப்பிய நாடுகள் டான்யூப் ஆற்றின் தண்ணீரைத் தமக்குள் சச்சரவின்றிப் பகிர்ந்துகொள்கின்றன.

ஏன்? இந்தியாவே பாகிஸ்தானுடன் 1960—ல் சிந்து நதி நீர் உடன்படிக்கையின் மூலமும், 1996—ல் வங்கதேசத்துடன் பராக்கா நதிநீர் உடன்படிக்கை மூலமும் பிரச்சினைக்குத் தீர்வுகண்டிருக்கிறது. காவிரிப் பிரச்சினைக்கோ முடிவு தொடுவானமாக விரிகிறது.

16.02.2018—ல் உச்ச நீதிமன்றம் காவிரி வழக்கை முடித்து வைத்தது. இப்போது எழுந்துள்ள பிரச்சினை, உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பைச் செயல்படுத்த அமைக்கப்பட்ட காவிரி மேலாண்மை ஆணையத்தால் உருவானது எனலாம்.

கீழ்ப் படுகை நாடுகளுக்கான பங்கு உலகெங்கும் குறைக்கப்பட்டதில்லை. ஆனால், சுதந்திர இந்தியாவில் தமிழ்நாட்டுக்கோ 20.5, 192 டிஎம்சி என்கிற அளவுகள் 177.25 டிஎம்சியாகக் குறைக்கப்பட்டது. (சுதந்திரத்துக்கு முன் தமிழகம் 500—க்கும் அதிகமான அளவு டிஎம்சி தண்ணீரைப் பெற்றுக்கொண்டிருந்தது.) உச்ச நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பில் பெங்களூருவின் குடிநீர்த் தேவைக்கு 4.75 டிஎம்சி என்ற அளவில்

இந்த முறை பிரச்சினையின் கர்த்தாவாகக் காவிரி மேலாண்மை ஆணையமே அமைகிறது. 02.06.1990—ல் காவிரி நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது. 25.06.1991—ல் அது தன் இடைக்கால உத்தரவை வழங்கியது. 05.02.2007—ல் இறுதி உத்தரவை நல்கியது.

19.09.2013—ல் அது அரசிதழிலும் வெளிவந்தது. சில மாற்றங்கள் தீர்ப்பில் செய்யப்பட்டன.

ஆனால், அதற்காக 67.14 டிஎம்சி தண்ணீரைத் தேக்கும் அளவுக்கு ரூ.9,000 கோடி செலவிலான மேகேதாட்டு அணை திட்டத்தை கர்நாடகம் தீட்டும் என்று உச்ச நீதிமன்றம் கனவுகூடக் கண்டிருக்காது. இதற்காக 4,996 ஹெக்டேர் நிலத்தை கர்நாடக அரசு கையகப்படுத்தும் என்றும் அதில் 4,800

சதுரங்கம்

வெ.ஜீவகுமார்

ஹெக்டேர் நிலம் வனத் துறையினதும் அடங்கும் என்பதும் திகிலான தகவல்கள். புள்ளிமான்களும் ஏனைய விலங்குகளும் பறவைகளும் தங்கள் வாழ்விடத்தையும் வாழ்வாதாரத்தையும் இழக்கும் நிலையை கர்நாடக அரசு ஏற்படுத்துகிறது.

கர்நாடக அரசின் நிலைப்பாட்டுக்கு கர்நாடகத்திலேயே எதிர்ப்புகள் வருகின்றன. வனமும் வனத்தில் வாழும் உயிர்களும், சுற்றி உள்ள கிராமங்களில் 10,000—த்துக்கும் அதிகமான பழங்குடிகளும் பட்டியலினத்தவரும் தங்கள் வசிப்பிடத்தை இழக்க நேரிடலாம். மாண்டியா மாவட்டத்தின் 5 கிராமங்கள் முற்றிலும் மூழ்கும் நிலை ஏற்படுகிறது. மேலும் உயிரிச் சங்கிலியையும் காவிரி ஆற்றையும் கடுமையாகப் பாதிக்கும் இத்திட்டத்தை கர்நாடக அரசு கைவிட வேண்டும் என்று சூழலியலாளர் மேதா பட்கர் கூறியுள்ளார்.

குடிநீர்த்தேவை என்பதைக் கணக்கில் கொண்டால், பெங்களூருவின் இப்போதைய மக்கள்தொகை 1.30 கோடி, அங்கு பயன்படுத்தப்படும் தண்ணீரின் அளவு ஒரு நாளைக்கு 145 கோடி லிட்டர் ஆகும். இதே விகிதத்தில் போனால், 2031—ல் பெங்களூருவின் மக்கள்தொகை 2 கோடியாகவும் அப்போதைய தண்ணீர்த் தேவை 4,000 எம்.எல்.டி.யாகவும் அதிகரிக்கும். ஒரு சொட்டுத் தண்ணீரைக்கூட தமிழகத்துக்கு விட மாட்டோம் என்ற கர்நாடகத்தின் சபதத்தை நிறைவேற்றத்தான் மேகேதாட்டு அணைத் திட்டமோ என்ற ஐயம் எழுகிறது.

சந்தடி சாக்கில் 400 மெகாவாட் மின்னுற்பத்திக்கான பணிகளையும் அங்கே கர்நாடகம் செய்கிறது. கர்நாடகத்தின் திட்டம் சர்வதேச நிறுவனங்களின் மெகா திட்டங்களுக்கு உதவிசெய்வதுதான் என்று மேதா பட்கர் கூறியிருக்கிறார். காவிரி

நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பிலும், உச்ச நீதிமன்றம் அதனை உறுதிப்படுத்தியதன் அடிப்படையிலும் பாசனத் தேவைகளைப் புறம்தள்ளி, மின்திட்டங்களுக்கு அனுமதி வழங்கக் கூடாது என்று தெளிவாக உள்ளது. மருந்தே வியாதியான கதைதான் காவிரி மேலாண்மை ஆணையம். கர்நாடகத்திலுள்ள ஹேமாவதி, கபினி, ஹேரங்கி, கிருஷ்ண ராஜசாகர் அணைகள், தமிழகத்திலுள்ள கீழ் பவானி, அமராவதி, மேட்டூர் மற்றும் கேரளத்தின் பாணாசுர சாகர் அணை ஆகியவற்றின் சாவிகளை வாங்கி தண்ணீர்ப் பங்கீட்டை ஒழுங்குபடுத்தும் என்ற எதிர்பார்ப்பே இருந்தது. காவிரி மேலாண்மை வாரியமோ இந்த திசையில் ஒரு அடிகூட நகரவில்லை.

மாறாக, மேகேதாட்டு என்ற அணைக்கட்டுப் பிரச்சினைக்கு உயிர்கொடுத்துத் தன் கூட்டத்தின் அஜெண்டாவாக ஆக்கி சீவி சிங்காரிக்கிறது. இதற்காக மத்திய அரசின் சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தாவின் சட்ட நிபுணத்துவத்தையும் கேட்டுப்பெற்றுள்ளது.அவரும் 'உங்களுக்கு அகண்ட அதிகாரங்கள் உண்டு' என்று ஒரு வாள் வழங்கிவிட்டார். இச்சூழல், தமிழகத்தை மீண்டும் உச்ச நீதிமன்றக் கதவுகளைத் தட்டவைத்திருக்கிறது. முன்னொரு காலத்தில் காவிரி நடுவர் மன்றத்தின் தலைவராக சித்ததேவ் முகர்ஜி இருந்தார்.

அவரின் அணுகுமுறையில் கர்நாடகத்துக்குச் சந்தேகம் வந்தது. இந்தப் பதவியில் சித்ததேவ் முகர்ஜி நீடிக்கக் கூடாது என்று அப்போதைய கர்நாடக முதல்வர் தேவேகவுடா கர்நாடக உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். 1996—ல் முகர்ஜியே தனது பதவியை ராஜினாமா செய்தார்.

இப்போதைய காவிரி மேலாண்மை ஆணையத்தின் தலைவராக இருக்கும் எஸ்.கே. ஹல்தார் மேகேதாட்டு அணை விஷயத்தில் காட்டும் அதீத ஆர்வத்தைச் சுட்டிக்காட்டி, தமிழகத்தின் விவசாய அமைப்புகள் சந்தேகம் எழுப்புகின்றன. கர்நாடகத்தின் புதிய ஆயுதமாக காவிரி மேலாண்மை வாரியம் ஆடைதரிக்கிறது.

கீழ் மாநிலங்களுக்குத் தண்ணீர் வழங்கும் இடத்தில் கர்நாடகத்தைக் கடவுள் வைத்துள்ளார்; கர்நாடகம் பெரிய அண்ணனாக நடந்துகொள்கிறது என்று காவிரி வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்ற நீதிபதி ஜெயின் ஒருமுறை கூறினார். ஆந்திரம், மஹாராஷ்டிரம், கோவா ஆகியவற்றோடும் கர்நாடகம் நதிநீர் தாவாக்களில் மோதுகிறது.

கர்நாடகத்தை ஆளும் பாஜகவும், மேகேதாட்டு அணை திட்டத்தை நிறைவேற்றியாக வேண்டும் என 150 கி.மீ. பாதயாத்திரை நடத்தி நிர்ப்பந்திக்கும் காங்கிரஸ் கட்சியும் தமிழகத்துக்கு எதிராக அங்கு ஓரணியில் நிற்கின்றன.

மத்திய அரசிலும் கர்நாடகத்திலும் ஒரே கட்சிதான் ஆளும் கட்சி. ஆனால், பிரச்சினையைத் தீர்க்க அவர்கள் முனையவில்லை. 1892 காவிரி ஒப்பந்தப்படி, மேகேதாட்டு அணை போன்ற திட்டங்களுக்குத் தமிழக அரசு அனுமதி மறுக்க முடியாது என்று மத்திய அரசின் ஜல்சக்தி துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் ஒருமுறை நாடாளுமன்றத்தில் கூறினார்.

மத்திய அரசின் நீராற்றல் துறை மேகேதாட்டு அணைத் திட்டத்தை உற்சாகப்படுத்துவதாகவே தெரிகிறது. உள்ளபடியே நடுவர் மன்றத் தீர்ப்புப்படி ஜூன் மாதத்திலிருந்து செப்டம்பர் வரையில் கர்நாடகம் தண்ணீர் தருவதில்லை. மாறாக, வானமே கருணை கூர்ந்து மழையைக் கொடையாக அனுப்புகிறது.

இவை ஒருபுறம் இருக்க, தமிழக அரசோ காவிரிப் பிரச்சினையில் போதிய விழிப்பின்றி உள்ளது. மேகேதாட்டு அணைத் திட்டத்துக்கு சென்னை பசுமைத் தீர்ப்பாய அமர்வு தடைவிதித்தது. பசுமைத் தீர்ப்பாயத்தின் டெல்லி அமர்வு அதிகாரம் இல்லாமலே அந்தத் தடையை நீக்கியது.

இதுகுறித்தும் தமிழக அரசின் சட்டபூர்வமான நடவடிக்கைகள் போதுமான அளவில் இல்லை. இரண்டு மாநிலங்களும் மாறிமாறி சட்டமன்றங்களில் இயற்றும் கண்டனத் தீர்மானங்களை மத்திய அரசு ஒரு பார்வையாளராக இருந்து ரசிப்பதைப் போலவே தெரிகிறது.

கர்நாடகத்தின் பாசனப் பரப்பு 9.96 லட்சம் ஹெக்டேரிலிருந்து 38.25 லட்சம் ஹெக்டேர் என்ற அளவில் அதிகரித்துள்ளது. தமிழகமோ கடந்த 48 ஆண்டுகளில் மொத்தம் 15.87 லட்சம் ஹெக்டேர் நிலம் சாகுபடிப் பரப்பை இழந்துள்ளது. தமிழகத்தில் 1.5 கோடி பேரின் குடிநீர்த் தேவையையும் 28 லட்சம் ஏக்கர் விவசாய நிலத்தின் தேவையையும் காவிரி இப்போது பூர்த்திசெய்கிறது. எதிர் காலத்தில் என்ன கதியாகுமோ என்ற அச்சம் எழுந்துள்ளது.

பல்லாயிரம் ஆண்டுகளாகத் தமிழ் நிலத்தை நனைத்த காவிரி நதி, தன் இன்சுவையை இழந்து உப்புகரித்துத் தலை கவிழ்ந்து ஓடுகிறது. 1902—03 முதலிய ஆண்டுகளில் இந்தியாவில் பொன்னி நதிதான் நெற்களஞ்சியமாக இருந்தது என்று ஆங்கில எழுத்தாளர்கள் எழுதுகின்றனர்.

யாரெல்லாம் போதுமான தண்ணீர் இல்லாத இடங்களில் வாழ்கிறார்களோ, எங்கெல்லாம் மாசு படிந்த தண்ணீர் ஓடுகிறதோ அங்கெல்லாம் உலகின் ஏழைகள் வசிக்கின்றனர் என்று கூறுவார்கள். தமிழகம் அந்த நிலைக்குத் தள்ளப்படுவதைப் பொன்னியின் செல்வர்களாகிய நாம் பார்த்துக் கொண்டிருக்கலாமா?

VARSHA™

Ready to Cook

Made with Quality Natural Products

Idli / Dosa Wet Mix

ఇడ్లీ దోస పిండి

இட்லி / தோசை மாவு

ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು

ഇഡ്ഡലി / ദോശ മാവ്

100% Pure Vegetarian

ઈડલી ડોસા નું ખીરું

इडली/ दोसा आटा

கச்சத்தீவு

கச்சத்தீவுக்கொரு தீர்வு காண்போம்!

தமிழ்நாட்டின் கச்சத்தீவை இந்திய அரசு இலங்கைக்குக் கொடுத்து விட்டதால் தமிழ்நாட்டுக் கடலோர மீனவர் சமுதாயம் பேரிழப்பிற்கு ஆளாகிறது. இலங்கையிடமிருந்து கச்சத்தீவை மீட்க இதுவே தக்க தருணம்.

இலங்கை முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு இப்போது பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. இந்தியா எப்போதும் போல இப்போதும் ஆதரவு கரம் நீட்டி நிற்கிறது. துன்பம் நேரிட்டால் துணை நிற்பது மனிதநேயம் என்பது சரிதான். ஆனால், மனிதநேயம் கொண்டவர்களுக்கு துணைநிற்பது என்பது அதைவிட சரியானது.

இலங்கையின் நெருங்கிய அண்டை நாடாக பல நூற்றாண்டு கால உறவு இந்தியாவுக்கு உள்ளது. அங்கு மக்களாட்சி, நிலைத்த தன்மை, பொருளாதார மீட்சி திரும்பிட இந்தியா தனது முழுமையான ஆதரவை அளிக்கிறது. அதற்காக கடந்த மாதம் ரூ. 11,400 கோடி நிதியுதவியை இந்தியா வழங்கியது. மேலும் மருந்து, உணவுப் பொருள்களையும் இலங்கைக்கு அனுப்பியது. தமிழக அரசும் தனது பங்கிற்கு ரூ. 45 கோடி அளவில் உதவிப் பொருட்களை அனுப்பி வைத்தது.

இந்திய அரசாங்கத்தினால் "நட்பு நாடு' என்று கூறப்படும் இலங்கை, தமிழ்நாட்டு மீனவர்களை நாள்தோறும் வேட்டையாடுகிறது. இதுவரை ஆயிரக்கணக்கான மீனவர்கள் உயிரிழந்துள்ளனர். அவர்களை தொழில் செய்ய விடாமல் பிடித்து, அடித்து, அவமானப்படுத்தி சிறைபிடிக்கிறது. நம் மீனவர்களின் வாழ்வாதாரம் பறிக்கப்படுவதை இன்னும் எத்தனை காலம் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருப்பது?

2022 ஆங்கிலப் புத்தாண்டு மற்றும் பொங்கல் திருநாள் சமயத்தில் 68 தமிழக மீனவர்கள் இலங்கைச் சிறையில் கைதிகளாக அடைக்கப்பட்டிருந்தனர். இராமேஸ்வரம் மண்டபம் பகுதியிலிருந்து மீன் பிடிக்கச் சென்ற 43 மீனவர்களை இலங்கை கடற்படையினர் சிறைபிடித்துள்ளனர். இதே போல் புதுக்கோட்டை, தூத்துக்குடி மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்களை படகுகளுடன் அடுத்தடுத்த நாள்களில் சிறைபிடித்துச் சென்றனர்.

உயர்நீதிமன்றம் உத்தரவிட்டும், மத்திய அரசு முயற்சி மேற்கொண்டும் விழா நாள்களில் அவர்கள் விடுதலை செய்யப்படவில்லை. தமிழக அரசுத் தரப்பில், "கைது செய்யப்பட்ட மீனவர்கள் மீன்பிடித் தொழில் செய்பவர்களே தவிர, தீவிரவாதிகள் இல்லை. அவர்கள் காரணமின்றி துன்புறுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்' என்று கூறப்பட்டது.

கடந்த ஆண்டில் மட்டும் இலங்கை கடற்படையினர் 19 முறை நம் மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். பல படகுகள் அழிக்கப்பட்டு ஐந்து மீனவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதுவரை 73 படகுகளை பறிமுதல் செய்துள்ளனர். அவற்றைத் திருப்பித்



யாருக்கு?

உதயை மு. வீரையன்

தரவில்லை. அன்று முதல் இன்று வரை, தமிழக முதல்வர்கள் இந்திய பிரதமர்களுக்கு கடிதம் எழுதிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

மத்தியில் அன்று காங்கிரஸ் ஆண்டது. இப்போது பாஜக ஆள்கிறது. ஆனாலும் எந்த மாறுதலும் இல்லை. நிலைமை அப்படியே தொடர்கிறது. நமது மீனவர்கள் இலங்கை கடற்படையால் தாக்கப்படும்போதுதான் கச்சத்தீவு கவனத்துக்கு வருகிறது. கச்சத்தீவு நமது கட்டுப்பாட்டில் இருந்தபோது நம் மீனவர்கள் தாக்கப்படவில்லை. கச்சத்தீவு இலங்கைக்கு கைமாறிய பிறகுதான் இலங்கைக் கடற்படைக்கு துணிச்சல் வந்திருக்கிறது.

கச்சத்தீவு இந்தியாவின் ஒரு பகுதி. நாட்டின் எந்தவொரு பகுதியையும் வேறு நாட்டிற்கு விட்டுக் கொடுப்பதென்றால், இந்திய அரசியல் சட்டம் 368—ஆம் பிரிவின்படி நாடாளுமன்றத்தில் விவாதித்து, ஒப்புதல் பெற்று அதற்கான சட்டம் இயற்றப்பட வேண்டும்.

இந்த தீவு விஷயத்தில் எந்த விதிமுறையும் பின்பற்றப்படவில்லை. 1974—ஆம் ஆண்டு இந்திய அரசு ஓர் ஒப்பந்தத்தின் வாயிலாக இலங்கைக்கு கச்சத்தீவைக் கொடுத்து விட்டது. நாடாளுமன்றத்தில் ஒப்புதல் பெறாத காரணத்தால் இந்த ஒப்பந்தம் செல்லாது என்று தமிழ்நாட்டின் சார்பாக 1991—ஆம் ஆண்டு அப்போதைய முதலமைச்சர் ஜெயலலிதா உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருந்தார்.

உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசு எழுத்துபூர்வமாக

பிரமாண பத்திரம் தாக்கல் செய்துள்ளது. அதில் "கச்சத்தீவு எந்த நாட்டுக்கும் சொந்தமில்லாமல் இருந்தது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கச்சத்தீவுக்கு யார் உரிமை கொண்டாடுவது என்ற பிரச்னை இந்தியா — இலங்கை இடையே நீடித்து வந்தது. அதைத் தொடர்ந்து இந்திய—இலங்கை

கடற்பகுதியில் சர்வதேச எல்லைக் கோட்டை நிர்ணயித்தபோது கச்சத்தீவு இலங்கை வரம்புக்குள் சென்று விட்டது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

"அந்தத் தீவைச் சுற்றியுள்ள கடற்பகுதியின் மீன்பிடிக்கும் உரிமை தமிழ்நாட்டுக்குக் கிடையாது. இருந்தபோதும் மீன் பிடிக்கும்போது இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்படும் தமிழக மீனவர்களை விடுவிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது' என்றும் பிரமாண பத்திரத்தில் மத்திய அரசு குறிப்பிட்டுள்ளது.

கச்சத்தீவு யாழ்ப்பாணத்திலிருந்து 70 கி.மீ. தொலைவிலும், இராமேஸ்வரத்திலிருந்து 18 கி.மீ. தொலைவிலும் இருக்கிறது. இதன் மொத்தப் பரப்பளவு 1.15 கி.மீ. புனித அந்தோணியார் திருக்கோயில் மட்டுமே அங்கே இருக்கிறது. வேறு எவ்விதக் கட்டுமானமும் இல்லை. 1974—ஆம் ஆண்டு இந்திய பிரதமராக இந்திரா காந்தியும், இலங்கை பிரதமராக சிறிமாவோ பண்டாரநாயகவும் இருந்தபோது இந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

அப்போதைய இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஸ்வரண்சிங் 1974 ஜூலை 23 அன்று கச்சத்தீவை இலங்கைக்குக் கொடுத்துவிட இந்தியா முடிவெடுத்து விட்டதை நாடாளுமன்றத்தில் அறிவித்தார். 1976—இல் மீண்டும் ஒருமுறை இது தொடர்பாக இலங்கையுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

இந்திய — இலங்கை கடற்பகுதியில் சீனாவின் ஆதிக்கத்தை ஒடுக்குவதற்கு கச்சத்தீவைக் கொடுத்து சிறிமாவோ பண்டாரநாயக இலங்கையில் செல்வாக்கு பெற்று பதவியில் நீடிப்பதற்காக இந்திரா காந்தி எடுத்த ராஜதந்திர முடிவு என்றும், 40 ஆண்டுகள் கழித்து தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள் குரல் எழுப்புகின்றன என்றும் அப்போது ஆளும் தரப்பில் கூறப்பட்டது.

தமிழ்நாட்டில் அப்போது திமுகதான் அதிகாரத்தில் இருந்தது. திமுக தலைவர் மு. கருணாநிதியே முதலமைச்சராகவும் இருந்தார். அப்போது திமுக — காங்கிரஸ் கூட்டணி வலுவாகவே இருந்தது. இருந்தும் மாநில அரசின் ஒப்புதல் இன்றி மத்திய அரசே ஒரு தரப்பாக முடிவெடுத்தது. இலங்கை நட்பு நாடு என்ற முறையில் கச்சத்தீவை இலங்கைக்குத் தாரை வார்த்தது.

அதன் தொடர்ச்சியாகவே இப்போது இந்த பிரச்னை எழுந்துள்ளது. மாநில அரசு மத்திய அரசிடம் விண்ணப்பம் வைத்துள்ளது. இந்தியாவின் தயவை எதிர்பார்க்கும் ஒரு நாடு இந்தியாவின் வேண்டுகோளை மறுதலிக்காது என்று எதிர்பார்க்கின்றனர்.

கச்சத்தீவு தமிழ்நாட்டின் இராமநாதபுரம் பகுதியை ஆண்ட சேதுபதிகளுக்கு வருவாய் தரும் தீவாக முன்பு இருந்தது. 1947—இல் ஜமீன்தாரி ஒழிப்பு சட்டம் வரும் வரை அது அவர்களது ஆட்சியில்தான் இருந்தது. இதற்கு ஆதாரங்களும், ஆவணங்களும் உள்ளன.

இந்தத் தீவு முத்துக் குளிக்கவும், மூலிகைச் செடி, கொடி, வேர்களைக் கொண்டு வரவும், மீன்பிடித் துறையாகவும் பயன்பட்டு வந்தது. அந்தத் தீவினை சேதுபதிகளே குத்தகைக்கு விட்டு வருவாய் பெற்று வந்தனர். இவ்வாறு இராமநாதபுரம் சேதுபதிகளின் ஆட்சியில் கச்சத்தீவு இருந்து வந்தது என்பதற்கு 1822 முதல் வரையறையான சான்றுகள் உள்ளன.

சேதுபதிக்கு 69 கடற்கரை ஊர்களும், 8 தீவுகளும் உரிமை உடையனவாய் இருந்தன. அந்த எட்டு தீவுகளில் ஒன்றுதான் கச்சத்தீவாகும். 1822ஆம் ஆண்டு ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி, சேதுபதியிடம் 69 கடற்கரை ஊர்களில் வணிகம் செய்யவும், தீவுகளைப் பயன்படுத்திக் கொள்ளவும் ஒப்பந்தம் செய்துகொண்டிருந்தது.

இந்திய அரசோடு இராமநாதபுரம் சமஸ்தானம் இணைந்தபோது இராமநாதபுரம் மன்னருக்கு சொந்தமான கச்சத்தீவும் இந்தியாவோடு சேர்ந்துவிட்டது. இந்த உண்மைகளையெல்லாம்

மறைத்து விட்டு, கச்சத்தீவு இலங்கைக்கே சொந்தமானது என்று உச்சநீதிமன்றத்திலேயே இந்திய அரசாங்கம் கூறியுள்ளது.

இலங்கையின் வெளியுறவு அமைச்சர் ஜி.எல். பெரிஸ், புதுதில்லி வந்தபோது செய்தியாளர்களை

இந்திய அரசு, 1974—ஆம் ஆண்டு இலங்கைக்கு தூக்கிக் கொடுத்து விட்டது. அப்போது முதலே மீனவர்களின் பிரச்னை தொடங்கி விட்டது.

1974—ஆம் ஆண்டு ஒப்பந்தம் கச்சத்தீவை இலங்கைக்கு அளித்தது. 1976—ஆம் ஆண்டு

சந்தித்தார். "கச்சத்தீவை இலங்கை வசம் ஒப்படைக்கும் ஒப்பந்தத்தில் முறைப்படி அப்போதைய இந்திய பிரதமர் இந்திரா காந்திதான் கையொப்பமிட்டுள்ளார். அதன்படி சர்வதேச எல்லைக்குட்பட்ட கச்சத்தீவு இலங்கையின் கட்டுப்பாட்டில் உள்ளது. ஒப்பந்தத்தில் இலங்கை மீனவர்களுக்கும் இலங்கைக்கும் கச்சத்தீவில் உள்ள உரிமைகள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த விஷயத்தில் இந்திய அரசின் நிலை தெளிவாக உள்ளது. எனவே கச்சத்தீவை இந்தியாவிடம் திரும்ப ஒப்படைக்கும் பேச்சுக்கே இடமில்லை' எனத் தெரிவித்தார்.

இந்திய அரசின் பிரமாண வாக்குமூலம் இதையும் விஞ்சி விட்டது.

மீனவர் பிரச்னை தலைதூக்கும்போதெல்லாம் கச்சத்தீவு பிரச்னையும் தலையெடுக்கும். அந்த அளவுக்கு அவை இரண்டும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. அதை இரு நாடுகளும் கவனத்தில் கொள்வது நல்லது.

கச்சத்தீவு ஆண்டாண்டு காலமாக தமிழகத்துக்கே சொந்தமாக இருந்து வந்தது. அதுவே தமிழக மீனவர்களின் மீன்பிடித் தொழிலுக்கு எல்லையாகவும் இருந்து வந்தது. அதனை

ஒப்பந்தம் கச்சத்தீவு பகுதிக்கு தமிழக மீனவர்கள் போகக் கூடாது, மீன் பிடிக்கவும் கூடாது. ஆண்டுதோறும் நடக்கும் அந்தோணியார் திருவிழாவுக்கும் மக்கள் போகக் கூடாது என்று முற்றுப்புள்ளி வைத்துவிட்டது.

1991—ஆம் ஆண்டு சுதந்திர தினத்தன்று சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் கொடியை ஏற்றிவிட்டு அப்போதைய முதல்வர் ஜெயலலிதா கச்சத்தீவை மீட்கப்போவதாக சபதம் செய்தார். "தமிழக மீனவர் நலன் காக்க கச்சத்தீவை மீட்போம்' என்ற முழக்கத்தை முன்வைத்தார். 1991 அக்டோபர் 4—ஆம் நாள், தமிழக சட்டப்பேரவையில் கச்சத்தீவை இலங்கையிடமிருந்து மீட்கக் கோரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கச்சத்தீவை மீட்க வேண்டும் என்ற கோரிக்கை இப்போது மறுபடியும் எழுந்துள்ளது. தமிழக மீனவர்களின் வாழ்வாதார உரிமையைத்தான் நாம் கேட்கிறோம். காங்கிரஸ் ஆட்சி செய்த தவறைத் திருத்தம் செய்ய அடுத்தடுத்து வரும் ஆட்சிகளுக்கு அதிகாரம் இருக்கிறது. அதனை நிரூபிக்க இது ஒரு வாய்ப்பு. இப்போதே கச்சத்தீவுக்கொரு தீர்வு காண்போம்.

சரித்திரத் தொடர்

26. கனக மாளிகைமேல் கயவர்கள்

கொற்றவன்

சித்திரக் கூடத்தில் நுழைந்த அம்மூவரைக் கண்டதும், சேரமாதேவியும் கயல்விழியும் கரம் கூப்பி வணங்கினர்.

"வாருங்கள்! வாருங்கள்!"

"அழையா விருந்தாளியாக வந்துவிட்டோமோ?" தனது கம்பீரக் குரலில் வினவியபடி வந்த செங்குட்டுவரைத் தொடர்ந்து பெரியவரும், அமைச்சர் அழும்பில் வேளும் வந்தனர்.

"கயல்விழி! உன்னுடைய கணிப்பு என்னவாக இருக்கும் என்பதை கேட்பதற்காகவே நாங்கள் வாயிலண்டை சற்று நேரம் காது கொடுத்து நின்றோம்!" என்றார் பெரியவர்.

"ஒரு ஓவியத்தைப் பார்த்தவுடன், இதை வரைந்தது ஆண்தான் என்று தீர்மானிக்கக் கூடிய உன் அபார அறிவு கண்டு உண்மையிலேயே நாங்கள் மூவருமே வியந்து போனோம்! ஆனாலும் இரண்டு பெண்களின் உரையாடலை ஒளிந்திருந்து கேட்டமைக்காக இருவரும் எங்களை மன்னியுங்கள்!" எனக் குறுநகையுடன் கைகூப்பினார் சேரமான்.

அதுகண்டு இளநகை புரிந்தார் சேரமாதேவியார்.

அமைச்சரை நோக்கித் திரும்பிய பேரரசர், "என்ன அழும்பிலாரே! ஒன்றும் சொல்லாமல் அமைதி காக்கலாமா? தங்கள் தரப்பு விளக்கத்தைத் தரலாமே!" என்றார்.

"அரசர்க்கரசே! ஆற்றலில் பெரியவரும், வயதில் பெரியவரும் அறிவில் சிறந்தவரோடு உரையாடுகையில், அதனைச் செவிமடுப்பதுதான் அருகிருப்போர்க்கு அழகு! அதுமட்டுமல்ல, நான் சொல்ல வேண்டியதை தாங்கள் இருவரும் சொல்லிவிட்ட பிறகு நான் என்ன புதிதாக கூறிவிட முடியும்?" என்றார் அமைச்சர்.

"அடேயப்பா! சேரநாட்டில் அழும்பில்வேள் அனுமதி இல்லாமல் ஒரு அணுவும் அசையாது என்கிறார்கள். இங்கே என்னவென்றால், இந்த அழும்பில்வேள் யாரென்றே தெரியாதே எனும் பாவனையில் நிற்கிறாரே! இதை என்னவென்பது?" என எள்ளி நகையாடினார் மகாராணி.

சேரமான், மகாரணியின் சாமர்த்தியமான பேச்சை இரசித்தபடி, "என்ன அமைச்சரே! தேவியாரின் கேள்விக்கு பதில் ஏதும் இல்லையா?" எனப் புன்னகைத்தார்.

"அரசே! மாட்சிமை தங்கிய மகாராணியாரின் வாய்மொழிக்கு மறுமொழி கூறும் திறமை எனக்கில்லை!"

"கேள்வி கேட்கும் எவரையும் வாயடைத்து போகச் செய்யும் வல்லமை மிக்க அழும்பிலாரே!

என் வேடிக்கைப் பேச்சைத் தவறாக எடுத்துக் கொள்ள மாட்டீர்கள் என்றெண்ணியே தங்களை வம்புக்கிழுத்தேன். அதுமட்டுமல்ல, உடன்பிறவா சகோதரரிடம் இந்தச் சகோதரிக்கு இல்லாத உரிமையா என்ன? சரி, தாங்கள் வந்த வேலையைத் தொடருங்கள்." என்ற மகாராணியார் மெல்ல சிரம் பணிந்து "உத்தரவு கொடுங்கள் அரசே! விடை பெறுகிறோம்!" என்றார்.

"தேவி அப்படிச் சொல்லி இங்கிருந்து விடை பெற முடியாது! நீங்கள் இருவருமே இங்கு இருப்பது நல்லது. எங்களுக்கு சில வேலைகளை மிச்சப்படுத்தும்!" என்ற மாமன்னர் அங்கிருந்த ஆசனத்தில் அமர்ந்தபடியே, "அனைவரும் அமருங்கள்!" எனச் சைகையில் ஆசனத்தைக் காட்ட, அவர்கள் அனைவரும் அமர்ந்தனர்.

இரவு நேரக்காற்று குளிர் தென்றலாய் வருடிக் கொண்டிருந்தது. ஆங்காங்கே ஒளிர்ந்த தீபங்கள், சித்திரக் கூடத்தைப் பொன்னொளியில் மிளிரச் செய்தது.

செங்குட்டுவர் தங்கள் இருவரையும் அமர்த்தி வைத்துக் கொண்டு எதைப் பற்றி இங்கே பேசவிருக்கிறார் என்ற எண்ணம் கயல்விழிக்குள் ஓடியது.

"என்ன கயல்விழி, நம்மை வைத்துக் கொண்டு என்ன பேசப் போகிறார்கள் இவர்கள் என்று எண்ணுகிறாயா?" எனப் பேரரசர் வினவியதும், திடுக்கிட்டுப் போனாள் கயல்விழி. தனக்குள் ஓடியதை வார்த்தையில் வெளிப்படுத்தும் இந்த மாமன்னர் அசாத்தியமானவர்தான் என வியந்தாள்.

பேரரசர் மீண்டும் தொடர்ந்தார்.

"நம் கடலரசி பற்றிக் கூறத்தான் உங்கள் இருவரையும் தேடிவந்தோம்."

'கடலரசி' என்ற வார்த்தையைக் கேட்டதும் கயல்விழிக்குள் மின்னல் வெட்டியது. கூடவே தவிப்பும் ஏக்கமும் அவளது முகத்தில் நாட்டியமாடின.

அமைச்சரைப் பார்த்தார் செங்குட்டுவர். அதன் பொருள் உணர்ந்து பேசத் தொடங்கினார் அழும்பில்வேள்.

“கடலரசியிடம் இருந்து செய்தி வந்திருக்கிறது. அன்றிரவு புறப்பட்ட சில நாழிகையிலேயே முசிறித் துறைமுகத்துக்கு மேற்கே உலவிக் கொண்டிருந்த கடற்கொள்ளையரின் கப்பல்கள் அழிக்கப்பட்டு விட்டன. கடலரசியின் கன்னிப்போர் மட்டுமல்ல, வில்லவனின் கன்னிப்போரும் கூட. நம் சேரப் பேரரசின் கடற்பரப்பில் தொல்லைகள் தந்துவந்த கொள்ளையர்களை ஒடுக்குவதில் பேரரசர் பெரும் புகழ் பெற்றவர். அதன் நீட்சியாகத்தான் இப்போரும் அமைந்திருக்கிறது.” அமைச்சர் மேலும் ஏதோ பேசிக் கொண்டுதான் இருந்தார். ஆனால் அவை எல்லாம் கயல்விழிக்கு எங்கோ தூரத்தில் ஒலிக்கும் இனம்புரியாத புள்ளினங்களின் ஓசைபோலவே கேட்டது.

அவள் மனத்தடாகத்தில் வளவத்திரையனின் வதனம் அன்றலர்ந்த ஆம்பலாய் விரிந்தது. கயல்விழியின் முகம் நாணத்தில் சிவந்து தரை பார்த்து கவிழ்ந்தது.

சித்திர கூடத்தை விட்டு அவள் மனம் சிறகடித்து எங்கோ பறந்தது.

வஞ்சி அரண்மனையில் நடுநாயகமாக அமைந்திருந்த அந்தச் சித்திரக் கூடம், விருந்தினர்கள் பலரும் வந்து தங்கும்படி விசாலமானதாக இருந்தது.

அக்கூடத்தைச் சுற்றிலும் அடர்சோலைகளும், நீர்ச்சுனைகளும், மலர்கள் பூத்துக் குலுங்கும் வழிப்பாதைகளுமாக நாற்புறங்களிலும், கிழக்கு மேற்காகவும், வடக்கு தெற்காகவும் நீண்ட பாதைகள், நான்கு மாளிகைகளை நோக்கிச் சென்றடைவதாக அமைந்திருந்தன.

வடக்கே கனக மாளிகையும், தெற்கே பேரரசர் தன் குழாத்தினருடன் தங்கும் வேளாவிக்கோ மாளிகையும் அமைந்திருந்தன.

மேற்கில் குடவாயில் கோட்டமான ஆடகமாடமும், கிழக்கே குணவாயில் கோட்டமும் அமைந்திருந்தது.

ஆடகமாட மாளிகையில் அரசியாரும், அரசகுலப் பெண்களும் தங்கியிருந்தனர். அதைச் சுற்றிலும் அரணாக, முதலைகள் உலாவும் ஆழமான அகழி வளைத்திருந்தது.

‘வஞ்சி’ என்றாலே கொஞ்சி வரும் வஞ்சியரோடு, அழகில் விஞ்சி நிற்கும் வனப்புமிகு அரண்மனைதான் சேரநாட்டு மக்களின் நினைவுக்கு வரும்! வியத்தகு அமைப்பும், கற்பனைக்கு எட்டாத கலைநயமும், அனைத்துக்கும் மேலாகக் கடவுளின் கணிப்புகளை உள்வாங்கும் மாளிகைகளாகவே அதனை மக்கள் நினைத்திருந்தனர்.

மதியூகமும், மகத்துவமும் மட்டுமல்ல, மர்மங்கள் பல உள்ளடங்கியிருக்கும் வஞ்சி அரண்மனையைக் காண்போர்க்கு ஆச்சரியமும் அதிர்ச்சியும் கலந்த பிரமிப்பு மேலிடுவதை தவிர்க்கவியலாது!

திடீர் திடீரென மாமன்னர் நினைத்த நேரத்தில் மக்களிடையே தோன்றி மறைவதனால், வஞ்சியில் பற்பல சுரங்கப் பாதைகள் இருப்பதை மக்கள் உணர்ந்திருந்தனர்.

மன்னரின் பிரவேசம் எங்கு வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் நிகழக்கூடும் என்பதை அறிந்திருந்ததும் கூட வஞ்சி அரண்மனை மீதான அனைவரது பிரமிப்புக்கும் காரணம்!

சில நாழிகைகள் கடந்த பின் சித்திரக்கூடத்திலிருந்து கோப்பெருந்தேவியும், கயல்விழியும் சில தோழியரோடு மகிழ்ச்சியாக வெளிப்பட்டனர்.

அ தே தே ர ம் . . .

தொலைவில் அமைந்திருக்கும் கனக மாளிகையின் மேல்தளத்தை ஒட்டிய கோட்டை மதில் அருகே...

இருள் சூழ்ந்த ஆலமரத்தின் மீதிருந்து கனக மாளிகையின் மேற்பரப்பில் மிகக் கவனமாக இரு உருவங்கள் கயிற்றின் துணை கொண்டு மேலேறின.

கோட்டை மதில்களில் மறைந்து மறைந்து அவ்விரண்டு உருவங்களும் பதுங்கி நடந்து கனக மாளிகை மேற்கூரையின் அருகே வந்து சேர்ந்தன.

கனக மாளிகையில் பலத்த பாதுகாப்பும், வீரர்கள் போக்குவரத்தும் இருப்பினும், யாரும் அறியாவண்ணம் மேற்தளத்தில் வசதியாக மறைந்த அவ்வுருவங்கள் மெல்லியக் குரலில் பேசிக் கொண்டன.

"இன்று மட்டும் நமது திட்டம் சரியாக நிறைவேறிவிட்டால், இந்த சேர நாட்டின் தலையெழுத்தே மாறிவிடும்!"

"அதுமட்டுமா? நெடுங்காலம் நாம் இதற்காக உழைத்த உழைப்புக்கு பலன் கிடைத்துவிடும்!"

"ஆம்! அந்தப் பொன்னான தருணம், இந்தப் பொன் மாளிகையில் இன்று நிறைவேறும் நாளாக இருக்கிறது!"



இருள் சூழ்ந்திருந்த மிக உயரமான அந்த இடத்திலிருந்து அவ்வுருவங்கள் பார்க்கும்போது, வஞ்சி அரண்மனையின் மற்ற மூன்று மாளிகைகளையும், அதன் நடுநாயகமாக அமைந்திருக்கும் சித்திரக்கூடத்தையும் தெளிவாகவே பார்க்க முடிந்தது. ஆனாலும் அவ்வுருவங்களின் பார்வை சித்திரக்கூடத்தின் மீதே பதிந்திருந்தது.

அவர்களின் பார்வை பதிந்திருந்த அவ்வேளையில்தான் பேரரசியாரும் கயல்விழியும் வெளிப்பட்டனர். அவர்களைக் கண்டதும், அவ்வுருவங்கள் பரபரப்படைந்தன.

"அதோ பார்! சேரமாதேவி தன் தோழியரோடு போகிறாள்!" கைநீட்டியபடி கூறிய உருவத்தை இடைமறித்தது மற்றொரு உருவம்!

"உஷ்! சத்தமாக உளராதே! இங்கே காற்றுக்கும் காதிருக்கும். முன்பு நடந்ததை மறந்து விட்டாயா?"

"அட நீ ஏனப்பா கலவரம் அடைகிறாய்? இந்த வேளையில் இங்கே யாரும் வரமாட்டார்கள் நம்மைத் தவிர!"

"பூனைக் கண்ணை மூடிக் கொண்டால் பூலோகமே இருண்டு விட்டாற்போல நினைத்துக் கொள்ளுமாம்! அந்தக் கதைதான் உன் நிலை! முன்பு வந்த வினையெல்லாம் உன்னால்தான்! இனியொருமுறை உன்னால் சிக்கல் வந்தால் உன் கதை மட்டுமல்ல, என் கதையும் சேர்ந்து முடிந்து விடும் புரிகிறதா?"

"எப்போதும் கலவரப்பட்டு உடனிருப்பவனையும் கலவரத்திலேயே வைத்துக் கொண்டால், செய்யும் காரியம் உருப்பட்டாற்போலத்தான்! அன்று மட்டும் நான் சொன்னபடி நீ செய்திருந்தால்

எல்லாம் கச்சிதமாக முடிந்திருக்கும். அதை மறைத்துவிட்டு என் மீதே பழி போடுகிறாயா?"

"நம் சண்டையை வைத்துக் கொள்ளும் இடமோ நேரமோ இதுவல்ல! இன்னும் சற்று நேரத்தில் சேரன் இந்த மாளிகைக்கு வருவது உறுதியாகிவிட்டது! அதுவரை சற்று உன் திருவாயை மூடிக் கொண்டு பொன்மாளிகைக்கான வாயிலின்மேல் கண் வை!"

அவ்விதமாக பேசிக் கொண்டிருக்கும்போது, பொன்மாளிகை முகட்டில் ஏதோ மெல்லிய ஓசை கேட்கவே, அவ்வுருவங்கள் எச்சரிக்கை அடைந்து மாளிகை மதிலின் மறைவில் பதுங்கித் தங்களைத் தோதாக மறைத்துக் கொண்டு ஓசை வந்த திசை நோக்கிப் பார்வையைக் கூர்மைபடுத்தின.

அப்போது மாளிகையின் மேற்புறத்தில் இருவர் மிகவும் வேகமாய் நடந்து வந்து நிற்பதும், அவர்களது பார்வையில் ஒருவிதப் பரபரப்பும் தெரிந்தது.

"அதோ பார் சகாதேவா! மகாராணிக்கு வலது பக்கத்தில் நடந்து செல்கிறாளே அவள்தான் கயல்விழி!"

"அடேயப்பா! அவள் நடந்து செல்லும் தோரணையே, மகாராணிக்கு இணையான மகாராணி போலத்தான் தெரிகிறது!"

"என்ன சொன்னாய்? அவள் எனக்குச் சொந்தமாகப் போகிறவள் என்ற நினைப்பிருக்கட்டும்!" சகாதேவனை எரித்து விடுவது போலப் பார்த்தான் இளங்குமாரன்.

"அடேய்! நான் அவளது நடையழகைத்தானடா வருணித்தேன். நீ ஏன் தவறாக எடுத்துக் கொள்கிறாய்?"

"அவளை வர்ணிக்கும் உரிமை என் ஒருவனுக்கு மட்டும்தான் உள்ளது!"

"ஆமாம்! காலம் முழுக்க இவளைத் தேடிக் கொண்டிருப்பேன் என்றாயே? இந்நேரம் அவள் வேறொருவனுக்கு மனைவியாகி இருந்தால் என்ன செய்வாய்?"

அவ்விதம் கேட்ட சகாதேவனின் கன்னத்தில் 'பளார்!' என விழுந்தது ஓர் அறை!

அது கண்டு மறைவில் இருந்த உருவங்கள் ஆடிப்போய், தங்களுக்குள் கிசுகிசுத்துக் கொண்டன.

"இதென்னடா புதுச் சிக்கல்? இந்த நேரத்தில் இவர்கள் வந்து இங்கே சண்டையிட்டுக் கொள்கிறார்கள்"

"நீ சற்று முன்பு 'இது நாம் சண்டையிட்டுக் கொள்ளும் நேரமோ இடமோ அல்ல என்றாயே! இப்போது என்ன சொல்கிறாய்?"

கிசுகிசுத்த உருவத்திடம், "அடேய்! சற்று நேரம் நீ வாய் மூடி அமைதியாக இருக்க மாட்டாயா?" என்ற மற்றொரு உருவம், இளங்குமரனின் பேச்சை செவிமடுக்கத் தொடங்கியது.

"அடேய் சகாதேவா! இனியொரு முறை இவ்விதம் பேசாதே! கயல்விழி இந்நேரம் என் வாழ்க்கை துணையாகி இருந்திருப்பாள்! ஆனால் பெரியவரின் சூழ்ச்சியால் அது சிறிது காலம் கைகூடாமல் போய்விட்டது. இழந்ததை இப்பொழுது அடையும் வேளை வந்துவிட்டது! இனி கயல்விழி எனக்கு கிடைப்பதை இறைவனே நினைத்தாலும்கூட தடுக்க முடியாது!" இளங்குமரனின் குரலில் தொனித்த உறுதியைக் கண்டு சகாதேவன் மிரண்டு போனான்.

இந்த இளங்குமரன் நினைத்தால் எதையும் சாதிக்கக் கூடியவன்தான்! ஆனால் விதி என்று ஒன்றிருக்கிறதே! அது என்னவெல்லாம் செய்யப் போகிறதோ? என நினைத்துக் கொண்ட சகாதேவன், அறை விழுந்த தன் கன்னத்தை வருடியபடியே கயல்விழி நடந்து செல்லும் திசையினை நோக்கினான்.

கனக மாளிகையின் முகப்பில் இளங்குமரன் அறைந்ததனால் உண்டான அவ்வோசை மறைவில் இருந்த அவ்வுருவங்களுக்கு மட்டுமல்ல, மேலும் சிலரது செவிகளையும் எட்டியது.

அதன் விளைவு அடுத்த சில நாழிகைகளில் அவர்கள் சந்திக்க வேண்டியிருக்கிறது!

(கனவு தொடரும்...)

படைப்பாளிகளுக்கு...
* சிந்திப்போம்..
* படைப்போம்..
* மகிழ்வோம்!
*இதழில் வெளியாகிற
கவிதைகள்,கட்டுரைகள்,எழுத்தோவியங்கள்
யாவும் படைப்பாளிகளின்
பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியவை!
தொடர்புகளுக்கு
editor@ithamil.com

முற்றுப்பெறா தினம்

மௌனித்துக் கிடந்த
கரையின் மேல்
வந்து மோதுகின்றன அலைகள்
அளப்பற்ற ஆற்றலுடன்.
ஒவ்வொரு மணல்துகள்களின்
ஊடாகவும்
தம் மூச்சினைச் செலுத்தி
கர்ஜிக்கின்றன வலிமையுடன்.

ஆக்ரோஷம் அடங்கி மீண்டும்
கடலை நோக்கிப்
பின் வாங்குகையில்
ஆதுரமாகத் தழுவி
விடை பெறுகின்றன.
அமைதிக்கும் ஆர்ப்பரிப்புக்கும்
இடையே
முடிவின்றித் தொடருகின்ற
உறவுக்கு சாட்சியாக
தம் தூய
வெண்சிறகுகளை விரித்து
உயரப் பறக்கின்றன
கருமேகங்களைத் தாண்டி
கடற்பறவைகள்.

அடித்து வீசும் காற்றோடு
கசிந்து மெலிந்தாலும்
மயக்குகிறது இசையாக
ஓயாத அலையோசை.
அடக்க முடியாத சக்தியும்
அளக்க முடியாத அமைதியும்
எழுதிக் கொண்டேயிருக்கின்றன
நாளும் பொழுதும்
புதுப்புது அத்தியாயங்களை.

வேண்டுகோள் விடுக்கின்றன
ஆழ்கடல் உயிரினங்கள்
யாரும் அவசரப்பட்டு
கடைசிப் பக்கத்தை
தேட வேண்டாமென்று.

ராமலட்சுமி

குறிஞ்சியின் முல்லைகள்

பாலைவனத்தணல்,
சற்று ஓய்ந்தால் கள்ளிச்செடி,
பசும் பாசமென்று நெருங்கிட
நஞ்சினால் நிரம்பிய ஊற்று,
எஞ்சி அங்கங்கே சொட்டிக்கிடக்கும்
சில அன்புத்துளிகள்.
தாகம் தணியும் முன்
துடைத்துச்செல்லும்
வலிய விதி.

அதனினும் வலியதாம்
அத்தனையும் கடந்து
அவள் கண்ட ஞானஒளி.
விதியால் பாலைவனமான முல்லையது
தன்னொளியால் மீண்டு வந்த
மலர்மனமது.
கோபத்தை மட்டுமே
ஊற்றி வார்க்கப்பட்டதாய்
சித்திரிக்கப்பட்டிருக்கும்
அந்தக் கொற்றவைகளுக்கு
போர் ரேகைகள் படர்ந்து கடந்த
பாதங்களில் அகப்பட்டிருக்கும்,
ஏகாந்த மென்கானகத்தின் சாயல்.

தனுவிஷ்ணு

என்னவென்பது

நியதிகளேதுமற்றதே போல் தோன்றும்
இந்தக் கானகத்தில்
பற்ற ஒரு நியமம் தேடியலைகிறேன்
எப்போதும் உடுத்து அலையும்
வெண்ணிற உடையில்
களிகூடி மிதந்து
காடே சொந்தம்போல்
இறங்கிவரும் பட்டுப்பூச்சிகள்
அவ்வப்போது தீற்றிச் செல்வதை
கறையெனக் கொள்வதா
வண்ணமா?

உயிர்பற்றிக் கொண்டாடும்
இவ்வாழ்வில்
கால்கள் இடறியும்
கலைகள் பயின்றும்
கைகள் பிணைக்குற்றும்
மாண்பை தரிசித்தும்
இன்னும் இன்னுமோர் தருணம்
என்றலைதல்
ஆட்டத்தின் ஓரங்கம் என்பதா
அதுவே ஆட்டமென்பதா

பற்றிலேதும் வரவின்றி
உதித்து விரைந்து
உதிரும் நாட்களுக்குள்
கணக்கேதுமின்றி
எதையும் பதியாமல்
தடமெதுவும் இல்லாமல்
மகிழ்வேதும் தாராமல்
துயரதுவும் கொள்ளாமல்
மறைந்து போவது
குறைவென்பதா அன்றி அதுவே
நிறைவென்பதா?

சரவணன் அபி

திருவுரு

இன்று உன் உளியின்
நுனிக்கூருக்கு
கனிந்து கொடுக்க
கோரி நிற்கிறாய்
நீ கடந்து வந்த
ஆயிரம் பாறைகளில்
ஒன்றென தருக்குகிறாய்

உனக்கும் முன்னமே
நூறாயிரம் வான்துளிகள்
நூறாயிரம் முறை
கொத்தி கொத்தி
என் உரு செதுக்க துடிப்பதை
அறியவில்லையா உன் விழிகள்?

உருவிலிருந்து
இன்னுமொரு உருவை
எப்படி உருவியெடுப்பாய்?

மூடனே
வான் துளிகள்
தொடுவதற்கு முன்னும்
நான் திருவுரு
திகழ்ந்துதான் இருக்கிறேன்

வ. அதியமான்

‘சுல்தான்’ திரைப்படத்தைத் தொடர்ந்து கார்த்தி நடிக்கும் படம் ‘சர்தார்’. ‘இரும்புத் திரை’ ‘ஹீரோ’ உள்ளிட்ட படங்களை இயக்கிய பி.எஸ்.மித்ரன் இந்தப் படத்தை இயக்குகிறார். ஜி.வி.பிரகாஷ் இசையமைக்கும் இந்தப் படத்தில் ரஜிஷா விஜயன் மற்றும் ராஷி கண்ணா என இரண்டு கதாநாயகிகள் நடிக்கின்றனர். பிரின்ஸ் பிக்சர்ஸ் சார்பில் எஸ்.இலட்சுமண் குமார் தயாரிக்கும் இப்படத்தில் கார்த்தி வயதான தோற்றத்திலும், காவல் அதிகாரியாகவும் இரண்டு வேடங்களில் நடிக்கும் இப்படம் வரும் தீபாவளிக்கு வெளியாகும் என அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மிரட்ட வரும் மிதாலி!

தீபாவளிக்கு வருகிறார் ‘சர்தார்’

தீபாவளி காமெடியாகாமல் இருந்தால் சரி!

சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக பிரபல வீராங்கனை மிதாலி ராஜ் சமீபத்தில் அறிவித்தார். ஆனால் 2019 ஆண்டிலேயே மிதாலி ராஜின் பிறந்த நாளன்று அவருடைய வாழ்க்கை வரலாற்றுப் படமான ‘சபாஷ் மித்து’ குறித்த அறிவிப்பு வெளியானது. வியாகாம்19 ஸ்டுடியோஸ் தயாரிக்கும் இப்படத்தில் மிதாலி ராஜ் வேடத்தில் டாப்சி நடித்துள்ளார். ஜூலை 15 அன்று திரையரங்குகளில் வெளியாகவுள்ள ‘சபாஷ் மித்து’ படத்தின் டிரெய்லர் சமீபத்தில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

திரையிலும் சதம் அடிக்கட்டும்!

சாய் பல்லவி நடித்துள்ள 'கார்கி' படத்தை சூர்யா — ஜோதிகா இணைந்து தங்களது 2டி எண்டர்டெயின்மென்ட் சார்பாக வெளியிடுகின்றனர். இதுகுறித்து சூர்யா தனது ட்விட்டர் பக்கத்தில், "சில கதாப்பாத்திரங்கள் மனதிலேயே தங்கிவிடும். புதிய எண்ணங்களும் எழுத்துக்களும் கொண்டாடப்பட வேண்டும் உங்களுக்கு பிடிக்கும் என நம்புகிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார். கார்கி படத்தில் சாய் பல்லவியுடன் ஐஸ்வர்யா லக்ஷ்மி, காளி வெங்கட், கலேஷ் ராமானந்த் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர். இந்தப் படத்தின் வெளியீடு விரைவில் அறிவிக்கப்படும்.

தீபாவளி 'தல' தீபாவளி?!

'நேர்கொண்ட பார்வை', 'வலிமை' திரைப்படத்திற்குப் பிறகு, ஹெச்.வினோத் இயக்கத்தில் போனி கபூர் தயாரிப்பில், அஜித் கூட்டணி 3—வது முறையாக இணையும் புதிய படம் தற்காலிகமாக 'ஏ.கே. 61' என்று பெயரிடப்பட்டு விறுவிறுப்பாக நடைபெறுகிறது. இந்தப் படத்தில் நடிகர் அஜித் இரட்டை கதாபாத்திரங்களில், அதிலொன்று நெகட்டிவ் ரோலில் நடித்து வருவதாகவும் கூறப்படுகிறது. இதற்காக உடல் எடை குறைத்து, தாடியுடன் புதிய லுக்கில் அஜித் புகைப்படங்களும் வெளியாகி வைரலாகியது. இந்தாண்டு தீபாவளிக்கு வெளியிட படக்குழு திட்டமிட்டுள்ளதனால் விரைவில் அஜித் ரசிகர்களுக்கு இன்ப அதிர்ச்சி காத்திருக்கிறது.

தலவலம்

கூடலழகர் மதுரை

புவனகிரி செயபாலன்

"கோழியும் கூடலும் கோயில் கொண்ட
கோவலரே ஒப்பர் குன்ற மன்ன
பாழியந் தோளுமோர் நான்குடையர்
பாண்டிவர் தம்மையும் கண்டறியோம்
வாழியரோ இவர் வண்ண மெண்ணில்
மாகடல் போன்றுளர் கையில் வெய்ய
ஆழியொன் றேந்தி ஓர் சங்கு பற்றி
அச்சோ ஒருவர் அழகியவா!"
—திருமங்கையாழ்வார்

சங்கத் தமிழ் வளர்த்த மாநகரம் மதுரை. தமிழோடு திருமால் நெறியினையும் போற்றி வந்த பெருமையுடையது. பாண்டிய மன்னர் பலர் திருமால் அன்பர்களாய் திகழ்ந்தனர். திருமாலுக்கு குன்றன்ன கோயில்களையும் எழுப்பினர். அக்கோயில்களில் முதன்மையானது கூடலழகர் எழுந்தருளியிருக்கும் திருக்கோயில் ஆகும். பாண்டியநாட்டுத் திருப்பதிகளில் பதினெட்டில் ஒன்று. திவ்ய பிரபந்தப் பாசுரங்களுக்கு முதன்மையாக விளங்கிய திருப்பல்லாண்டு பாடப்பெற்ற தலம்!

மதுரை நகரை அணி செய்வது வைகை நதி. புராணங்கள் மற்றும் சங்கங்களில் வைகை நதி இரு பிரிவாகப் பிரிந்து மதுரை மாநகருக்கு மாலையிட்டதுபோல் சென்றது என அறியப்படுகிறது. அவற்றில் ஒன்றான 'கிருதமாலை நதி' கூடலழகர் கோவிலுக்கு மிக அருகில் தென்புறம் ஓடியது. இது சமீப காலம் வரை நீர் பெருகி ஓடிக் கொண்டிருந்தது.

மதுரையில் திருமாலுக்கு பல கோயில்கள் இருந்தாலும் இக்கோவிலை மட்டும்தான் 'கூடல் அழகிய பெருமாள்' என்ற பெயரில் கல்வெட்டுக்களில் பொறிக்கப்பட்டுள்ளது. ஊரின் பெயரால் விளங்கும் பெருமாள் கோயில் இது ஒன்றே என்பது தனிச்சிறப்பு. இக்கோயிலின் சிறப்பு மற்றும் புனிதம் பற்றி பிரம்மாண்ட புராணத்தில் ஷேத்திர மகாத்திய காண்டம் 82—வது அத்தியாயம் முதல் 93—வது அத்தியாயம்

வரை வியாசர் சொன்னதாகக் கூறப்பட்டுள்ளது

கலியுக தொடக்கத்தில் புரூரவஸ் என்ற மன்னன் கூடலழகருக்குத் தொண்டு செய்து வீடு பேறு பெற்றான். இவனின் மைத்துனரான இந்திரத்துய்மனனும் கூடலழகருக்குத் தொண்டு பல செய்து வீடுபேறு அடைந்தான். இவனது மைந்தன் மலையத்துவஜ பாண்டியன், வடக்கே சென்று பல பகையரசர்களை வென்று இமயமலையில் இலட்சினை பொறித்தான் என்று இவனது வீரத்தை பெரியாழ்வார் போற்றிப் புகழ்ந்துள்ளார்.

அவனது வம்சாவழியில் வந்த தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன், கூடலழகருக்குப் பல திருவிழாக்களை நடத்தியதுடன் ஆனி திருவோணத்தில் சிறப்பு வழிபாடு செய்தான் என மாங்குடி மருதனார் மதுரைக் காஞ்சியில், 'மாயோன் மேய ஓண நன்னாள்' என்று பாராட்டுகிறார்.

ஸ்ரீவல்லப தேவன் என்ற பாண்டியன் மன்னன் வீடு பேற்றைத் தரவல்ல பரம்பொருளை அறிய விரும்பி சிலரிடம் கேட்டான். அவனுக்கு புரோகிதராக இருப்பவர் செல்வ நம்பி எனும் பெரியார். அவர் கனவில் கூடலழகர் காட்சியளித்து, 'ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள பெரியாழ்வாரை அழைத்துவந்து வித்வான்கள் கூடிய சபையில் எழுந்தருளச் செய்தால், அவர் எளிதில் அறுதியிடுவார்!' என்று கூறி மறைந்தார்.

அதன்படி பாண்டியன் நிர்ணயித்த சபையில் பல சமயப் பெரியோர்கள் முன்னிலையில் பெரியாழ்வார் சுருதி, ஸ்மிருதி, இதிகாச, புராணங்களில் இருந்து பல பாசுரங்களையும் சுலோகங்களையும் தன் சொல் வன்மையாலும் சான்றுகளின் திறத்தாலும் எம்பெருமான் அருளாலும் 'நாராயணனே பரம்பொருள்' என நிரூபித்தார். இதைக் கேட்ட அனைவரும் பாராட்டி வாழ்த்தினர்.

அப்போது கம்பத்தில் பரிசுக்காக கட்டி இருந்த பொற்கிழி கம்பம் தாழ்ந்து பெரியாழ்வார் கரங்களுக்கு வந்தது. மன்னன் பெரியாழ்வாரை தனது ஆசாரியனாக ஏற்று அவரைப் பட்டத்து யானை மீது ஏற்றி வீதிகளில் நகர்வலம் வரச் செய்ததுடன், அவருக்கு சாமரம் வீசினான் என்று ஒரு குருப்பராபர பாவம் கூறுகிறது.

இவ்வரிய காட்சியை நேரில் காண விரும்பிய கூடலழகர், திருமகள், நிலமகளோடு பெரிய திருவடியான கருடாழ்வார் மீது ஆரோகணித்து ஆழ்வாருக்கு தன் சொல்லற்கரிய திருமேனி அழகைக் காட்டினார். வடிவழகை கண்ட பெரியாழ்வார் பக்தி பரவசம் கொண்டார். இக்கலிகாலத்தில் இவ்வளவு பேரழகைப் பலரும் கண்டால் எம்பெருமான் அழகுக்கு கண்ணெச்சில் (திருஷ்டி) பட்டுவிடுமோ என அஞ்சி அந்த வடிவழகுக்குக் காப்பாக யானை மீது கிடந்த மணிகளையே தானமாகக் கொண்டு

திருப்பல்லாண்டு பாடினார்.

பெரியாழ்வார் கூடலழகர் சேவித்து பாடிய முதல் பிரபந்தம்,

'பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு பலகோடி நூறாயிரம் மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா உன் சேவடி செவ்வி திருக்காப்பு!' என எழுதியிருக்கிறார்.

ராமானுஜர் திருமாலிருஞ் சோலை அழகருக்கு ஆண்டாள் விருப்பப்படி நூறு தடா நிறைய அக்கார அடிசிலும் வெண்ணெயும் சமர்ப்பித்து திரும்பும்போது கூடலழகரைச் சேவித்து 'திருப்பல்லாண்டு திவ்ய தேசம்' என மங்களாசாசனம் செய்தார்.

கிபி 1307—ல் மதுரைக்கு கிழக்கே உள்ள குந்திநகரத்தில் (கொந்தகை) அவதரித்த திருவாய்மொழிப் பிள்ளை, பாண்டிய தேசத்தில் முதலமைச்சராகப் பணியாற்றினார். இக்காலத்தில் முகமதியர் படையெடுப்பால் பல கோயில்களும் நகரங்களும் பாழ்பட்டன. அச்சமயத்தில் கூடலழகர் கோயிலுக்கு முற்றிலும் சேதம் ஆகாமல் காத்தவர் இவரே! பின் அமைச்சர் பதவியைத் துறந்து பரம வைராக்கியநிதியாய் திகழ்ந்தார். இவருடைய சீடரே மணவாள மாமுனிகள். இவர் இருமுறை கூடலழகரை மங்களாசாசனம் செய்துள்ளார்.

திருவாய்மொழிப் பிள்ளையின் சீடர் பரம்பரையினரே இக்கோயிலின் முதல் தீர்த்த மரியாதை மற்றும் பல சிறப்புகளையும் இன்றும் பெற்று வருகின்றனர்.

அட்டாங்க விமானம்

பகவான் எழுந்தருளி இருக்கும் விமானங்கள் 96 வகைப்படும். அதில் ஒன்று அட்டாங்க விமானம். அதிட்டானம், பித்தி, பிரஸ்தரம், கிரீவம், சிகரம், ஸ்தூபி என ஆறு அடிப்படை அங்கங்களுடன் இரண்டு மேல் தளங்களுடன் சேர்ந்து எட்டு அங்கங்களை உடையதாய் அமைந்திருப்பது அட்டாங்க விமானம் எனப்படும். இது எட்டெழுத்து மந்திரத்தின் ஸ்தூல வடிவம். 125 அடி உயரம் உள்ள விமானத்தின் அடித்தளத்தில் எம்பெருமான் உபநாச்சியார்களுடன் வீற்றிருக்கும் கோலத்தில் சேவை சாதிக்கிறார். இவரை 'கோயில் கொண்ட கோவலர்' என்று திருமங்கையாழ்வார் மங்களாசாசனம் செய்துள்ளார். கருவறையில் இருக்கும் உற்சவருக்கு 'வியூக சுந்தர்ராஜன்' என்று பெயர்.

இரண்டாவது தளத்தில் சூரிய நாராயணனாக இரு தேவியருடன் நின்ற கோலத்தில் வர்ண கலாபத் திருமேனியாகக் காட்சி தருகின்றார். கருவறையின் சுவர்களில் வண்ண ஓவியங்கள் அதில் அஷ்டதிக் பாலகர்களான அக்னி, எமன், இந்திரன், நிருதி, வருணன், வாயு, குபேரன் இவர்களின் வாகனங்களான ஆடு, எருமை, ரிஷபம், யானை, மகரம், குதிரை என ஓவியத்தில் உள்ளன.

மூன்றாவது தளத்தில் பெருமாள் பள்ளி கொண்ட நிலையில் வண்ண திருமேனி உருவத்தை உடையவராக இருக்கிறார். இவரது கருவறை சுவற்றில் தசாவதாரங்கள் சுதையால் அமைக்கப்பட்டுள்ளன. பிருகு, மார்க்கண்டேயர், தரையில் அமர்ந்தும், மதுகைடபர்கள் திருவடிகளின் அருகில் நின்றவாறு காட்சி தருகின்றனர். பெருமாள் அருகில் கருடனும் அனுமனும் வீற்றிருக்கின்றார்கள்.

மூன்று தளங்களிலும் 22 சுற்றுப் பிரகாரங்கள் (திருவுண்ணாழிகள்) உள்ளன. ஒரே ஊர்த்துவ முகமாக ஒன்றின் மீது ஒன்றாக மூன்று சன்னதிகள்

அமைந்து அவற்றில் எம்பெருமான் வீற்றிருத்தல், நிற்றல், கிடத்தல் ஆகிய மூன்று திருக்கோலங்களில் சேவிக்கும் அமைப்புடன் இருப்பது இதன் தனிச் சிறப்பு!

கோயிலில் உள்ள உற்சவ திருமேனிகள் பத்தாம் நூற்றாண்டைச் சார்ந்தவை. இங்குள்ள ராமர் சீதை இலக்குவன் திருமேனிகள் சிறப்பானவை என்று இங்குள்ள கல்வெட்டு மூலம் தெரியவருகிறது.

அட்டாங்க விமானத்தின் மீது உயரமான தூபியும் அதைச் சுற்றி நான்கு சிறு தூபியும் உள்ளன. விமானத்தின் மேலே உள்ள தூபியின் நிழல் தரையில் விழுவதில்லை! இதன் உயரம் ஒன்பதே முக்கால் அடி, சுற்றளவு 22 அடி, தூபியினுள் 15 மூட்டை (750 படி) வரகு உள்ளது என தல வரலாறு நூல் கூறுகிறது.

விமானத்தின் பீடத்தில் நான்கு முனிவர்களும் அதையடுத்து கீழ்த்தட்டில் பக்கத்துக்கு நால்வர் வீதம் 16 முனிவர்களும் அமர்ந்த நிலையில் உள்ளனர். இதன் நான்கு மூலைகளிலும் சிங்கங்களுடன் கூடிய கருட பிம்பங்கள்.

நடுத்தளத்தில் ராமாயணத்தைச் சித்தரிக்கும் சுதை வடிவங்கள் உள்ளன. மூன்றாவது அடுக்கில் பாகவத சரித்திர வடிவங்களும், அதற்கு மேலே சிவனின் ருத்ராகாரமான வடிவங்களும், திருமாலின் தசாவதார கோலங்களும் மற்றும் துர்க்கையின் பல்வேறு வடிவங்களும் அமைந்துள்ளது. இதை வைணவ சைவ ஒருமைப்பாடு உடையது எனலாம்

கோபுரம் ஐந்து நிலைகளுடன் ஐந்து கலசங்களையும் கொண்ட ராஜகோபுரம் கிழக்கு நோக்கி உள்ளது. கொடி மண்டபம் 16 தூண்களுடன் வடக்கு தெற்காக நீண்டு இருக்கிறது. வடகோடியில் பள்ளியறையும் தென்கோடியில் ஹேமபுஷ்கரணி என்னும் பொற்றாமரை குளமும் உள்ளது.

கருடன், கிருஷ்ணர், ராமர், ஆஞ்சநேயர், விஷ்வக்சேனர், லட்சுமிநாராயணன் சன்னதிகளோடு கூடிய யாகசாலையியும் உள்ள இடம் கருட மண்டபம் ஆகும்.

கருவறை வாசலில் சுதையாலான துவாரபாலகர்கள் உள்ளனர். கருவறையில் ஸ்ரீதேவி பூதேவியுடன் இடதுகாலை மடித்து வலதுகாலை தொங்கவிட்டு சுகாசனத்தில் கூடலழகர் வீற்றிருக்கிறார்.

மேல்தளத்தில் உப நாச்சியாரோடு எம்பெருமான் சூரிய மண்டலத்தில் உள்ளது போல் நின்ற கோலத்தில் வண்ணத் திருமேனியாக உள்ளது.

வரலாற்றுச் செய்தி

கி.பி. 1740—ல் ஆற்காடு நவாப் சாந்தா சாகிப் மற்றும் அவருடைய படைவீரர்கள் மதுரை மீது படையெடுத்தனர். அப்போது பங்காரு திருமலை நாயக்கரின் மகன் விஜயகுமார முத்து திருமலை, வெள்ளையன் சேர்வை என்ற தளபதியுடன் மதுரையை விட்டு ஓடிப்போனார். அப்போது தலத்தார், கூடலழகர் உற்சவர் திருமேனியைப் பாதுகாப்புக்காக 'வானவீரன் மதுரை' எனும் மானாமதுரைக்கு கொண்டுபோய் அங்கு 1740 முதல் 1741 வரை வைத்து நித்திய பூஜைகள் செய்ய சேதுபதி மன்னர் ஏற்பாடு செய்தார்.

பிறகு முராரிராயர் என்ற மராட்டிய மன்னர், அப்பாச்சி நாயக்கரின் தலைமையில் படைகளை அனுப்பினார். அவர்கள் போரிட்டு முகமதிய படைகளை விரட்டி சேதுபதி மன்னரின் இசை பெற்று கூடலழகர் மதுரைக்கு எழுந்தருளச் செய்து 1741 ஜூலை 2—ல் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் செய்தனர். ஆதாரம்: மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் திருப்பணி மாலை

கல்வெட்டுகள்

கூடலழகர் கோயில் அட்டாங்க விமானத்தின் அடித்தளம், அர்த்தமண்டபம், மகாமண்டப உட்புறம், பெரிய திருச்சுற்று சுவர்கள் ஆகிய இடங்களில் உள்ள கல்வெட்டுகளில் இக்கோயில் தொடர்பான ஐந்து கல்வெட்டுக்கள் உள்ளன. இவைகள் விஜயநகர அரசர்கள் மற்றும் மதுரை நாயக்கர் காலத்தவை.

முதல் இரு கல்வெட்டுகள் கி. பி. 1501 மற்றும் 1555 —56—க்கு உரியவை. இதில் இக்கோயிலுக்கு செய்யப்பட்ட கட்டிட பணிகள், வழிபாடுகள் குறித்து தெரிவிக்கின்றன. கிருஷ்ண தேவராயர் அச்சுதராயர் ஆட்சிக்குப் பின் வந்தவர் சதாசிவராயர். இவரது ஆட்சியில் தட்சிண மண்டலாதிபதியாக ராமவிட்டல மகாதேவர் ராயர் இருந்தார். அவரிடம் பணிபுரிந்த வசவன நாயக்கர் மகன் திம்மப்ப நாயக்கர். விஸ்வநாத நாயக்கர் ஆட்சிக் காலத்தில் பல போர்களை நடத்தி அதில் கொண்டுவரப்பட்ட பொருட்களை கொண்டு பல வைணவ கோயில்களைப் புதுப்பித்து அவற்றின் வழிபாட்டிற்கு ஏராளமான தானங்களையும் செய்தார். விட்டல தேவராயரின் கீழ் பணி புரிந்தவர்கள் திம்மப்ப நாயக்கர் மற்றும் எல்லப்ப நாயக்கர் பல திருப்பணிகளைச் செய்தனர்.

விட்டல தேவராயர், திம்மப்ப நாயக்கர் போன்றோரின் உருவச்சிலைகள் கூடலழகர் கோயிலில் உள்ளன. திம்மப்ப நாயக்கர் கூடலழகர் பெருமாளுக்கு நித்யபடி நைவேத்தியத்திற்கு திருநாள் கட்டளைக்கு மதுரை மண்டலத்தில் பல ஊர்களை தானமாக அளித்தது இக்கல்வெட்டு மூலம் தெரிகிறது. திம்மப்பர் காலத்தில் அட்டாங்க விமானத்தில் உள்ள அர்த்த மண்டபத்தினை கந்தாடை சோனம் என்பார் கட்டியிருக்கிறார். இப்பணியைச் செய்து முடிப்பதற்காக மதுரை கல் தச்சர்கள் ஒத்துக் கொண்டு அதற்கு கூலியாக 1600 பணம் பற்றி ஒப்பந்த முறை எழுதி கொடுத்துள்ளனர். இது போன்ற சில கல்வெட்டுக்களையும், வேறுசில கல்வெட்டுகளையும் காணமுடிகிறது.

பூஜைகள் மற்றும் திருவிழாக்கள் முதலியன வைகானச, ஆகம விதிகளின் படியும், தென்கலை சம்பிரதாயங்களை அனுசரித்தும் நடைபெற்று வருகிறது நாள்தோறும் காலை சந்தி, உப சந்தி, உச்சிக்காலம், சாயரட்சை, இராக்காலம், அர்த்தசாமம் என ஆறு கால பூஜைகள் தினமும் காலை மாலை நித்திய உற்சவர் புறப்பாடு நடைபெறுகின்றது.

தினமும் காலையில் விசுவரூப தரிசனம் நடைபெற்று வருகிறது. தமிழ் மாதப்பிறப்பு, சுக்லபட்சி, ஏகாதசி, அமாவாசை, திருவோணம் ஆகிய 5 நாட்களிலும் சுந்தரராஜர் பல்லக்கில் எழுந்தருளி வீதிகளில் புறப்பாடு நடைபெறும். பஞ்சபர்வங்களில் வெள்ளிக்கிழமை சேர்ந்து வந்தால் ஸ்ரீ வியூக சுந்தரராஜ பெருமாள், தாயார் சன்னதி எழுந்தருளி சேர்த்தி சேவை நடைபெறும். மதுரவல்லி தாயார் பிரதிவாரம் வெள்ளிக்கிழமை புறப்பாடு கண்டருளி ஊஞ்சலில் எழுந்தருள்வார்.

திருவிழாக்கள்

சித்திரை மாதம் தமிழ் வருட பிறப்பு சிறப்பு திருமஞ்சனம், பெருமாள் புறப்பாடு, திருவாதிரை நட்சத்திர திருவிழா பத்து நாட்கள்.

வைகாசி தேர் திருவிழா 14 நாட்கள், ஆடிப் பூரம் நட்சத்திரம் விழா 10 நாட்கள், ஏழாம் நாள் சயன உற்சவம் நடக்கிறது.

மார்கழி திருப்பல்லாண்டு தொடக்கம், பகல் பத்து ராப்பத்து, வைகுண்ட ஏகாதசி, மாசியில் தெப்பத்திருவிழா 12 நாட்களும், பங்குனி உத்திரத்தன்று மரகதவல்லி தாயார் திருக்கல்யாணம் வசந்தோற்சவம் 5 நாட்களாக இக்கோவிலில் நடைபெறும்.

விழாக்கள் அனைத்தும் கோவில் செலவில் உபய கட்டளைக்காரர்கள் செலவிலும் நடைபெறும்.

தேவ சிற்பியான விஸ்வகர்மாவின் சிருஷ்டியான இவ்வட்டாங்க விமானத்தில் எல்லா தேவர்களும் உறைகின்றனர். அதனால் விமானத்தை தினமும் வலமாகச் சுற்றி வருவதால் எல்லா இட்ட சித்திகளும் ஏற்படும் என்கிறது தல புராணம்.

ஜெயலலிதா முதலமைச்சராக இருந்த காலத்தில் கோயில்களில் அன்னதான திட்டம் முதன்முதலாக கொண்டுவரப்பட்டு நடைமுறையில் செயல்பட்டு வருகிறது. அதன்படி அன்னதானத் திட்டத்தின் கீழ் இக்கோவில் சேர்க்கப்பட்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது

இருப்பிடம்

மதுரை பெரியார் பேருந்து நிலையத்தில் இருந்து கிழக்கே அரை கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது.

(தொடரும் வலம்.....)

VARSHA™

Ready to Cook

Made with Quality Natural Products

Idli / Dosa Wet Mix

ఇడ్లీ దోస పిండి

• இட்லி / தோசை மாவு

• ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು

ഇഡ്ഡലി / ദോശ മാവ്



100% Pure Vegetarian

ઈડલી ડોસા નું ખીરું

इडली/ दोसा आटा

பிப்ரவரி மழை

சுஜாதா தேசிகன்

பிப்ரவரி மாதம் பெங்களூரில் மழை பெய்யாது. ஆனால் போன திங்கட்கிழமை யாருக்கும் சொல்லாமல் மழை வந்துவிட்டது. அன்றிரவுதான் திவ்யா அலுவலகத்திலிருந்து புறப்பட்டாள். இரவு இல்லை; விடியற்காலை 2:35.

அமெரிக்க இன்ஷூரன்ஸ் கம்பெனி பேக் ஆபிஸ் வேலை. ஹெப்பால் பக்கம் ஒரே மாதிரி இருக்கும் பல கட்டிடங்களில் ஏதோ ஒரு கட்டிடத்தில் இருக்கிறது அவளது அலுவலகம். வெளியே வந்து பார்த்தபோது, டாட்டா சூமோ அணிவகுப்பு வெளிச்சத்தில் மழை மத்தாப்பு மாதிரி பெய்துகொண்டு இருந்தது. தன்னுடைய வண்டியைக் கண்டுபிடித்து, கைப்பையை தற்காலிகக் குடையாக்கிக்கொண்டு ஓரே ஓட்டமாக வண்டியில் ஏறிக்கொண்டாள். காலை செய்த அலங்காரம் கொஞ்சம் மீதி இருந்தது. கதர் மாதிரி துணியில் வெள்ளை நிற குர்த்தா. கணுக்கால் தெரியும் அளவிற்கு ஜீன்ஸ் அவளின் உடலமைப்பை அவுட்லைன் போட்டு காண்பித்தது. காதில் பிரதான பெரிய வளையத்துக்கு மேல் எஸ்டராவாக ஆணி இரண்டு குத்தியிருந்தது. பத்தடி ஓட்டத்தில் நனைத்த மழை டிரேசிங் பேப்பரில் விழுந்த எண்ணை மாதிரி அவளை இன்ஸ்டால்மெண்டில் காண்பித்தது. வண்டியில் அவளுடைய வாசனையும் பரவத் தொடங்கியதும்.

“வாங்க மேடம்ஞ் மழை திடீர் என்று..” என்றான் மஞ்சுநாத்.

மஞ்சுநாத் அவளை தினமும் பனர்கட்டா சாலையில் மீனாக்ஷி கோயிலுக்கு பக்கம் இருக்கும் ஹுல்லிமாவு என்ற இடத்தில் அவளது வீட்டில் விடும் டிரைவர். எஃப் எம் போட்டுவிட்டு, ரியர் மிரர் வியூவை சரிசெய்து பார்த்த போது திவ்யா போட்டிருந்த உள்ளாடை மீது அவன் கண்கள் சில வினாடிகள் அதிகப்படியாகத் தங்கியது. திவ்யா செல்பேசியில் பேசிக்கொண்டு ஒரு சாக்லெட் பட்டையை தின்றுகொண்டு இருந்தாள்.

“ஹாய் ராக்ஸ்.. யா.. ரெயினிங்.. யா.. “(சிரிப்பு).. ஷக்ஸ்.. நோ சார்ஜ்” என்று சொல்லிவிட்டு சாக்லெட்டை இன்னொரு கடி கடித்தாள்.

பின்னாடி வண்டிகள் ஹார்ன் சத்தம், மழை என்று பரபரப்பு சூழ்ந்துக்கொள்ள, செக்யூரிட்டி ஒரு கையில் குடையுடன் முன்னால் வந்து ஏதோ பேப்பரில் அவசர அவசரமாக கையெழுத்து வாங்கும்போது பின்னால் ஹார்ன் சத்தம் அவசரப்படுத்த, பெண் ஊழியர்களை தனியாக அழைத்துப் போகக்கூடாது என்ற விதிமுறை அன்று மீறப்பட்டது.

வண்டி அவுட்டர் ரிங் ரோடுக்கு வந்து போது, ரியர் மிரர் வியூவில் திவ்யா அந்த சாக்லேட்டை சாப்பிட்டுக்கொண்டு இருந்தாள். மஞ்சுவின் பார்வை மேலும் அவளை ஆக்ரமித்தது. தன்னைப் பார்ப்பதை கவனித்து, சாக்லெட்டைக்

கொஞ்சம் உடைத்து, "மஞ்சு ..இந்தா." என்று நீட்டினாள். வண்டியை ஓட்டிக்கொண்டே இடது கையை பின்பக்கமாக நீட்டி வாங்கிகொண்ட போது, சாக்லேட்டைப் பிடிப்பதற்குமுன் அவள் கையைப் பிடித்தான். இந்தச் சின்ன விதிமீறல் அவளுக்குத் தப்பாகத் தெரியவில்லை.

சாக்லேட்டில் உள்ள குளுக்கோஸ் அவள் உடம்பில் உள்நோக்கி ஓட்டம் எடுக்க, ஹென்னூர் தாண்டியவுடன் திவ்யாவிற்குத் தூக்கம் வந்தது. பின் சீட்டில் சாய்ந்துக்கொண்டாள். மழை சத்தம் போட ஆரம்பித்தது. எஃப் எம் ரேடியோவின் ஒலி அளவைக் குறைத்துவிட்டு, பின்பக்கம் பார்த்தபோது திவ்யாவின் சட்டை மேல் நோக்கி டைட் சோப் விளம்பரம் மாதிரி அந்த இடம் மட்டும் பளிச் என்று தெரிந்தது. சர்ஜாப்பூர் தாண்டியவுடன்ஞ் மஞ்சு முடிவு செய்துவிட்டான்.

மார்த்தஹல்லி வரும் போது திவ்யா நல்ல தூக்கத்தில் இருந்தாள். சர்ஜாப்பூர் சந்திப்பு வந்த பின்னார் வண்டி வழக்கமான பாதையில் போகாமல் ஏதோ ஒரு சந்தில் திரும்பிப்போக ஆரம்பித்தது. இடையில் ஒரு மின்கம்பத்தில் பொறிகள் கிளம்ப, சாலை சடாரென இருட்டுப் போர்வை போர்த்திக்கொண்டது.

செந்தில் சுக்காம்பட்டி பக்கத்தில் இருக்கும் மூவனூரிலிருந்து பெங்களூருக்குக் கிளம்பும்போது மணி ஒன்பது. மூவனூரிலிருந்து பெங்களூருக்கு பஸ் கிடையாது, பக்கத்து வீட்டு வேலுவின் டிவிஎஸ் 50ல் முசிறிக்கு வந்து அங்கிருந்து ஒரு பஸ் பிடித்து சேலம் வரவேண்டும். சேலத்திலிருந்து பெங்களூர் பஸ் பிடித்து சில்க் போர்டில் இறங்க வேண்டும். பிறகு அவன் தங்கியிருக்கும் பி.ஜிக்குப் போக வேண்டும். செந்திலுக்கு எல்லாம் புதுசாக இருந்தது. பெங்களூருக்கு பஸ் பயணம் புதுசு. போன தடவை ரயில் பயணம். அவன் கையில் இந்த லாப்டாப், செல்பேசி, வேர்க்கடலை கூட புதுசுதான் வேர்க்கடலை போன வாரம் அவர்கள் நிலத்தில் விளைந்தது. அம்மா வறுத்து பிளாஸ்டிக் பையில் கட்டியிருந்தாள். லாப்டாப் பெங்களூரில் ஒரு ஐ.டி கம்பெனியில் போன வாரம் அவன் வேலைக்குச் சேர்ந்த போது கொடுத்தார்கள். அப்பா, அம்மாவுடன் ஊரே திரண்டுவந்து பார்த்து விட்டு தொடுத்த, "எம்புட்டு இருக்கும்?" போன்ற கேள்விகளுக்கு எல்லாம் பதில் சொல்லிவிட்டுக் கிளம்பும் போது, அப்பா போன வாரம் இன்ஸ்டால்மெண்டில் வாங்கிய செல்பேசியைக் கொடுத்தார். ஊருக்கு போய் கனக்ஷன்

கொடுக்கவேண்டும்என்றுநினைத்துக்கொண்டான்.

பெங்களூருக்கு முதல் தடவை பஸ்ஸில் பயணம்; அதற்குப் பிறகு எப்படிப் போக வேண்டும் என்ற பயத்தினால் தூக்கம் வரவில்லை. ஓசூர் வந்தபோது பயத்துடன் மழையும் சேர்ந்துக்கொண்டது. "சில்க்போர்டில் இறங்கி பி.டி.எம் வாட்டர் டாங் என்று சொல்லி

ஆட்டோ பிடித்து வா" என்ற ஒற்றை வாக்கியத்தை நம்பி சில்க்போர்ட்டில் இறங்கிய போது அதிகாலை 3:15 மணி இருக்கும். ஏன் இவ்வளவு சீக்கிரம் வந்துவிட்டது என்று தோன்றியது. மழையினால் சாலை அலம்பிவிட்ட மாதிரி பளபளத்தது. தூரல் கொஞ்சம் பலமாக அடிக்கத் துடங்கியது.

கூட்டமாக ஆட்டோ டிரைவர்கள் சூழ்ந்துக்கொண்டு "எங்கே போகனும்" என்று மாறி மாறி கன்னடம், ஹிந்தியில் கேட்க..

"பி.டி.எம்"

"போகலாம், 200 ரூபாய் தாங்க." என்றார் தமிழ் கொஞ்சம் தெரிந்த ஒரு ஆட்டோடிரைவர்.

செந்திலிடம் மொத்தம் ஆயிரம் ரூபாய் தான் இருந்தது. அதிர்ச்சியில் பேசாமல் இருக்க இன்னொரு ஆட்டோ பக்கத்தில் வந்து 180 என்றது.

செந்தில் பெங்களூர் வருவது இது இரண்டாம் முறை. சென்ற வாரம் வேலைக்கு முதல்முறை ரயிலில் அப்பாவுடன் வந்துவிட்டான். இந்தமுறை பஸ்ஸில் மூவானூரிலிருந்து வந்த செந்திலுக்கு கன்னடம், ஹிந்தி தெரியவில்லை, தன்னுடைய சுமாரான ஆங்கிலத்தில் பேசக் கூச்சமாக இருந்தது. என்ன செய்யலாம் யாரிடம் கேட்கலாம் என்று திகைத்தான்.

"ஹாய்" என்று குரல் கேட்டு திரும்பிய போது ஒரு பைக் அவன் பக்கம் வந்து நின்றது. ஹெல்மெட் கண்ணாடியை மேலே தூக்கிவிட்டு "நான் பி.டி.எம் தான் போகிறேன் — ஐவில் டிராப், பின்னாடி ஏறிக்கோ" என்றான் அதை ஓட்டியவன்.

"நன்றி" என்று ஆட்டோபடையிடம் தப்பித்த சந்தோஷத்தில் செந்தில் பின்னாடி ஏறிகொண்ட போது பைக் நேராகச் சென்று இடது பக்கம் பி.டி.எம் போகும் பாதையில் திரும்பாமல் வலது பக்கம் சர்ஜாப்பூர் நோக்கிச் சென்றது.

மஞ்சு வண்டியை நிறுத்திவிட்டு கொஞ்சம் தள்ளிப் போய் ஒன்றுக்குப் போகும்போது யாரிடமோ செல்பேசியில் கன்னடத்தில் ஏதோ பேசிவிட்டு தீர்மானித்தவனாக வந்து ஹெட்லைட்டை அணைத்துவிட்டு வண்டியை ஓட்டத் தொடங்கினான். திவ்யா தூங்கிக்கொண்டு இருந்தாள்.

செந்திலுக்கு ஒரே வாரத்தில் பெங்களூரைப் புரிந்துக்கொள்ள முடியவில்லை. மத்தியானம் வெயில், இரவு குளிர், சர்க்கரை சாம்பார் என்று எல்லாம் புதிதாக இருந்தது. கொஞ்சம் தூரம் சென்று பைக் நின்றது. இன்னொருவன் செந்திலுக்கு பின் ஏறிக்கொண்டான். அவனும் "ஹாய்" என்றான்.

"செந்தில்" என்று அறிமுகம் செய்துக்கொண்டான்.

கொஞ்சம் தூரம் போன பிறகு நீல நிறப் பலகையில் பி.டி.எம் என்று எதிர் திசையில் அம்பு குறி போட்டிருக்க சந்தேகத்துடன், "நான் பி.டி.எம் போகணும், நீங்க எங்கே போறீங்க" என்றான். வயிற்றில் லேசாகக் குழப்பமும் கலவரமும் புரண்டு எழுந்தது.

பின்னாடி இருந்தவன் "பேசாம வா, இல்லை" என்று பாக்கெட்டிலிருந்த கத்தியை எடுத்துக் காண்பித்தான். பைக் ஒரு சந்தில் திரும்பியது. மழை கொஞ்சம் அதிகமாகியது.

செந்தில் ஊர் ஐயனாருக்கு கிடா வெட்டுவதாக வேண்டிக்கொண்டான். பைக்கிலிருந்து குதித்து தப்பிக்க வேண்டும் என்று எண்ணிக்கொண்டான்.

திவ்யா திடீர் என்று தூக்கத்திலிருந்து எழுந்து ஜன்னல் வழியாகப் பார்த்து, "என்ன ரூட்டு இது?" என்றாள்.

"சர்ஜாப்பூர் பாலம் வேலை.. திருப்பிவிட்டார்கள்.." என்ற பதிலைக் கேட்டு திவ்யா திரும்பவும் தூங்க ஆயத்தம் ஆனாள். மஞ்சு இதற்கு மேலும் தாமதிக்க கூடாது என்று முடிவு செய்தான்.

திருப்பத்தில் பைக்கின் வேகம் கொஞ்சம் குறைவானதும் செந்தில் குதித்தான். அவன் குதித்ததை எதிர்ப்பார்க்காத அவர்கள் நிலை தவறி சறுக்கி விழ, ஒளி இல்லாமல் வந்த சுமோ அவர்களைத் தட்டிவிட்டுச் சென்றது. பைக் சின்னதாக உறுமிவிட்டு நின்று போனது. இருவரும் கீழே கிடந்தார்கள். மழை மேலும் கொட்டத் தொடங்கியது.

"என்ன ஆச்சு?" என்றாள் திவ்யா

"ஒன்னுமில்ல மேடம் குறுக்கே நாய் ஞ்."

மஞ்சு கொஞ்சம் தூரம் சென்றதும் தயங்கி, நிற்க முயற்சித்துவிட்டுஞ் இதற்கு மேல் இங்கே இருந்தால் ஆபத்து என்று மெயின் ரோடை நோக்கித் திரும்பினான் ஹுல்லிமாவுக்கு.

அம்மா கொடுத்து அனுப்பிய கடலை சிதறியிருந்தது. கீழே கிடந்த லாப்டாப் பையை எடுத்துக்கொண்டு நிமிர்ந்து பார்த்தபோது, இடித்த வண்டி மெயின் ரோட்டில் திரும்பிக்கொண்டிருந்தது. எங்கோ வந்த லாரியின் ஹெட்லைட் வெளிச்சத்தில் "Praise the Lord" என்ற வண்டி பின்புறம் இருந்த ரிஃப்லெக்டர் ஸ்டிக்கர் சில விநாடிகள் ஒளிர்ந்தது.

அறிவோம் தமிழர்

அயோத்திதாசப் பண்டிதர்

'திராவிடன்', 'தமிழன்' என்கிற இரண்டு அரசியல் அடையாளச் சொற்களைத் தமிழகத்துக்கு வழங்கிய பெருமைக்குச் சொந்தக்காரர் பண்டிதர் அயோத்திதாசர் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை என்பது இப்போது தெளிவாகிவிட்டது.

இக்காலத்தில் இந்தக் கருத்து மிகப் புதிதாக தோன்றலாம். திராவிடம் என்ற சொல்லைக் கடுமையாக எதிர்ப்பவர்கள் ஒருபுறமும் அதை ஆதரிப்பவர்கள் மறுபுறமும் இருக்கின்ற அதே நேரத்தில் தமிழன் என்கிற சொல்லை உயர்த்திப் பிடிப்பவர்கள் இருதரப்பிலும் இருக்கின்றார்கள். திராவிடம் என்கின்ற சொல்லைக் கடுமையாக எதிர்ப்பவர்கள் அச்சொல் திராவிட இயக்கத்தின் கொடை என்கின்ற மூட நம்பிக்கையில் இருக்கின்ற காரணத்தினாலும், திராவிட அரசியல் கட்சிகளை எதிர்க்கவேண்டும் என்ற நோக்கத்தினால் வரலாற்று திரிபு செய்து தங்களது எதிர்ப்பை கட்டமைத்துக் கொள்கின்றார்கள்.

அதேநேரத்தில் திராவிடக் கருத்தியலை முன்வைத்தவர்களும் திராவிடம் என்ற சொல்லை அரசியல் சொல்லாடலாக அறிமுகப்படுத்தி பயன்படுத்திய பண்டிதரின் பங்களிப்பையும் நீண்டகாலம் பேசாமலேயே இருந்தார்கள்.

தமிழ்த்தேசியம் பேசுபவர்களுக்கும் திராவிட தேசியம் பேசியவர்களுக்கும் ஒரு மறைக்கப்பட்ட பொருளாகவே பண்டிதர் அயோத்திதாசர் இருந்து வந்தார். இப்போது முதல்வர் ஸ்டாலின் அவர்கள் இந்த தடைகளை எல்லாம் உடைத்து பண்டிதருக்கு உரிய அரசு அங்கீகாரத்தை வழங்கி இருக்கின்றார்.

'திராவிடன்', 'தமிழன்' என்கிற இரண்டு அரசியல் அடையாளச் சொற்களைத் தமிழகத்துக்கு வழங்கிய பெருமைக்குச் சொந்தக்காரர் பண்டிதர் அயோத்திதாசர் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை என்பது இப்போது தெளிவாகிவிட்டது. எனினும் திராவிடர் என்ற சொல்லை பண்டிதர் அயோத்திதாசருடன் பணியாற்றிய ரெவரெண்ட் ஜான் ரத்தினம் அவர்கள் 1887—ம் ஆண்டு 'திராவிட பாண்டியன்' என்கின்ற இதழ் தொடங்கியதோடு 'திராவிடர் கழகம்' என்ற அமைப்பைத் தொடங்கி உருவாக்கியிருந்தார். 'திராவிட பாண்டியன்' இதழில் பண்டிதர் அயோத்திதாசரின் பங்கும் இருந்தது.

அதற்குப்பிறகு 1891—ம் ஆண்டு 'திராவிட மகாஜன சபை'யினைப் அயோத்திதாசர் தொடங்கினார். ஏற்கனவே ரெவரண்ட் ஜான் ரத்தினம் அவர்கள் உருவாக்கிய திராவிட கழகம் சென்னையில் சிறிய அளவில் மட்டுமே இயங்கி மாலை நேரப் பள்ளிகளை நடத்தி வந்தது. பிறகு அவர் ராயப்பேட்டை வெஸ்லி பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பொறுப்பேற்ற பிறகு அந்த அமைப்பின் பணிகள் படிப்படியாக நின்று

போனது. இருந்தாலும் மாலை நேரப் பள்ளிகள் என்கிற செயல்பாடு தமிழகம் முழுவதும் பல்வேறு இயக்கங்களால் முன்னெடுக்கப்பட்டு விரிந்து பரவின. இருந்தபோதிலும், அயோத்திதாச பண்டிதர் திராவிட மகாஜன சபையை பெரும் இயக்கமாக கட்டமைத்தார். அந்த அமைப்பு அன்றைக்கு உருவான காங்கிரஸ் அமைப்போடு நேரடியாகவே மல்லுக்கு நின்றது. பிரிட்டிஷ் அரசாங்கத்தோடு மனுக்கள் மூலமாக கோரிக்கைகளை முன்வைத்து அழுத்தங்களை கொடுத்தது.

திராவிடன் என்ற அடையாளத்தை அப்போது முன்னெடுத்தார்?

இந்த அடையாளத்தை முன்னெடுத்த காலத்தில் மூன்று விதமான இயக்கப் போக்குகள் தமிழகத்தில் உருவாகியிருந்தன. ஒன்று காங்கிரஸ் தலைமையில் உருவாகியிருந்த உயர் சாதியினருக்கான ஒருங்கிணைப்பு. இரண்டாவது, ஆதிதிராவிட மகாஜன சபை; இது நேரடியாகவே தலித் மக்களை முன்னிறுத்தி செயல்பட்ட ஓர் அமைப்பு. மூன்றாவது பண்டிதர் அயோத்திதாசர் உருவாக்கிய திராவிட மகாஜன சபை. ஏறக்குறைய சம காலத்தில் உருவான இந்த இயக்கங்களினால் தமிழகம் மட்டுமன்றி இந்திய அரசியலுக்கான திசை போக்கு தீர்மானிக்கப்பட்டது. மண்ணின் மைந்தர்களாக திராவிடர்களும், சமூக அதிகாரத்தைக் கைகொண்டவர்களாகவும் ஆரியப் பண்பாட்டை கடைபிடிப்பவர்களாகவும் அடையாளப்படுத்திக் கொண்ட காங்கிரஸ்காரர்களும் இருந்தார்கள். இதில் தமிழ்நாட்டுக்கென பொது அடையாளம் ஏதும் முன் வைக்கப்படாத சூழலில்தான்

கௌதம சன்னா

திராவிடர் என்கின்ற அடையாளத்தை அயோத்திதாச பண்டிதர் முன்வைத்தார். அதுமட்டுமின்றி 'பூர்வ தமிழ்க் குடி' என்றும் 'ஆதித்தமிழர்கள்' என்கிற அடையாளத்தையும் முன்வைத்து அவற்றை மக்கள் தொகை கணக்கெடுப்பில் சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கையை அப்போதே முன்வைத்திருந்தார் அயோத்திதாச பண்டிதர். அதற்குப் பிறகு இடையில் பல்வேறு விதமான அரசியல் சமூக



மத நடவடிக்கைகளில் பண்டிதர் அயோத்திதாசர் ஈடுபட்டிருந்தாலும் தமது திராவிடன் — பூர்வ தமிழன் — ஆதிதமிழன் என்கிற அடையாள முன்னெடுப்பை அவர் கைவிடவே இல்லை.

1897 பிற்பகுதியில் தென்னிந்திய பவுத்த சங்கம் அல்லது தென்னிந்திய சாக்கிய சங்கம் என்கின்ற பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தை அவர் உருவாக்கியிருந்தார். அவருடன் இலங்கையைச் சேர்ந்த அனகாரிக தர்மபாலா (இவர்தான் இந்தியாவில் மகாபோதி இயக்கத்தை தொடங்கியவர்) சிங்காரவேலர் (தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்ட் என்று அழைக்கப்படுபவர்) பேராசிரியர் லட்சுமி நரசு (கிறித்துவ கல்லூரி பேராசிரியர்) இந்த பெரும் அறிஞர்கள் இணைந்து பௌத்தத்தை முன்னெடுத்திருந்தனர்.

அனகாரிக தர்மபாலா வடநாட்டில் பௌத்தத்தை மீட்க வேண்டும் என்றும், பிற மதத்தவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த புத்தர் ஞானம் அடைந்திருந்த புத்தகயாவை மீட்க வேண்டும் என்று கிளப்பிப் போய் பணியாற்றத் தொடங்கினார். சிங்காரவேலர் இடதுசாரியாக மாறிக் கொண்டிருந்தார். இருந்தும் பண்டிதர் மறைந்த 1914 வரை அவருடன் தொடர்பில் இருந்தார். பேராசிரியர் லஷ்மி நரசு பௌத்த பரப்புரையுடன் மட்டும் நின்றார்; அறிவுத் தளத்தில் செயல்பட்டார். ஆனால் பண்டிதர் அயோத்திதாசர் மட்டும்தான் பௌத்த மறுமலர்ச்சியை இயக்கமாக கட்டமைத்து அதைச் சாதித்து காட்டினார். எனவே சுமார் 800 ஆண்டுகள் தமிழகத்தில் மறைந்து போயிருந்த பௌத்த மதத்தை மீட்டெடுத்த பெருமை பண்டிதர் அயோத்திதாசரையே சேரும்.

தமது இயக்கத்துக்கென தென்னிந்தியாவின் பல்வேறு இடங்களில் பௌத்த கோயில்கள் எனப்படும் விகாரைகளை உருவாக்கினார். சென்னை பெரம்பூரில் அதற்கென தலைமை பௌத்த விகாரையினை உருவாக்கினார். பெரம்பூர் பேருந்து நிலையத்துக்குப் பக்கத்தில் உள்ள நெல்வயல் சாலையில் இன்றும் இயங்கிக் கொண்டிருக்கும் தென்னிந்திய பௌத்த சங்க விகாரத்தை நாம் காணமுடியும்.

1907—ம் ஆண்டு 'ஒரு பைசா தமிழன்' என்கிற இதழைத் தொடங்கினார் அயோத்திதாசர். இந்த இதழ் ஓராண்டு காலம் நடைபெற்றது. ஒரு பைசா தமிழன் என்றால் ஒரு பைசாவுக்கு கூட மதிப்பதில்லாத தமிழன் என்று பொருள். அந்த அளவுக்கு அன்றைக்கு தமிழன் என்றால் மரியாதை குறைவு என்ற சூழல். அந்த சிந்தனையை மாற்றி, ஒரு பைசாவுக்குக் கூட மதிப்பில்லாத தமிழனாக கருதப்படுகிறவன் எல்லாவற்றையும் சாதிக்கக் கூடியவன் தான் என்கின்ற பொருள்பட 'ஒரு பைசா தமிழன்' என்று பெயர் வைத்திருந்தார். எனவே தமிழன் என்கின்ற செருக்கை தமிழ்ச் சமூகம் அன்றைக்கு எவ்வளவு மோசமாக நினைத்துக் கொண்டிருந்தது என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியும்.

ஒரு பைசா தமிழன் என்கின்ற இந்தச் சொல்லாடல் உருவாக்கப்படுவதற்கு முன்பும் சரி பின்பும் சரி, தமிழன் என்ற அடையாளத்தைத் தமிழ்பேசும் சமூகங்கள் அன்றைக்கு விரும்பவே இல்லை. ஓர் ஒற்றை பொது அடையாளத்துக்குள் வந்தால் தாங்கள் கடைபிடித்துக் கொண்டிருக்கக்கூடிய சாதிபேத அடையாளங்களை முற்றிலும் இழக்க நேரிடுமோ என்ற அச்சத்தினால் தமிழன் என்கிற அடையாளத்துக்குள் தமிழர்கள் வரத் தயங்கினார்கள். அதைக் குத்திக்காட்டும் விதமாகத்தான் அயோத்திதாச பண்டிதர் அவர்கள் ஒரு பைசா தமிழன் என்கின்ற பெயரை வைத்து இதழைத் தொடங்கி நடத்தினார். அவர் எதிர்பார்த்தது போலவே பல்வேறு தளங்களிலிருந்து கடிதங்கள் அவருக்கு வந்தன. ஒரு பைசா தமிழன் என்கின்ற சொல் சரியானது அல்ல, அதை நீங்கள் மாற்ற வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தனர் வாசகர்கள்.

அதன்படி வாசகர்களின் கோரிக்கையை ஏற்று பத்திரிகையின் பெயரை 1908—ம் ஆண்டு 'தமிழன்' என மாற்றி அமைத்தார். இந்திய வரலாற்றில் குறிப்பாக 1920—ம் நூற்றாண்டுகளில் எந்தப் பெயரை சொல்ல மக்கள் தயங்கினார்களோ அதே பெயரை வைக்க வேண்டும் என அந்த மக்களே கோரிக்கை வைக்கக்கூடிய அளவுக்குக் கொண்டு வந்ததுதான் அயோத்திதாச பண்டிதரின் மிகப்பெரிய சாதனை. தமிழன் என்கின்ற சமூக அரசியல் அடையாளத்தை அயோத்திதாச பண்டிதர் நிலைநாட்டி விட்டாலும், யாரெல்லாம் தமிழராக இருக்க முடியும் என்கின்ற வரையறையையும் அவர் அதில் சேர்த்து வைத்திருந்தார். தமிழன் என்றால்

SAKTHI CASH & CARRY

245-247 High Street North,
East Ham,
London E12 6SJ
+44(0)20 8471 4713

SWATHI CASH & CARRY

306-308 High Street North, East Ham,
London E12 6SA
+44(0)20 8586 7648

“சாதி பேதமற்ற திராவிடனே தமிழன்” என்கின்ற வரையறையை அவர் வைத்திருந்தார்.

அவரைப் பொறுத்தவரையில் திராவிடம் என்பது இன ரீதியான பெயர் அல்ல; பௌத்த அடிப்படையில் பொருள் புரிந்து கொண்ட தீராவிடம் (தீரா விஷம்) என்கின்ற சொல்லின் தொடர்ச்சியாகவே அதைப் பார்த்தார். சாதி பேதமற்ற திராவிடர்கள் தான் தமிழர்கள் என்பது அயோத்திதாச பண்டிதரின் வரையறுப்பு என்றால், தமிழர்களின் ஆதி அடையாளம் சாதி பேதமற்ற நிலை அவர் காலத்திய சாதிய அடையாளங்களோடு நேரடியாக மோதியது. சாதி எவ்வளவு புரையோடிவிட்டது என்றால், தமிழன் என்ற அடையாளத்தை மறுக்கக் கூடிய அளவிற்கு சாதி உணர்வுகள் கூர்மை பெற்று இருந்தனர் என்பதற்கும் இதுவே தெளிவான சான்று. ஆனால் தமது முயற்சியில் அவர் தளரவில்லை. தனது கருத்தியல் அடித்தளத்தைத் தமிழன் இதழின் வாயிலாக மிக விரிவாக அவர் உருவாக்கினார். விளைவாக பிற்காலத்தில் தமிழன் மற்றும் திராவிடம் என்கிற இரண்டு சொற்களும் அரசியல் அரங்கில் முதன்மை இடத்தைப் பிடித்தன. ஆனால் அவையிரண்டும் தனித்தனி பொருளில் புரிந்து கொள்ளப்பட்டு அவை பெரும் அரசியல் இயக்கங்களாக தமிழகத்தின் அரசியல் அடித்தளத்தை நிர்ணயிக்கும் இயக்கங்களாக உருமாறின.

இன்று தமிழ் தேசியம் பேசுபவர்கள் திராவிடம் என்ற சொல்லைக் கடுமையாக எதிர்க்கின்ற அதேநேரத்தில் மிக லாவகமாகப் பண்டிதர் அயோத்திதாசர் உருவாக்கிய திராவிடர் குறித்த வரையறையை மறைத்து விடுவார்கள். திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவர்களும் கூட திராவிடம் என்ற சொல் குறித்து பண்டிதர் முன்வைத்த வரப்புகளில் அதிகமாக பேசுவதைத் தவிர்த்து விடுவார்கள். இரண்டு போக்குகளில் இருந்து மீண்டு வருவது என்பது பண்டிதருக்கு எளிதாகப் படவில்லை. ஆனால் தொடர்ந்த விவாதங்களின் மூலமும் கருத்தியல் பரிமாற்றங்களின் மூலமும் வரலாற்று ஆய்வுகளின் மூலமும் இன்றைக்குப் பண்டிதர் தனக்கான அரசியல் அங்கீகாரத்தைப் பெற்றிருக்கின்றார்.

ராயப்பேட்டையில் மருந்து வியாபாரியாகவும், மருத்துவராகவும் வேலைபார்த்து வந்த கந்தசாமியின் மகனாக, சென்னை ஆயிரம் விளக்குப் பகுதியில் தெளிந்து ஓடிக்கொண்டிருந்த கூவம் ஆற்றின் கரையோரம் அமைந்திருந்த மக்கிமாநகர் அல்லது மக்கீஸ் தோட்டம் என்கிற இடத்தில் 1845—ம் ஆண்டு மே 20ம் நாள் பிறந்தவர் காத்தவராயன். வள்ளக்காலத்தி வீ. அயோத்திதாசப் பண்டிதர் என்பவரிடம் வடசென்னை காசிமாநகர் என்று அழைக்கப்பட்ட காசிமேட்டில் கல்வி பயின்றார். மருத்துவம், இலக்கியம், இலக்கணம், சமஸ்கிருதம், சோதிடம் உள்ளிட்ட பாடங்களில் தேர்ச்சிப் பெற்றார். குருவின் மீதிருந்த பக்தியின் காரணமாக தனது பெயரை க.அயோத்திதாசர் என்று மாற்றிக் கொண்டார்.

பாட்டனாருடன் நீலகிரி போனபோது அங்கே தோடர் பழங்குடி பெண்மணி ஒருவரைத் திருமணம் செய்துக் கொண்டார். ஒரு குழந்தை பிறந்தது. பிறவியேலேயே கண்பார்வையற்ற குழந்தை விரைவில் இறந்து போனது. பிறகு மனைவியும் இறந்துப் போனார். எனவே தமிழ்நாட்டைவிட்டு கிளம்பி பர்மாவில் போய் பத்தாண்டுகள் அலைந்து திரிந்தார். பின்பு நாடு திரும்பி நீலகிரியில் அத்வைதானந்த சபை என்னும் அத்வைத மடத்தினை நிறுவினார். அதன் மூலம் சித்த மருத்தவ பரப்புரையும் மேற்கொண்டிருந்தார். கொஞ்சகாலம் கழித்து ரெட்டமலை சீனிவாசனாரின் தமக்கையாரை திருமணம் செய்து கொண்டு மீண்டும் மெட்ராசுக்கே திரும்பினார். 1914 மே மாதம் 5—ம் நாள் மறையும் வரை ராயபேட்டையிலே வசித்து வந்தார்.

தென்னிந்திய சமூக சீர்த்திருத்தத்தின் தந்தையென வர்ணிக்கப்படும் பண்டிதர் அயோத்திதாசர் பிறந்து 175 ஆண்டுகள் ஆகப்போகின்றன. அவர் மறைந்து 107 ஆண்டுகள் ஆகிறது. இத்தனைக் காலம் கடந்து தமிழகத்தின் அரசியல் வரலாற்றின் அடையாள அடிப்படையை வகுத்துக் கொடுத்த அயோத்திதாச பண்டிதருக்குக் கிடைத்திருக்கின்ற அங்கீகாரத்தின் தாமதம் நெடும் போராட்டத்திற்குப் பிறகு நிகழ்ந்திருக்கிறது.

பகவன் புத்தரை குறித்து பண்டிதர் எழுதிய ஒரு சிறு நூலுக்கு அவர் வைத்த தலைப்பு ‘இரவு பகலற்ற ஒளி’ என்பதாகும். அந்தத் தலைப்பையே அயோத்திதாசரின் பணிகளுக்கு முதல்வர் ஸ்டாலின் அவர்கள் அணியாகச் சேர்த்திருந்தார். நிச்சயம் அயோத்திதாசர் அவர்களுடைய பணிகள் இரவு பகலற்ற ஒளி போல ஒளிரும் என நம்புவோம்.

தேவாரம் (ஏழு நூல்கள்)

(கட்டுரை)

நூல் ஆசிரியர்:

புலவர் சு.சடையப்பன்

வெளியீடு:

அருணா பப்ளிகேஷன்ஸ்,

சென்னை – 600049

தொடர்புக்கு: 044 2650 7131,

94440 47790

விலை : ரூ. 2,125



திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் சிவபெருமான் மீது பாடிய பாடல்களே தேவாரம். அவற்றில் முதல் ஏழு திருமுறைகள் தேவாரமே. சம்பந்தர் இயற்றியவை மூன்று திருமுறைகள் அப்பர் இயற்றியவை அடுத்த மூன்று திருமுறைகளாகவும் சுந்தரர் இயற்றியவை ஏழாம் திருமுறையாகவும் அறியப்படுகின்றன. இந்த ஏழு திருமுறைகள் முழுவதும் மூலமும் உரையுமாகத் தனித்தனி நூல்களாக வெளியிடப்பட்டுள்ளன.

மூவரின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம், தேவாரப் பாடல்களின் வழியே உரையாசிரியர் கண்டறிந்த செய்திகள், புதிய பார்வைகள், விளக்கங்கள் ஆகியவையும் இந்த நூல்களில் இடம்பெற்றுள்ளன. இந்த ஏழு நூல்களில் உள்ள 8,227 தேவாரப் பாடல்களுக்கும் உரை எழுதியிருப்பவர் சு.சடையப்பன். சமய நூல்களைத் தொடர்ந்து வெளியிட்டுவரும் அருணா பதிப்பகம், இந்த ஏழு நூல்களைக் கொண்ட தொகுப்பைக் கெட்டி அட்டையில் சிறப்புற வெளியிட்டுள்ளது.

புதினம்

சிவகாமியின்

மூன்றாம் பாகம் : பிக்ஷுவின் காதல்

"வாழி நீ மயிலே!" 13

ஆயனரும் சிவகாமியும் அந்த விஸ்தாரமான சபா மண்டபத்துக்குள் பிரவேசித்த போது மண்டபத்தில் வீற்றிருந்தவர்கள் அத்தனை பேருடைய கண்களும் அவர்கள் மீது சென்றன. அளவில்லா வியப்பும் குதூகலமும் ஆவலும் அந்த ஈராயிரம் கண்களிலேயும் ததும்பின.

சபையில் அப்போது வீற்றிருந்தவர்களில் ஒருசிலர் ஒன்றரை வருஷத்துக்கு முன்னாலே அதே மண்டபத்தில் நடந்த சிவகாமியின் அரங்கேற்றத்தின் போது அங்கே பிரசன்னமாயிருந்தவர்கள். மற்றும் அநேகர் அந்த அரங்கேற்றத்தைப் பற்றிக் கேள்வியுற்றிருந்தவர்கள். சிவகாமியின் அரங்கேற்றம் அந்த மண்டபத்தில் நடந்து கொண்டிருந்த சமயத்திலேதான் முதன் முதலில் புலிகேசியின் படையெடுப்பைப் பற்றி செய்தி கிடைத்ததென்பதையும், அதனால் அரங்கேற்றம் தடைப்பட்டதென்பதையும், அவர்கள் எல்லோரும் நினைவு கூர்ந்தார்கள். அந்தத் தடைக்குக் காரணமான புலிகேசிச் சக்கரவர்த்தி அச்சமயம் அந்தச் சபையில் வீற்றிருக்கும் அதிசயத்தை எண்ணியபோது அவர்கள் எல்லாருடைய கண்களும் மாறி மாறிச் சிவகாமியையும் புலிகேசியையும் நோக்குவனவாயின.



ஆயனரும் சிவகாமியும் சபா மண்டபத்துக்குள் பிரவேசித்து வரும் காட்சியைப் பார்த்தவுடன், எல்லாரையும் போல் வாதாபி மன்னரும் சிறிது நேரம் பிரமிப்பில் ஆழ்ந்திருந்தார். அஜந்தா மலையின் ஆழ்ந்த குகைக்குள்ளே அவர் கண்டிருந்த அற்புத வர்ண சித்திர உருவங்களில் ஒன்றுதான் உயிர் பெற்று எழுந்து தம் கண் முன்னால் நடந்து வருகிறதோ என்று அவருக்குத் தோன்றிற்று. சௌந்தரியவதிகளான எத்தனையோ பெண்களை அவர் பார்த்ததுண்டு. ஆனால், இம்மாதிரி நடையழகு வாய்ந்த பெண்களைப் பார்த்தது கிடையாது. சிவகாமி நடந்து வந்த போது அவளுடைய பாதங்கள் பூமியில் பட்டனவோ படவில்லையோ என்று தெரியாதபடி நடந்தாள். சங்கீதக் கலையின் உயிர்த் தத்துவத்தை உணர்ந்து புலவன் பாடும் போது இசை எப்படி ஒவ்வொரு ஸ்வரமும் தனித்தனியாகவும் அதே சமயத்தில் ஒன்றோடொன்று இழைந்தும் கேட்கப்படுகிறதோ, அதுபோல் சிவகாமி நடந்த போது, அவள் அடிகள் எடுத்து வைக்கிறாளோ அல்லது பூமிதான் அவளுடைய பாதங்களுக்குக் கீழே நழுவிச் சென்று கொண்டிருக்கிறதோ என்று தோன்றியது. சபா மண்டபத்திலிருந்த அத்தனை பேருடைய கண்களுக்கும் சிந்தனைக்கும் வேலை கொடுத்துக் கொண்டு பிரவேசித்த சிவகாமியோ, அவ்விதம் எல்லோருடைய கவனத்துக்கும் கண் நோக்கும் தான் ஆளாகியிருப்பதை உணர்ந்ததாகத் தெரியவில்லை. உயர் குலத்துப் பெண்டிருக்குரிய இயற்கையான நாணத்தினால் சிறிதளவு தலைகுனிந்த வண்ணம் அவள் நடந்து வந்தாள். அவளுடைய உள்ளத்தில் அல்லும் பகலும் குடிகொண்டிருந்த கம்பீர முகத்துக்குரியவர் அந்தச் சபையில் எங்கே இருக்கிறார் என்று தெரிந்து

கொள்ள அவளுக்கு அளவற்ற ஆவல் இருந்தது. எனினும், அந்த ஆவலைப் பெருமுயற்சி செய்து அவள் அடக்கிக் கொண்டு இயல்பாக எதிரே பார்த்துக் கொண்டு நடந்தாள்.

இரண்டு சக்கரவர்த்திகளும் வீற்றிருந்த இடத்துக்கு அருகில் வந்ததும், ஆயனர் கும்பிட்டு நிற்க, சிவகாமி நமஸ்கரித்து நின்றாள்.

மகேந்திர பல்லவர், "ஆயனரே! உமது புதல்வி சிவகாமியின் நாட்டியக் கலைத் திறமையின் புகழானது நெடுந்தூரத்துக்கு நெடுந்தூரம் பரவி வாதாபிச் சக்கரவர்த்தியின் காது வரையில் எட்டியிருக்கிறது. இதோ இன்று நமது அருமைச் சிநேகிதராக வீற்றிருக்கும் சத்யாச்ரய புலிகேசி மன்னர் சிவகாமியின் நடனத்தைப் பார்க்க விரும்புகிறார். அதற்காகவே உங்களை இவ்வளவு அவசரமாகக் கூட்டி வரச் செய்தேன். சிவகாமியினால் இப்போது உடனே நடனம் ஆட முடியுமா? உம்முடைய விருப்பம் என்ன?" என்று வினாவிய போது, ஆயனர், "மகாப் பிரபு! தங்களுடைய கட்டளை எதுவோ, அதுதான் என்னுடைய விருப்பம். சிவகாமிக்கு, அவளுடைய கலைத் திறமையைக் காட்டுவதற்கு இதைக் காட்டிலும் சிறந்த சபையும் சந்தர்ப்பமும் எங்கே கிடைக்கப் போகிறது? இரண்டு மாபெருஞ் சக்கரவர்த்திகளும் இரண்டு சூரியர்களைப் போலவும் இரண்டு தேவேந்திரர்களைப் போலவும் ஏக காலத்தில் கூடியிருக்கிறீர்கள்!" என்று சொல்லி விட்டுச் சிவகாமியை நோக்கினார்.

முதலில் மகேந்திர பல்லவர் பேசிய போது, சிவகாமி சிறிது தலைநிமிர்ந்து அரைக்கண்ணால் வாதாபிச் சக்கரவர்த்தியைப் பார்த்தாள். பிறகு, அவளுடைய கண்கள் கட்டுக்காவல்களை உடைத்துக் கொண்டு, இரண்டு சக்கரவர்த்திகளின் சிம்மாசனங்களையும் சுற்றிச் சிறிது தூரத்துக்கு வட்டமிட்டன. ஆனால் அவை அடைந்தது ஏமாற்றந்தான். சிவகாமியின் கண்கள் தேடிய வீர சௌந்தரிய வதனம் அங்கே தென்படவில்லை. "ஆ! அவர் எங்கே? ஏன் சக்கரவர்த்திக்கு அருகில் அவர் காணப்படவில்லை?" என்று அவளுடைய உள்ளம் பதைபதைத்தது. சில கண நேரத்திற்குள் பற்பல எண்ணங்கள் மின்னலைப் போல் தோன்றி மறைந்தன. ஏதாவது அவருக்கு விபத்து நேர்ந்திருக்குமோ? இராது, இராது இராது. அப்படி இருந்தால், மகேந்திர பல்லவர் இந்த வைபவத்தை நடத்துவாரா?

"மிக்க சந்தோஷம் ஆயனரே! அதோ வாத்தியக் கோஷ்டியும் ஆயத்தமாயிருக்கிறது. உங்களுக்காகவே இந்தச் சபையை இவ்வளவு நேரம் வளர்த்திக் கொண்டிருந்தோம்!" என்றார் மகேந்திர பல்லவர்.

சிவகாமி தான் நின்ற இடத்திலிருந்து நடன வட்டத்துக்குப் போகத் திரும்பிய போது, மீண்டும் அவளுடைய கண்கள் ஒருமுறை சுற்றிச் சுழன்றன. அப்போது அவளுடைய பார்வை தற்செயலாகப்

புலிகேசியின் முகத்தில் விழுந்தது. வெறித்து நோக்கிய புலிகேசியின் கொடுங் கண்களைச் சந்தித்த போது திடீரென்று வீசிய வாடைக் காற்றில் அடிபட்ட மல்லிகைக் கொடியைப் போல அவளுடைய உள்ளம், உடம்பு எல்லாம் சில்லிட்டு நடுநடுங்கின. இது ஒரு வினாடி நேரந்தான். அகாரணமாகத் தோன்றிய அந்த உணர்ச்சியை எப்படியோ சிவகாமி சமாளித்துக் கொண்டு நடன வட்டத்தை நோக்கி நடந்தாள். அப்போது இன்னதென்று சொல்ல முடியாத அருவமான நிழல் போன்ற ஞாபகம் ஒன்று அவளைப் பின்தொடர்ந்து சென்றது.

நடன வட்டத்தில் சென்று நின்றதும் சிவகாமி மேற்கூறிய நிழல் ஞாபகத்தை உதறித் தள்ளிவிட்டு ஆட்டத்துக்கு ஆயத்தமானாள். அப்போது அவள் தன்னடக்கத்துக்குப் பங்கமில்லாமல் அந்த மகாசபையின் நாலாபுறத்திலும் கண்ணைச் சுழற்றிப் பார்த்தல் சாத்தியமாயிருந்தது. மண்டபத்தின் மேல் மச்சு மாடங்களிலே சக்கரவர்த்தினியும் மற்ற அந்தப்புரத்து மாதர்களும் வீற்றிருப்பது அவள் பார்வைக்குப் புலனாயிற்று. முன்னொரு நாள் அதே மண்டபத்தில் நடந்த அரங்கேற்றத்தின் போது இன்று போலவே மாமல்லரைக் காணாமல் முதலில் தான் ஏமாற்றமடைந்ததும், பிற்பாடு அவர் தாய்மார்களுடன் மேல் மாடத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்ததாகத் தெரியப்படுத்தியதும் நினைவு வந்தன. இன்றைக்கும் அவர் அவ்வாறே தன் கண்ணுக்குத் தெரியாத ஏதோ ஒரு மறைவான இடத்திலிருந்து தன்னுடைய நடனத்தைப் பார்த்துக் கொண்டிருப்பதாக அவளுக்குத் தோன்றியது. இந்த எண்ணம் ஏற்பட்டதும் இதற்கு முன் அவளுக்கு ஏற்பட்டிருந்த ஏமாற்றம், சோர்வு, மனக் கலக்கம், நடுக்கம் எல்லாம் மாயமாய் மறைந்து போயின. நடனமும் உடனே ஆரம்பமாயிற்று.

நடனம் ஆரம்பமாகிச் சிறிது நேரத்துக்கெல்லாம் அச்சபையில் இருந்தவர்கள் எல்லாம், அது ஒரு இராஜ சபை என்பதையும், அதில் ஒரு பெண் நடனமாடுகிறாள் என்பதையும், தாங்கள் அங்கேயிருந்து அதைப் பார்க்கிறோம் என்பதையும் மறந்தே போனார்கள். இந்த ஜட உலகத்தையே விட்டு விட்டு அனைவரும் ஒரு புதிய ஆனந்தக் கனவுலகத்துக்கே போய் விட்டார்கள்.

நடனம் ஆரம்பமாகும் சமயத்தில் சிவகாமி தெளிந்த தன்னுணர்ச்சி பெற்றிருந்தாள். தன் வாழ்க்கையிலேயே அது ஒரு முக்கியமான தினம் என்றும், அன்று தான் ஆடப் போகும் நடனம் தன் வாழ்க்கையில் ஒரு முக்கிய சம்பவம் என்றும் உணர்ந்திருந்தாள்.

கன்னி சிவகாமியின் உள்ளத்தில் அலைமோதிக் கொண்டிருந்த இரு பேருணர்ச்சிகளில் ஒன்று மாமல்லர் மேல் கொண்ட காதல் என்பதையும், இன்னொன்று நடனக் கலை மீது அவளுக்கிருந்த பிரேமை என்பதையும் முன்னமே பார்த்திருக்கிறோம்.

இப்போது இங்கே கூடியிருப்பது போன்ற ஒரு மகா சபை தனது கலைத் திறமையைக் காட்டுவதற்குக் கிடைப்பது மிகவும் அரிது என்பதை ஆயனரைப் போல் அவளும் உணர்ந்திருந்தாள்.

அன்றியும் சிவகாமிக்குத் தன்னுடைய கலைத் திறமை முழுவதையும் அந்தச் சபையில் காட்ட வேண்டுமென்ற ஊக்கம் ஏற்படுவதற்கு இன்னொரு முக்கிய காரணமும் இருந்தது.

மகேந்திர பல்லவர் மற்ற விஷயங்களில் எவ்வளவு கடின சித்தராயிருந்தபோதிலும், கலைகளுக்கு மனம் உருகக் கூடியவர். தன் கலைத் திறமையினால் அவருடைய நன்மதிப்பைக் கவர வேண்டும். தான் மாமல்லரை மணந்து கொள்வதற்கு அவர் தடை சொல்லாதபடி செய்ய வேண்டும். வயிர நெஞ்சமுள்ள ஒரு மகா சக்கரவர்த்தியின் மனத்தை மாற்றித் தன் விருப்பத்துக்கிணங்கும்படி செய்வதற்குத் தன்னிடம் உள்ள ஒரே ஆயுதம் நடனக் கலையே அல்லவா?

எனவே, அன்றைக்குத் தன்னுடைய நடனம் பரத நாட்டியத்தின் சரித்திரத்திலேயே ஓர் அற்புத சம்பவமாயிருக்க வேண்டுமென்று சிவகாமி சங்கற்பம் செய்து கொண்டாள். ஆனால் இத்தகைய தன்னுணர்ச்சியெல்லாம், சிவகாமி ஆட்டத்தைத் தொடங்கும் வரையிலேதான் இருந்தது. ஆட்டம் ஆரம்பமாயிற்றோ, இல்லையோ, இத்தனை காலமும் சிவகாமியின் உள்ளத்தில் குமுறிக் கொண்டிருந்த கலை உணர்ச்சியானது பொங்கிப் பெருகத் தொடங்கியது. சிவகாமி தான் என்னும் உணர்ச்சி அற்றுக் கலை வடிவமாகவே மாறி விட்டாள். பின்னர் சிவகாமி நடனம் ஆடவில்லை; நடனக் கலையானது அவளை ஆட்கொண்டு ஆட்டுவித்தது.

சிவகாமியின் உள்ளமானது நாட்டியக் கலையின் அம்சங்களாகிற தாளங்களையும், ஜதிகளையும், அடைவுகளையும், தீர்மானங்களையும் பற்றி எண்ணவில்லை. அந்தத் தாளங்கள், ஜதிகள், அடைவுகள், தீர்மானங்கள் எல்லாம், அவை அவை அந்தந்த இடத்தில் ஓடி வந்து சிவகாமிக்குச் சேவை செய்தன.

சிவகாமியின் உள்ளம் ஆனந்த வெளியிலே மிதந்து கொண்டிருந்தது. அவளுடைய தேகமோ எல்லையற்ற ஆனந்த வெள்ளத்திலே அனாயாசமாக மிதந்து கொண்டிருந்தது. பார்த்துக் கொண்டிருந்த சபையோர்களும் ஆனந்த சாகரத்தில் மிதக்கலாயினர். பரத நாட்டிய வினிகையில் முதற் பகுதியான 'நிருத்தம்' முடிவடைந்த போதுதான் சபையோர் தாங்கள் சஞ்சரித்த

ஆனந்தக் கனவுலோகத்திலிருந்து பூவுலகத்துக்கு வந்தனர்.

அப்போது சபையின் நானா புறங்களிலிருந்தும் பிரமாதமான கரகோஷம் எழுந்தது. அவ்விதம் கரகோஷம் செய்து தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தவர்கள் இரு சக்கரவர்த்திகளும் கூடத்தான்.

நடனம் ஆரம்பிப்பதற்கு முன்னால், சிவகாமியும் ஆயனரும் மகேந்திர சக்கரவர்த்தியிடம் கட்டளை பெற்றுக் கொண்டு நடன வட்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது, வாதாபி மன்னர் மகேந்திர பல்லவரைப் பார்த்து, "இதென்ன? இவர்களுக்கு இவ்வளவு மரியாதை செய்கிறீர்களே? எங்கள் நாட்டிலே சாட்டையினால் அடித்து நடனம் ஆடச் சொல்வோம்!" என்றார்.

"சத்யாச்ரயா! எங்கள் நாட்டில் அப்படியில்லை. இங்கே கலைகளுக்கும் கலைஞர்களுக்கும் நாங்கள் மிக்க மரியாதை செய்கிறோம். இராஜ்யம் ஆளும் மன்னர்களையும் சக்கரவர்த்திகளையும் போலவே கலை உலகிலும் இங்கே அரசர்களும் சக்கரவர்த்திகளும் உண்டு. 'சிற்ப சக்கரவர்த்தி', 'கவிச் சக்கரவர்த்தி' என்ற பட்டங்கள் அளிக்கிறோம். ஆயனர் 'சிற்ப சக்கரவர்த்தி' என்ற பட்டம் பெற்றவர். இராஜ்யம் ஆளும் சக்கரவர்த்திகளுக்குச் செய்யும் மரியாதையை மக்கள் இவருக்கும் செய்கிறார்கள்" என்றார்.

"அழகாய்த்தானிருக்கிறது உங்கள் நாட்டின் வழக்கம்!" என்று பரிகசித்தார் வாதாபி மன்னர்.

சிவகாமியின் நிருத்தம் முடிந்தவுடனே வாதாபிச் சக்கரவர்த்தியும் மற்றவர்களைப் போல் கரகோஷத்தில் ஈடுபட்டதைக் கண்ட மகேந்திர பல்லவர், "இப்போது என்ன சொல்கிறீர்கள்? கலைஞர்களுக்கு மரியாதை செய்வது பற்றி உங்களுடைய அபிப்பிராயத்தை மாற்றிக் கொண்டீர்களா?" என்று கேட்டார்.

"நடனம் அற்புதமாய்த்தானிருக்கிறது; இம்மாதிரி நான் பார்த்ததேயில்லை. ஆனாலும்...." என்று கூறி இடையில் நிறுத்தி விட்டுப் புலிகேசி ஏதோ யோசனையில் ஆழ்ந்தார்.

அன்று அபிநயத்துக்குச் சிவகாமி முதன் முதலாக எடுத்துக் கொண்டு பாடல் செந்தமிழ் நாட்டின் ஆதிதேவதையான வேலனைப் பற்றியது.

வேலன் தன்னிடம் பக்தி கொண்ட பெண்ணுக்கு, "நான் திரும்ப வந்து உன்னை ஆட்கொள்கிறேன்!" என்று வேலின் மீது ஆணையிட்டு வாக்களித்திருக்கிறான். ஆனால் அவ்வாக்குறுதியை அவன் நிறைவேற்றவில்லை. அதனால் அந்தப் பெண் ஏமாற்றமும் மனத் துயரமும் அடைகிறாள். அந்த நிலைமையிலும் வேலனிடத்தில் கோபங்கொள்ளவோ, அவன் மீது குறை சொல்லவோ அவளுக்கு விருப்பமில்லை. எனவே, குற்றத்தையெல்லாம் வேலனுடைய வாகனமாகிய மயிலின் மீது போடுகிறாள். மயிலை நிந்திக்கிறாள்; கோபிக்கிறாள்; பலவிதமாகவும் இடித்துக் காட்டுகிறாள்.

இந்தக் காலத்தில், 'ஆனந்த பைரவி' என்றும் வழங்கும் பழமையான ராகத்தில், நடனத்துக்கும் அபிநயத்துக்கும் ஏற்ற தாளத்துடன் அமைந்த பாடல் பின்வருமாறு:

மறவேன் மறவே னென்று வேலின்மேல் ஆணையிட்ட
மன்னரும் மறப்பாரோ — நீல மயிலே!(மற)
உருகி உருகி உள்ளம் அவரை நினைவதையும்
உயிரும் கரைவதையும் — அறியாரோ மயிலே?(மற)
அன்பர் வரவு நோக்கி இங்குதான் காத்திருக்க
அன்னநடை பயில்வாயோ — வண்ண மயிலே!
பெம்மான் உன் மேலே வரும் பெருமிதம் தலைக்கேறிப்
பாதையை மறந்தாயோ — பேதை மயிலே!
வன்மம் மனதில் கொண்டு வஞ்சம் தீர்க்க நினைந்து
வழியில் உறங்கினாயோ — வாழி நீ மயிலே!(மற)
தன்னிகரில்லாதான் தனயர்பால் மையல் கொண்ட
மங்கைமீ திரங்காயோ — தங்க மயிலே!
சொன்னாலும் நீ அறியாய் சொந்த அறிவுமில்லாய்
உன்னை நொந் தாவதென்ன? — வன்கண் மயிலே!
மன்னும் கரிபரிகள் புவியில் பல இருக்க
உன்னை ஊர்தியாய்க் கொண்டோர் — தன்னையே நோகவேணும்(மற)

(சபதம் தொடரும்)

சூழல் காத்தல் தலையாய கடமை

புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை வாய்மையால் காணப் படும்' என்ற வள்ளுவன் குறளுக்கு ஏற்ப தூய்மை என்பது நமக்கு மிகவும் அவசியம். புறந்தூய்மையான சுற்றுச்சூழல் தூய்மை மிகவும் முக்கியமாகும்.

பூ'மி அழகானது! அனைத்து உயிர்களின் வாழ்விடமாக, சூரிய குடும்பத்துக்குள் உயிர்களின் பிறப்பிற்குரிய வீரிய கோளாக அண்ட வெளியில் உலவி வருவது இயற்கையின் அதிசயம். வானியல் அறிஞர்களும், அறிவியல் ஆராய்ச்சியாளர்களும் இரவு பகலாகக் கண்விழித்து பூமிபோல வாழ்வதற்கு இணக்கமாக இன்னொரு கோள் இந்த பிரபஞ் சத்தில் வேறெங்காவது இருக்கிறதா என ஆய்வு செய்து வருகின்றனர். அப்படி எந்தக்கோளும் இருப்பதாக இதுவரை உறுதி செய்யப்படவில்லை.

இத்தனை அதிசயத்தையும், அற்புதத்தையும், மகத்துவத்தையும், அரிய தன்மையையும் தன்னகத்தே கொண்டுள்ள பூமி இங்கு வாழும் லட்சக் கணக்கான வகைகளைக் கொண்ட பலவகை உயிர்களுக்கும் பொதுவானது. அதை நாமே ஆட்கொண்டு, அபகரித்து, துடைத்தழித்து துவம்சம் செய்வதில் என்ன பெருமை இருக்கப்போகிறது.

நம் சந்ததியினருக்கு மிகப்பெரிய செல்வங்களாக, மனை, மாடு, மக்கள், மண், பொன், பொருள் என எல்லாவற்றையும் சேர்த்து வைத்துச்செல்ல வேண்டும் என நினைக்கிறோம். ஆனால் கிடைத்தற்கரிய, மனிதனால் செயற்கையாக உருவாக்க முடியாத இயற்கைச் செல்வத்தை அப்படியே, சிந்தாமல் சிதறாமல் அடுத்த தலைமுறைக்கு கொண்டுபோய் சேர்க்கும் பொறுப்பு ஒவ்வொரு பிறவிக்கும் உண்டு என்பதை மறந்து விடுகிறோம். நதிக்கரை ஓரம் நாகரிகம் பிறந்ததென்று படித்தோம் அன்று; ஆற்றங்கரைகளை ஆக்கிரமித்தல், அபகரித்தல், ஆற்று நீரில் தொழிற்சாலைக் கழிவுகளை கலந்துவிடுதல் என்று அநாகரிகத்தின், அட்டூழியத்தின் தொட்டிலாக, அபாயத்தின் கட்டிலாக, குப்பை கொட்டிலாக நதிக்கரை மாறிவிட்டது இன்று. ஆற்று மணலை தோண்டி ஊற்று நீர் பருகினோம் அன்று; ஆற்றுமணலைத் தோண்டி ஆதாயம் பார்க்கிறோம் இன்று. விளைநிலங்கள் விலைநிலங்களாக மாறி வீட்டு மனைகளாக உருவெடுத்தன. மலைகள் கல்குவாரிகளாக குடைந்தெடுக்கப்பட்டன. குளிர் சோலைகளும், தளிர் மரங்களும் தார்சாலைகளாலும், கான்கீரீட் காடுகளாலும் கபளீகரம் செய்யப்பட்டன. குளங்கள் குடியிருப்புகளாயின, ஏரிகள் ஏரியாக்களாக பரிணாம வளர்ச்சி பெற்றன. தொழிற்சாலை மண்ணை மலடாக்கியது; காற்றை நஞ்சாக்கியது; நீரை பாழாக்கியது.

ஒன்று இன்னொன்றை சார்ந்து வாழும் உணவுச் சங்கிலியை உடைந்தெறிந்த பெருமை மனிதனை அல்லது பருவகால மாற்றங்களைச் சாரும். காற்று மாசடைவது, வெப்பநிலை உயர்வது, முறையற்ற பெருமழை, புயல் காற்று, வறட்சி, பூமித்தட்டுகள் இடம் பெயர்தல், பனிப்பாறைகள் உருகுவது, ஓசோன் படலம் அழிவது, பசுமை இல்ல வாயுக்களின் வேறுபாடு, கடல் மட்டம் உயர்வது,



முனைவர்
பா. சக்திவேல்

நிலத்தடி நீர் குறைதல், சுரங்கம் அமைப்பதில் மூலம் தாதுக்கள் வெளிக்கொணர்தல், நிலக்கரி, பெட்ரோல் உள்ளிட்ட எரிபொருள் எடுத்தல், காட்டுத்தீ என அனைத்தும் விளைவது மனிதனின் செயல்பாடுகளால்தான்.

நகரமயமாக்கல்,பொருளாதாரா சிறப்புமண்டலம் அமைத்தல், தொழில்நுட்ப பூங்கா அமைத்தல், அணு உலைகளை அணிவகுக்கச் செய்தல், அணைக்கட்டு கட்டுதல், சுரங்கம் அமைத்தல் என்கிற பெயர்களில் காடும் காடு சார்ந்த இடமும், நீர் நிலைகளும், கடலோர பகுதிகளும் பெரிதும் வளைத்தெடுக்கப்படுகின்றன. முன்னேற்றம், வளர்ச்சி, மேம்பாடு இவை எதுவுமே இயற்கை வளங்களை அழித்து கட்டமைக்கப்படக்கூடாது. எந்த இயற்கை வளத்தையும் சிதைக்காத வளர்ச்சியைத்தான் 'வளங்குன்றா வளர்ச்சி' என அழைக்கின்றார்கள். இதைச் சார்ந்தே உலகத்தில் உள்ள எந்த ஒரு நாட்டின் வளர்ச்சித் திட்டங்களும், அடிப்படைக் கட்டமைப்பு மேம்பாடுகளும் அமையவேண்டும். கடந்த நூற்றாண்டில் உலகத்தில் இருந்த மொத்த சதுப்பு நிலங்களில் பாதியை நாம் இழந்து விட்டோம். 2050—ஆம் ஆண்டுக்குள் 90% பவளப்பாறைகளை இழந்து விடுவோம் என புவிவெப்பமயமாகுதல் குறித்த தனது அச்சத்தை ஐ.நா சபை வெளியிட்டுள்ளது. இந்த அழிவிலிருந்து இயற்கையை மீட்டெடுக்க வேண்டியது மனித குலத்தின் தலையாய கடமை. இதனை மையமாகக் கொண்டுதான் 'ஒரே ஒரு பூமி' என்ற வாசகம், இந்த ஆண்டின் உலக சுற்றுச்சூழல் நாள் கோட்பாடாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் பாதிப்பு

நிலம், நீர், காற்று, நெருப்பு, வானம் இந்த ஐந்தை சுற்றி தான் சுற்றுச் சூழல் செயல்படுகிறது. முதலில் நிலத்தில் விதை மட்டும் விதைத்தோம். தற்போது பிளாஸ்டிக் என்ற எமனை சேர்த்து புதைப்பதால் நிலத்தில் மலட்டுத்தன்மை ஏற்பட்டு விட்டது.

தொழிற்சாலை கழிவுகளில் இருந்து வெளியேறும் நச்சு விஷத்தன்மை மண்ணையும் நீரையும் ஒரு சேர நாசமாக்குகிறது. பிளாஸ்டிக், பாலிதீன் பைகளை விளை நிலங்களில் கொட்டுவதாலும், காற்றின் மூலம் அவை அடித்து செல்லப்படுவதாலும், அது மக்க பல வருடம் ஆகின்றன. நிலத்தில் புதையுண்ட பிளாஸ்டிக் முலம் விவசாய நிலங்கள் மாசுபட்டு வீரியமிக்க செடி, கொடிகள் வளர்ச்சி தன்மையை இழந்து விடுகின்றன. நிலத்தில் இயற்கை உரங்களுக்கு பதிலாக செயற்கை உரங்களை பயன்படுத்துவதன் விளைவாக

மனிதனின் நோயின் தன்மை நாளுக்கு நாள் அதிகரிக்கிறது.

இன்றைய பெரும்பிரச்னையாக இருப்பது குடிநீர் மாசடைவது. இந்தியாவில் நல்ல நீரை விட சாக்கடை நீர் அதிகமாக ஓடுகிறது.ஆய்வின் அடிப்படையில் இந்தியாவில் 4 சதவீதம் நன்னீர் மட்டுமே உள்ளன. அதைவிட தமிழ்நாட்டில் 3.5 சதவீதம் நன்னீர் அளவு இருப்பது எவ்வளவு தூரம் தண்ணீர் சுற்றுச்சுழலில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. ஒவ்வொரு மனிதனுக்கும் சராசரி ஒரு நாளைக்கு பயன்படுத்த குறைந்தது ஐந்து லிட்டர் தண்ணீர் தேவைப்படும். அந்த நீரை ஆறு, கிணறு, ஏரிகள், குளம், ஆழ்துளைக் கிணறுகள் மூலம் எடுக்கிறோம். அந்த நீர் இன்று மாசுப்பட்டுள்ளது. இந்தநீரை குடிப்பது மூலம் குடல் நோய்களும், மனிதனுக்கும், பறவைகளும், விலங்குகளுக்கும் தோல் நோய்களும் ஏற்படுகிறது.

சுவாசிக்கும் காற்று

நாம் சுவாசிக்கும் காற்றும் மாசு பட்டிருப்பது அபாயகரமானது. தொழிற்சாலைகளில் இருந்து கரியமில வாயுக்கள் வெளிப்பட்டு வான் மண்டலத்தையும் பாதித்து ஓசோன் படலத்தை ஓட்டையாக்குகிறது. பீடி, சிகரெட் புகைப்பதால் அந்த புகை காற்றின் முலமாக மற்ற மனிதர்களுக்கு பரவி நோய்கள் உருவாகின்றன. பல ஆண்டுகளான வாகனங்களின் டீசல் புகையும் சுற்றுச்சூழலுக்கு பெரும்கேடு. தலைநகர் டில்லியில் அதிகமான புகை காரணமாக பழைய வாகனங்களை நகரில் பயன்படுத்த அரசு தடை விதித்து உள்ளது. அவ்வளவு அளவுக்கு புகை மண்டலமாக இந்தியா உருவாகி வருகிறது.

ஒலிமாசும் முக்கியமான விஷயம். வாகன ஒலி,தொழிற்சாலைகள் ஒலியால் மாசு ஏற்படுகிறது. ஒலி அதிகமாக மனிதன் மன அமைதியும்,உடல் நலமும் பாதிப்படைகிறது. செவிப்பறைகள், நரம்பு மண்டலம் பாதிக்கப்படுகிறது. வானம் ஏழு வானவில் கலர்களை விட பல கலராக மாறக் காரணம் சுற்றுச் சூழல் பாதிப்புதான். தொழிற்சாலை புகை மூலம் வானம் இன்னும் கருமேகமாக மாறி வருகிறது. எரிபொருள் மூலமாக வெளிப்படுகின்றன கரித்துகள், கார்பன் மோனாக்சைடு, கால்பன்—டை— ஆக்சைடு, சல்பர் டை ஆக்சைடு, காரீயம் ஆகியவை வளிமண்டலத்தில் சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

நாம் சுவாசிக்கும் காற்றும் மாசுபட்டிருப்பது அபாயகரமானது. தொழிற்சாலைகளில் இருந்து கரியமில வாயுக்கள் வெளிப்பட்டு வான் மண்டலத்தையும் பாதித்து ஓசோன் படலத்தை ஓட்டையாக்குகிறது. பீடி, சிகரெட் புகைப்பதால் அந்த புகை காற்றின் முலமாக மற்ற மனிதர்களுக்கு பரவி நோய்கள் உருவாகின்றன. வீட்டையும் சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும். வீட்டில் உள்ள கழிவு பொருட்களையும், கழிவு நீரையும் முறையாக அகற்றி விட வேண்டும்.



பிளாஸ்டிக், பாலிதீன் பைகளை பயன்படுத்தக்கூடாது.

வாகனம், தொழிற்சாலை புகைகளை குறைக்கிற வழிகளை ஆராய வேண்டும். அரசின் சட்டத்தின் படி தொழிற்சாலைகள் மாசை கட்டுப்படுத்தும் வழிகளை ஆராய வேண்டும் ஒரு மனிதன் தன் வாழ்நாளில் ஒரு மரத்தையாவது நட்டு தன் சந்ததிக்கு விட்டு செல்ல வேண்டும். மரம் நடுவதையும் வளர்ப்பதையும் கடமை என கொள்ள வேண்டும். ஒரு மரத்தை மிகவும் அவசியம் எனக்கருதி வெட்டினால் பத்து மரங்கள் நட வேண்டும்.

நீர்நிலைகளை மாசுபடுத்துபவர்களை கடுமையாக தண்டிக்க வேண்டும். சூற்றுச்சூழலைபாதுகாக்க, இந்த காற்றையும், மண்ணையும், நீரையும் நச்சு சேராமல் காக்க இயற்கையை முதலில் பாதுகாக்கவேண்டும். இயற்கையை இயற்கையாகவே வைத்திருக்க வேண்டும்.

அரியவகை உயிரினங்கள், ஊர்வன, பறப்பன, நீர் வாழ்வன, நுண்ணிய பூச்சி இனங்கள், மூலிகைகள், தாவரங்கள், விலங்குகள் என எத்தனையோ வகையான உயிரினங்கள் இந்த உலகத்தில் முற்றாக அழிந்து விட்டன. நிறைய உயிரினங்கள் அழிவின் விளிம்பில் உள்ளன. இவற்றை அடையாளம் கண்டு காப்பாற்றுவதற்காக உலகத்தில் உள்ள பல சூழலியல், உயிரியல், வன அமைப்புகள் செயலாற்றி வருகின்றன. சட்டங்களும் கடுமையாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு நாட்டிற்கும், மாநிலத்திற்கும், ஏன் அந்த மண்ணில் வாழும் ஒவ்வொரு மனிதர்க்கும் பாரம்பரியமான செடிகளை, உயிரினங்களை காப்பாற்றும் சமூகப் பொறுப்பு உள்ளது. அப்போதுதான் தப்பிப்பிழைத்திருக்கின்ற உயிர்களையாவது, தக்கவைத்துக்கொள்ளக் கூடிய



நிலை உருவாகும். பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் என்ற வள்ளுவரின் குறளைப் பின்பற்றுவோம். எல்லா உயிர்களையும் வாழவைக்க முடியாவிடினும் போராடி வாழ்ந்து கொண்டிருக்கும் உயிர்களுக்கு ஊறு விளைவித்து மாபாதகம் செய்யாமலாவது இருப்போம். 'முகத்தில் பாதி வாயிருக்கும், முழு நீள நாக்கிருக்கும், மனதிலே பேயிருக்கும், மறையாத நோயிருக்கும் வனத்திலே கொண்டுபோய் விட்டுவிட்டால் மிருகமெல்லாம் வரவேற்கும்' என்று கவிஞர் கண்ணதாசன் மனிதனை மிருகத்தோடு ஒப்பிட்டு வேடிக்கையாகச் சொல்லுவார். நாம் அதை உண்மையாக்கி விடக்கூடாது.

ஒருயிர்க்கும் துன்பம் செய்யாது, வளங்களை அழித்தொழிக்காது, அளவான, முறையான பயன்பாட்டோடு இந்த இயற்கையையும், பூமியையும் செழிக்க வைப்போம். இந்த பூமியில் வாழும் அனைத்து உயிரினத்தையும் மதிப்போம், வாழவைப்போம். மனிதர்களைப் போலவே அனைத்து உயிர்களுக்கும் இந்த உலகத்தில் வாழ எல்லா உரிமையும் உள்ளது.



மருத்துவம்

சித்த மருத்துவமும், மகத்துவமும் !

'உணவே மருந்து, மருந்தே உணவு' என்பது சித்தர் வாக்கு. பசியாற்றும் உணவே, உயிர்காக்கும் மருந்தாகவும் செயல்படுகிறது. இந்தக் கருத்தாக்கத்தைக் கொண்டு இயங்கிவருவது சித்த மருத்துவம். இயற்கை மருத்துவம் எனச் சொல்லப்படும் சித்த மருத்துவத்தின் மருந்துகளை சித்தர்கள் மூலிகை, தாது மற்றும் சீவப் பொருள்களில் இருந்து தயாரிக்கின்றனர்.

சித்த மருத்துவத்தின் பயன்கள்

சித்த மருத்துவ முறையில் நாடி மூலமாகவும் நீர்க்குறி, நெய்க்குறி மூலமாகவும் நோயின் தன்மை மற்றும் காரணத்தை அறிந்து சிகிச்சை அளிக்கப்படுகிறது. சிறு நோய் முதல் பெரு நோய் வரை அனைத்துக்கும் சித்த மருத்துவம் மூலம் தீர்வு உண்டு. நீரிழிவு நோய், ஆஸ்துமா, புற்றுநோய், ஆண்மைக் குறைவு, குழந்தையின்மை, தூக்கமின்மை, மஞ்சள் காமாலை, நாட்பட்ட தோள் நோய்களான சோரியாசிஸ், வெண்படை மற்றும் உடல் பருமன் என எந்தவித நோய்க்கும் சித்த மருத்துவத்தில் மருந்து உண்டு. சித்த மருத்துவத்தின் முக்கிய அம்சம், அதன் மருந்துகளால் எந்தவித பக்க விளைவுகளும் ஏற்படாது என்பதுதான்.

சித்தா மருந்துகளை எடுத்துக்கொள்ளும்போது, அவசரத்திற்கு மருத்துவரின் ஆலோசனைப்படி ஆங்கில மருத்துவ மருந்துகளையும் சேர்த்து எடுத்துக்கொள்ளலாம், இதனால் பாதிப்பு ஏதும் ஏற்படாது. சித்தா மருந்துகளை எடுத்துக்கொண்டால் பத்தியம் இருக்க வேண்டுமா? என்ற கேள்வி எல்லோர் மனதிலும் எழும். எந்தெந்த நோய்க்கு எந்தெந்த உணவு எடுத்துக்கொள்ள வேண்டுமோ, அதையே சித்த மருத்துவத்தில் பத்தியம் என்கிறார்கள். வளர்ந்து வரும் புதிய தொழில்நுட்ப வளர்ச்சியுடனும், பரிசோதனை முறைகளுடனும்தான் இன்றைய சித்த மருத்துவம் இருக்கிறது. மருத்துவமனைகளாக மட்டுமன்று சித்தா ஆராய்ச்சி மையங்களும் செயல்பட்டு வருவதே சித்த மருத்துவத்தின் வளர்ச்சியைக் காட்டுகிறது. என்ன வளம் இல்லை நம் சித்த மருத்துவத்தில்? மூலிகைகள், தாதுப்பொருட்கள், சீவப் பொருட்கள் என பல்வேறு அடிப்படைப் பொருட்களிலிருந்து மருந்துகளை தயாரித்து நோய் நீக்கும் சிறப்புத் தன்மை கொண்டது சித்த மருத்துவம்.

அதாவது தாவரங்களின் வேர் முதல் விதை வரை. இரும்பு, வெள்ளி, தங்கம் போன்ற தாதுப்பொருட்கள். நத்தை, நண்டு, மீன் ரகங்களான கடல்சார் பொருட்கள் முதலிய சீவப் பொருட்கள் என ஒவ்வொருவருக்கும் அருகாமையில் கிடைக்கும் எளிமையான பொருட்களை நுட்பமாக மருந்தாக்கி உபயோகித்து நோய் தணிக்கும் சிறப்பு சித்த மருத்துவத்திற்கே உரித்தானது.

சித்த மருத்துவத்தின் மூலம் பல்வேறு நோய்களைத் தடுக்க முடியும். கட்டுக்குள் வைக்க முடியும். நோய்களைக் களையவும் முடியும். அசுர மருத்துவம் என்று அக்காலத்தில் பின்பற்றப்பட்ட மருத்துவ முறையில், சில தாவரங்கள் மூலம் மயக்கமுறச் செய்து, அறுவை சிகிச்சைகளும் நடைபெற்றதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன.

அசுர மருத்துவம் சார்ந்த சித்த மருத்துவக் குறிப்புகள் இன்றும் ஏராளமாக இருக்கின்றன. ஆனால் காலப்போக்கில் சித்த மருத்துவத்தில் அறுவை மருத்துவத்தின் பங்கு வெகுவாக குறைந்துவிட்டது. இப்போதும் நாட்பட்ட நீரிழிவுப் புண், நாளவிபாத



புண் போன்றவற்றை கட்டுப்படுத்தும் வெளிப்புற மருந்துகள், கொம்பு கட்டல் சிகிச்சை, தொக்கண சிகிச்சை எனப் பல நோய்களுக்கு தீர்வளிக்கும் சிகிச்சை முறைகள் புழக்கத்தில் இருக்கின்றன. அட்டைவிடல் சிகிச்சையின் முலம் இரத்தக் குழாய் சார்ந்த பிரச்சனைகளை நிவர்த்தி செய்யும் முறை இப்போதும் வழக்கத்தில் இருக்கிறது. இப்படி சித்த மருத்துவத்தின் பெருமைகளை சொல்லிக்கொண்டே போகலாம்.

சித்த மருத்துவத்தின் மகிமை என்பது தமிழ் சித்த மாமுனிவர்களின் அருளாற்றலால் உணர்ந்த மருத்துவ முறை என்பது குறிப்பிடத்தக்கது. அறிவியல் பார்வைகளை உள்ளடக்கி மெய்ஞானத்தால் அருளப்பட்ட மருத்துவமுறை சித்த மருத்துவம். மனிதர்களுக்கு உருவாகக்கூடிய பல வகையான நோய்களுக்கு தெளிவாக குறிகுணங்கள், சிகிச்சை முறைகள், மருந்துகள், நோய்க்காலத்து பத்திய முறைகள் என அனைத்து விதமான மருத்துவக் கட்டமைப்புகளையும் உள்ளடக்கியது சித்த மருத்துவம். 96 உடல் தத்துவங்களின் அடிப்படையில் நோய்க்கான சிகிச்சை வழங்குகிறது சித்த மருத்துவம். நா, நிறம், மொழி. விழி, நாடி, ஸ்பரிசம், மலம், சிறுநீர் என பல்வேறு விஷயங்களை ஆராய்ந்து நோய்க்கணிப்பை உறுதி செய்கிறது சித்த மருத்துவம். அதிலும் நாடி பார்த்து நோய்க்கணிப்பதென்பது சித்த மருத்துவத்திடம் இருக்கும் தனித்துவம்.

நெய்க்குறி, மணிக்கடைக் கணக்கு என ஆய்வக வசதியில்லாத அக்காலத்திலேயே தனித்துவமான நோய்க்கணிப்பு முறைகளைக் கையாண்டது சித்த மருத்துவம். சுவை தத்துவ அடிப்படையிலும், பஞ்ச பூத தத்துவ மார்க்கத்திலும், நாடியின் தனித்துவத்திலும் நோய்களைக் கணிக்கும் பிரத்யேகமான மருத்துவ முறைதான் சித்த மருத்துவம்.

நெருப்புக்கு புகைந்து ஓடக்கூடிய பாடாணப் பொருட்களையும் முறையாக சுத்தித்து நெருப்பில் புகையா வண்ணம் செய்து கட்டாக உருவாக்கிய பெருமை சித்தர்களை மட்டுமே சாரும். உள்மருந்துகள் 32 வகை, வெளி மருந்துகள் 32 வகை என இலட்சக்கணக்கான மருந்து செயல்முறைகளை கொண்டது சித்த மருத்துவம். அதனால்தான் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மனிதர்களை வாழ்வாங்கு வாழ வைக்க தமிழ் சித்த மாமுனிகளால் அருளப்பட்ட மருந்துகள் இன்றும் பயன்களை அள்ளி வழங்குவதை அறிய முடிகிறது.



எந்த விதமான புது நோய்கள், புதிது புதிதாக வைரஸ்களின் பெருக்கம் ஏற்பட்டாலும், குறிகுணங்களுக்கு ஏற்ப அதை தடுக்கக் கூடிய வல்லமை சித்த மருந்துகளுக்கு நிச்சயம் உண்டு. இன்னும் இரண்டாயிரம் ஆண்டுகள் கடந்தாலும் மனிதர்கள் இந்த உலகில் உள்ளவரை சித்த மருந்துகள் தமது வல்லமையை நிரூபணப்படுத்திக் கொண்டே தான் இருக்கும். நமது நோய்க்கட்டமைப்பை வலுப்படுத்தக்கூடிய மருந்துகள், கிருமித் தாக்குதலிலிருந்து உடலை மீட்டெடுக்கும் மருந்துகள், குறிப்பாக உடனடியாக நமது உடலில்

பணியாற்றும் கஷாய ரகங்கள் சித்த மருத்துவத்தின் சிறப்பு. சித்த மருத்துவ நோக்கி மக்களின் பார்வை கடந்த சில ஆண்டுகளாக திரும்பியருக்கிறது. ஆனால் கொரோனாவிற்குப் பிறகு சித்த மருத்துவத்தை நாடும் மக்களின் எண்ணிக்கையோ மிக மிக அதிகம். கொரோனாவிற்கு முன், கொரோனாவிற்குப் பின் என சித்த மருத்துவத்தின் நவீன காலத்தை தாராளமாக பகுப்பாய்வு செய்யும் அளவிற்கு சித்த மருத்துவத்தின் மீது கொரோனா தாக்கத்தை செலுத்தி இருக்கிறது. கொரோனாவால் ஏற்பட்ட ஒரே ஒரு நன்மை சித்த மருத்துவத்தின் மீட்டுருவாக்கத்திற்கு உதவியது எனலாம். கொரோனா காலத்தில் சித்த மருத்துவம் வெகுவாக பயன்பட்டது என்பது அனைவரும் அறிந்த உண்மை.

சித்த மருத்துவத்தில் ஓலைச்சுவடிகளில் சொல்லப்பட்ட மருத்துவ முறைகளை அச்சு வடிவத்தில் புதிய நூல்களாக பல தொகுதிகளாக வெளியிடலாம். கூடுமானவரை மின் புத்தகங்களாகவும் வடிவமைக்கலாம். சித்த மருத்துவத்தில் ஆய்வு செய்வதற்கு பல்வேறு தளங்கள் இருக்கின்றன. முறையாக ஆய்வுப்படுத்தினால் இன்னும் பல மருத்துவ மகிமைகள் நமக்கு கிடைக்கும். இடைச்சங்க காலத்தில் இந்நாட்டில் பல மொழிகளின் கலப்பு காரணமாக சித்த மருத்துவத்திலும் பல்வேறு மருத்துவ முறை கலப்பு ஏற்பட்டது. ஒரு ஓலைச் சுவடியின் ஆயுட்காலம் 300 ஆண்டுகள் தான். சித்த மருத்துவர்கள் வீடுகளில் வைத்திருந்த ஓலைச்சுவடிகளும் கரையானால் அரித்து, அழிந்து போயின.பண்டைய மதுரையில் 2ம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் தமிழ் கடைச்சங்கம் நடைபெற்றது. இது தமிழின் பொற்காலம் எனச் சொல்லலாம். மருத்துவர் தாமோதரனார் தமிழ் மருத்துவப் புலவராக இருந்து மருத்துவத்திற்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பை நிரூபனம் செய்கிறார். இடைச்சங்க காலத்தில் கிடைத்த மாபுராணம் என்ற மருத்துவ நூல் தமிழ் மருத்துவத்தின் தொன்மையை விளக்குகிறது. தமிழர் நாகரீகத்தோடு பல்வேறு இனக்குழுக்கள் இணைந்து இருந்தன. ஆகையால்தான் தமிழ்மொழியில் பல்வேறு சொற்களும்கலந்துஇருக்கின்றன. மெசப்படோமியாவை விட பழமையான, ஆனால் அதற்கும் மேலான நாகரீகம் தமிழர் நாகரீகம் என்பதில் தற்சமயம் கிடைக்கும் பல்வேறு அகழ்வாராய்ச்சியின் மூலம்பெருமை கொள்ள முடியும்.

திருமூலர் சொன்னது

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திருமூலர்,

‘மறுப்ப துடல் நோய்
மருந்தென வாகும்
மறுப்ப துள நோய் மருந்தெனல்
சாலும்மறுப்ப தினி
நோய் வராதிருக்க
மறுப்ப துசாவை மருந்தென
லாமே”

என உடலில் நோய் வராமல் தடுத்தல், மனதில் நோய் வராமல் காத்தல், நோய் வராமல் இருக்க தடுப்பு மருந்தாக செயல்படுதல் மற்றும் நீண்ட நாள் உடலை வாழ காயகற்பமாக திகழ்தல் என்ற குணங்களையும் உடையது மருந்தாகும் எனக் குறிப்பிடுகிறார். சித்த மருத்துவமும் காப்பு, நீக்கம், நிறைப்பு என்ற மூன்றின் அடிப்படையில் நோய் வராமல் காக்கவும், வந்த நோயை நீக்கவும், உடலில் குறைந்த சத்துகளை நிறைக்கவும் பயன்படுவதே மருந்து என குறிப்பிடுகிறது.

பல்வேறு உலோகங்களை முறைப்படி சுத்தம் செய்து மிகநுண்ணியதாக மாற்றி நீண்ட ஆயுள் தரும் காப்பு மருந்துகளாக செய்வது சித்த மருத்துவமே. மூலிகைகள், உலோகங்கள் மற்றும் பொருட்களால் செய்யப்பட்ட மருந்துகள், அறுவை சிகிச்சை முறைகள், பல்வேறு உலோகங்களை கலந்து செய்யும் உலோக கலப்பு முறைகள், மருந்துகளின் தூய்மை தன்மை சோதனை செய்யவும், அவற்றை மெருகேற்றவும் பயன்படும் மருந்துகள், யோக முறைகள், ஆழ்ந்த மயக்கத்தில் உள்ளவரை எழுப்பும் மருந்துகள், வலியை நீக்கி நரம்புகளை முறுக்கேற்றும் வர்ம மருத்துவம் ஆகியன சித்த மருத்துவத்தின் சிறப்பு அம்சங்களாகும். பிறமொழி நூல்களில் காணப்படும் பதஞ்சலி, தன்வந்திரி ஆகியவர்களின் பெயர்களும் பதினெண் சித்தர்களில் ஒருவராக சித்த மருத்துவத்தில் குறிப்பிப்படுகின்றன.

நாடியின் மூலம் சிறப்பாக நோய் அறியும் தன்மை, இருபதுக்கும் மேற்பட்ட உலோகங்களை அறுபதுக்கும் மேற்பட்ட உலோகக் கலவைகளாக மாற்றி

மருந்துகளாக செய்கின்ற தன்மை சித்த மருத்துவத்தின் சிறப்பாகும்.குமரிக்கண்டத்தின் தொன்மையில் சித்த மருத்துவத்தின் வரலாறு தொடங்குகிறது. மிளகு, இஞ்சி, மஞ்சள் ஆகியவற்றை மருந்தாக பயன்படுத்தியது மட்டுமன்றி வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்த தொன்மை மதுரை காஞ்சியில் விளக்கப்பட்டு உள்ளது. வேப்பங்காயும், கடுக்காயும் கசப்பானது என்றும் ஆனால் மருந்தாக பயன்பட்டு நமக்கு எப்படி நன்மை அளிக்கிறதோ அதுபோல பெரியவர்களின் சொல் கசப்பாக இருந்தாலும், நமக்கு நன்மை தரும் என தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. இரவு மரம் மற்றும் வேப்பிலையை வீட்டுத் திண்ணைகளில் சொருகி வைத்து நுண்கிருமிகள் தாக்காமல் காத்தனர் நமது முன்னோர்கள். இதனை புறநானூறு “தீங்கனி இரவமோடு வேம்புமனை பெரிஇ” என சிறப்புற்றுக் கூறுகிறது.

கல்வெட்டுகளிலும் சங்க இலக்கியங்களிலும் பண்டைய தமிழ் நூற்களிலும் பிறநாடுகளில் காணப்படும் கல்வெட்டுகளிலும் தமிழ் மன்னர்கள் பற்றிய குறிப்புகள் தமிழ் மருத்துவத்தின் தொன்மையை நமக்கு உணர்த்துகிறது. செயற்கை உறுப்பை பொருத்திக் கொள்ளும் உறுப்பு மாற்று சிகிச்சை செய்த கொற்கை பாண்டியன் என்ற பொற்கை பாண்டியன் தனக்கு செயற்கை கை செய்து பொருத்திக் கொண்டதை குணமாலை குறிப்பிடுகிறது. தான் அறுத்து எறிந்த கைக்கு மாற்றாக பொன்னால் செய்யப்பட்ட கையை மன்னன் அணிந்தது செயற்கை உறுப்புகளை பொருத்தி கொள்ளும் வரலாற்றுக்கு சான்றாக இது கல்வெட்டில் பொறிக்கப்பட்டுஉள்ளது.

இலக்கியங்களில் காணப்படும் மருத்துவ குறிப்புகள் தமிழ் மருத்துவம் தனி மருத்துவமாக தமிழ் மக்களிடம் திகழ்ந்ததற்கு ஆதாரமாக விளங்குகின்றது. சிரல் என்னும் பறவை குளத்தில் இருக்கும் மீனை எப்படி கொத்திக் கொண்டு பறக்கிறதோ அதுபோல வெள்ளியால் செய்யப்பட்ட ஊசியினால் போரில் காயம் பட்ட வீரர்களின் காயங்களை மருத்துவர்கள் தைத்ததாக பதிற்றுப்பத்து குறிப்பிடுகிறது. அத்திப்பாலால் புண்களை ஆற்றி தழும்பு இல்லாமல் செய்யப்படும் சிகிச்சையை புறநானூறு குறிப்பிடுகிறது. மங்களை என்ற மருத்துவப்பெண்கொங்கு மன்னரின் ராணிக்கு அறுவை சிகிச்சை மூலம் குழந்தையை எடுத்து தந்த முறையை கொங்குமண்டல சதகம்என்னும் நூல் குறிப்பிடுகிறது. தமிழ் மருத்துவத்தில் மருத்துவ தாதிகள் போரில் அடிபட்டவர்களுக்கு எண்ணெய் தடவி புண்களை கட்டுப் போட்டதுமன்றி போருக்கு சென்ற அரசனை நினைந்து வருந்திக்கொண்டிருக்கும் ராணிகளுக்கு உள்ளங்கால்களையும் உடம்பையும் வருடி தூக்கம் வரச் செய்யும் தொக்கணம் என்ற மசாஜ் சிகிச்சை செய்ததை சங்க நூல்கள் குறிப்பிடுகின்றன.

நானோ மருத்துவ முறை

பொன்னால் செய்யப்பட்ட மணியை உரசி அத்துடன் தேன் கலந்து குழந்தைகளுக்கு ஊட்டும் முறையில் தமிழ் பெண்கள் கை தேர்ந்து இருந்தனர். நானோ மருத்துவ முறையில் மிக நுண்ணிய அளவில் தங்கம், வெள்ளி போன்றவற்றை மருந்தாக வழங்கும் கலை தமிழ் மக்களுக்கு தெரிந்து இருந்தது. நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு யாழ், இசைமணி ஆகியவற்றை ஒலித்து அவர்களை மகிழ்ச்சி படுத்தி மருத்துவம் செய்த வழக்கமும் சித்த மருத்துவத்தில் காணப்படுகிறது. பல்வேறு மூலிகைகளை சேர்த்து பொடி செய்து அதன் மூலம் மாதவி தன் கூந்தலை சுத்தம் செய்து கொண்டதாக அடியார்க்கு நல்லார் குறிப்பிடுகிறார். பண்டைய தமிழர்களின் வாழ்வியலில், நலவியல், அறுவை சிகிச்சை, அழகியல் என அனைத்திலும் சித்த மருத்துவம் நிறைந்து இருந்தது.

ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மருந்துகளும் அவற்றில் இருந்து எண்ணிக்கையில் அடக்க முடியாத வேதி மூலக் கூறுகளும் பல ஆயிரங்களுக்கு மேற்பட்ட சித்த மருத்துவ நூற்களும் என சித்த மருத்துவம் ஒரு அறிவுக் களஞ்சியம். பல்வேறு அறிவியல் ஆராய்ச்சிகளுக்கு அடிப்படை தளத்தை அமைத்துக் கொடுக்கப் போவது சித்த மருத்துவம். புதிய நோய்களின் தாக்கம் ஏற்படும் பொழுதெல்லாம் எளிய மருந்துகளால் இதனை கட்டுப்படுத்த முன்னெடுப்பது சித்த மருத்துவம். எளிய முறையில் தாய் நமக்கு தரும் உணவு எப்படி பாதுகாப்பானதோ அதுபோல் சித்த மருத்துவமும் பாதுகாப்பானது. சித்த மருத்துவத்தை பின்பற்றுவோம். நோயின்றி வாழ்வோம்!

உறவுகளைப்

உறவு என்ற சொல்லே இன்று நம்மில் கரைந்து போய் விட்ட மறந்து போய்விட்ட ஒன்றாகிவிட்டது. 'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி சிந்தை இனித்திடும் உறவுகள்' இன்று சிந்தைக்கும் எட்டாத வையாக உள்ளன. அம்மா —அப்பா, அண்ணன்— அக்கா, தம்பி— தங்கை, சித்தி— சித்தப்பா, பெரியம்மா— பெரியப்பா, அத்தை— மாமா, தாத்தா— பாட்டி என்று எத்தனை உறவுகள்! இதில் ஒன்று விட்ட உறவுகள் வேறு!. நாம் அனைவரும் இந்த உறவுகளை கடந்து வந்தவர்கள் தான். ஆனால் இன்று அத்தனை உறவுகளும் 'ஆண்ட்டி— அங்கிள்' என்று ஒற்றைச் சொல்லால் ஒடுக்கப்பட்டுள் து. ஒரு மனிதன் பிறக்கும்போதும் சுற்றி நின்று வரவேற்பது உறவுகள்தான்! இறக்கும்போதும் கூடியிருந்து வழியனுப்புவது உறவுகள்தான்!

இலக்கியங்களில் உறவுகள்:

உறவுகளின் பரிணாமங்களை தான் இராமாயணமும் மகாபாரதமும் உலகிற்கு பறைசாற்றின. ஒரு மனிதன் எப்படி வாழவேண்டும் என்பதை இராமாயணமும் எப்படி வாழக்கூடாது என்பதை மகாபாரதமும் உலகிற்கு உணர்த்தின. அதனை இன்று யாரும் உணர்வாரில்லை. 'ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெரும் ஜோதி எம்பெருமானும்' தமக்கு ஒரு அம்மை உறவு வேண்டும் என்பதற்காகத்தான் காரைக்கால் அம்மையாரை 'நம்மைப் பேணும் அம்மை காண்' என்றார். சகோதர உறவுகளின் உன்னதத்தைக் கூறியது தான் இராமவதாரம். திருநாவுக்கரசர் பெருமானும் இறைவனை உறவுமுறை கொண்டே அழைத்து வேண்டினார். 'அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ அன்புடைய மாமனும் மாமியும் நீ' என்கிறார். உறவினர்களோடு கூடியிருந்து வழிபடுவதையே சங்க இலக்கியநூலான பரிபாடல் 'இங்கு காமரு சுற்றமொடு ஒருங்கு நின் அடியுறை யாம் இயைந்து ஒன்றுபு வைகலும் பொலிக' எனக் கூறுகின்றது. ஆண்டாள் பிராட்டியும் 'மூடநெய் பெய்து முழங்கை வழிவார கூடி இருந்து குளிர்ந்தேலோர் எம்பாவாய்' என்கிறார். காப்பிய இலக்கியமான சிலப்பதிகாரத்தில் கோவலன் கண்ணகி தனிக்குடித்தனம் சென்றதை சிலர் சுட்டிக்காட்டலாம். ஒருவேளை பெரியவர்கள் உடன் இருந்தால் கோவலனும் படி தாண்டியிருக்கமாட்டான். கண்ணகியும் நீதிகேட்டு படியேறி இருக்கமாட்டாள். சங்க இலக்கியமான நற்றிணையில் தலைவி ஒரு புன்னை மரத்தைக் காட்டி தலைவனிடம் இம்மரம் எனது சகோதரி என்பாள். மரங்களையும் உறவுகளாகக் கொண்டு வாழ்ந்தவர்கள் தான் நம் தமிழர்கள். அத்தகைய மரபில் வந்த நாம் தான் இன்று, மரங்களை வெட்டுவது போல் உறவுகளையும் வெட்டிக் கொண்டு இருக்கிறோம். அன்று மரத்திலும் மனிதம் இருந்தது. இன்று மனிதம் மறந்து மரம் ஆகிவிட்டது.

வழிகாட்டும் உறவுகள்:

'தாத்தாக்கள்' தனது பிள்ளைகளைத் தூக்கி சுமந்ததை விட பேரக் குழந்தைகளை தூக்கிச் சுமப்பதே அதிகம். தாத்தா— பேரக்குழந்தைகள் சவாரி செய்யும் யானையாக! தோளுக்கு மேல் தூக்கிச் செல்லும் மிட்டாய் பொம்மைக்காரராக! உப்பு மூட்டைத் தூக்குபவராக! எத்தனை பரிமாணங்கள்! பீஸ் வாங்காத செக்யூரிட்டி அல்லவா



இரா. ஸ்ரீநித்யா

தாத்தா!. பாட்டி— என்றாலே பழங்கதையும் கைப்பக்குவமும் தான் முதலில் நினைவுக்கு வரும். எந்த நோயாக இருந்தாலும் கைவசம் ஒரு மருத்துவக் குறிப்பு வைத்திருப்பார். 'சுக்குக்கு மிஞ்சிய மருந்தும் இல்லை. சுப்பிரமணியனுக்கு மிஞ்சிய சாமியும் இல்லை' என்பது பாட்டியின் பழமொழி. எம்.பி.பிஎஸ். படிக்காத மருத்துவச்சி! சுருக்கமாகச் சொல்லவேண்டுமென்றால் வீட்டில் இருக்கும் 'அஞ்சறைப்பெட்டி'. நளாயினியும் சத்தியவான் சாவித்திரியும், அரிச்சந்திரனும் பாட்டி கதையின் வாயிலாக நமக்குப் பாடம் சொல்லித் தந்தவர்கள். இன்று நீதிக்கதைகள் சொல்வதற்கும் நெறிப்படுத்துவதற்கும் தாத்தாவும் இல்லைஞ்ஞ் பாட்டியும் இல்லைஞ்ஞ் முதியோர் இல்லங்களில் முடங்கிப் போய் கிடக்கிறார்கள். 'அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப் பேணித் தமராக் கொளல்' என்றார் வள்ளுவப் பெருந்தகை. அதைத் தவற விட்டதால் தான்



புறப்பட்ட இடமும் தெரியாமல் போகும் இடமும் தெரியாமல் 'நீர் படும் புணை போல

எனது இளைஞன் தடுமாறி கொண்டிருக்கின்றான்.

நம்பிக்கை உறவுகள்

அப்பா— என்றாலே நம்பிக்கைதான். இவ்வுலகிற்கு நம்மை அறிமுகப்படுத்தியது அம்மா என்றால், இவ்வுலகை நமக்கு அறிமுகப்படுத்தியது அப்பா அல்லவா. அதனால்தான் ஒவ்வொரு தகப்பனும் தன் பிள்ளை தன்னை விட மேலே வரவேண்டும் என்பதற்காகத்தான் தன் பிள்ளையை தோளுக்கு மேலே தூக்கி வைத்திருப்பான். இதனைத் திருவிழாக்களில் காணலாம். அப்போது அந்த பிள்ளைக்குத் தெரியாது ஒரு சாமி மீது ஏறித்தான் மற்றொரு சாமியை பார்க்கிறோம் என்று. தனது மகன் படிப்பதற்காகவே ஓட்டப்பிடாரத்தில் ஒரு பள்ளிக் கூடத்தை நிறுவியவர் வ.உ.சி. அவர்களின் தந்தை. இலக்கியக் கடலில் என்னை இழுத்துச் சென்ற மாலுமி என்று தனது தந்தையைக் குறிப்பிடுகிறார் கவிஞர் நா முத்துக்குமார்.

தனது மகனை காப்பாற்றுவதற்காக இறைவனிடம் தனது உயிரை எடுத்துக் கொள்ள வேண்டியவர் முகலாய மன்னர் பாபர். அம்மா, அ —உயிரும், ம்— மெய்யும், மா—உயிர் மெய்யும் கலந்த உன்னத கவிதை. பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக தன் தேவைகளை குறைத்துக் கொள்பவள். பிள்ளைகள் படிப்பதற்காக தன்னைப் படிக்கட்டாக வடித்துக் கொள்பவள். ஒவ்வொரு மனிதனுக்கும் அவனது தாயின் திருவடி தான் சொர்க்கம் என்பார் முன்னாள் குடியரசுத் தலைவர் மேதகு அப்துல் கலாம் அவர்கள். ஆனால் இன்று பெற்றோர்களின் கதி அதோகதிதான்!

மூலைக்கு ஒன்றாக முதியோர் இல்லங்கள் முளைத்துக் கொண்டுதான் இருக்கின்றன. வீட்டில் வளர்த்த தென்னம்பிள்ளை கூட பின்னாளில்



தேங்காய் இளநீர் தரும் மரமாக பயன்படுகிறது. ஆனால் பெற்ற பிள்ளையோ பயனின்றி பதராகின்றது. இன்று, பெற்ற பிள்ளைகள் வேலைக்காக அந்நிய தேசத்தில்! பெற்றோர்கள் ஆதரவற்ற இல்லத்தில்! தவித்த மனதோடு தள்ளாடும் பெற்றோர்கள்! ஏக்கப்பெருமூச்சோடு எண்ணிலடங்கா பெற்றோர்கள்! இளைஞர்களே, முதியோர் இல்லங்களுக்கு மறக்காமல் பொருளுதவி தாருங்கள். ஆனால் மறந்தும் பெற்றோரை தந்து விடாதீர்கள்.

உடன்பிறந்த உறவுகள்:

அண்ணன் தங்கை பாசத்தை எடுத்துக்காட்டும் 'நல்லதங்காள்' வாழ்ந்த பூமி இது. பாசமலர் படம் பார்த்து கண்ணீர் வடிக்காதவர் ஒருவரும் இல்லை எனலாம். அண்ணன் என்றாலே தங்கைக்கு சீர் செய்பவன் என்றும் தங்கை என்றாலே அண்ணனிடம் சீர் பெறுபவள் என்றும் நமக்கு காலங்காலமாக சொல்லி வருபவை. ஆண்டாள் பிராட்டியும் தனது கனவினை நிறைவேற்றிய இராமானுஜரை 'தம்கோயில் அண்ணன்' என அழைத்ததாக வைணவ மரபில் கூறுவதுண்டு. அதனால் தான் இன்றும் நம்மிடையே 'தங்கக் கடிகாரம் வைர மணியாரம் தந்து மணம் பேசுவார்! மாமன் தங்கை மகளான மங்கை உனக்காக உலகை விலை பேசுவார்'!

'தாய்மாமன் சீர் சுமந்து வாராண்டி அவன் தங்கக் கொலுசு கொண்டு தாராண்டி' என்ற பாடல் வரிகள் எல்லோரது மனதிலும் நீங்கா இடம் பெற்றவையாக உள்ளன. இன்றும் சகோதரர்கள் சிவப்பு சேலை பச்சை சேலை என சகோதரிகளுக்கு எடுத்துத் தருவது மேற்சொன்ன பிரதிபலிப்பே ஆகும். தூத்துக்குடி பகுதிக்குச் சென்றால் தெரியும் அண்ணன் தங்கை உறவின் ஆழம். அங்கு கடலில் முத்துக் குளிப்பவர்களை ஒரு கயிற்றில் கட்டி கடலில் விடுவார்கள் மேலே கயிற்றினை ஒருவர் பிடித்துக் கொள்வார். அவர் சிறிது அசந்தாலும் முத்துக்குளிப்பவர் மூச்சை இழக்க வேண்டியதுதான். அதனால்தான் அந்தக் கயிற்றை முத்துக்குளிப்பவரின் மைத்துனன் அதாவது (மனைவியின் சகோதரன்) கையில் தருவார்கள். அவனுக்குத்தான் தெரியும் தான் பிடித்திருப்பது சாதாரண கயிறு அல்ல. தன் தங்கையின் தாலிக்கயிறு என்று. உறவின் ஆழத்தை உணர்வின் ஆழம் வெளிப்படுத்தும். இன்று சொந்த உரிமையை நிலைநாட்டுவதற்காக குடும்பங்களில் கூடுவதைவிட சொத்துரிமையை நிலைநாட்டுவதற்காக கோர்ட்டுகளில் கூடும் அண்ணன் தங்கை உறவு களைத்தான் அதிகம் காணமுடிகின்றது.

கூடிக் கொண்டாடும் உறவுகள்:

முன்பெல்லாம் வீட்டிற்கு வரும் விருந்தினர்களுக்கு வீட்டில் இருக்கும் உறவுகளை அறிமுகப்படுத்துவோம். இன்று வீட்டில் வாங்கி வைத்திருக்கும் இயந்திரங்களை அறிமுகப்படுத்துகிறோம். இதயங்களோடு உறவாடிய காலம் மாறி இன்று இணையங்கள் உறவாடிக் கொண்டிருக்கின்றோம். அன்று வீட்டில் திண்ணை வைத்துக் கட்டினார்கள். 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்பதற்கேற்ப வரும் வழிப்போக்கர்கள் இளைப்பாறிச் செல்வார்கள். இன்று இளைப்பாறுவதற்கு இடமுமில்லை. இளைப்பாற்றுவதற்கு இதயமும் இல்லை. 'சொந்த வீடு' என்பது சொந்தமாக சிமெண்டாலும் செங்கல்லாலும் கட்டுவது அல்ல.

சொந்த பந்தங்கள் எல்லாம் வந்து போவதே சொந்த வீடாகும். உடன்பிறந்தோர் என்றில்லை. அன்று, ஊரில் யாரோ ஒரு ராமசாமி அண்ணன் தான் நமக்கு சைக்கிள் ஓட்டக் கற்றுக் கொடுத்திருப்பார். யாரோ ஒரு பரமசிவம் அண்ணன் தான் நமக்கு நீச்சல் கற்றுக் கொடுத்திருப்பார். யாரோ ஒரு கமலாக்காதான் கோலம் போடவும் குழம்பு வைக்க கற்றுக் கொடுத்திருப்பார். விடுமுறைக் காலம் என்றாலே உறவுகளைத் தேடி சென்று கொண்டாடியிருக்கின்றோம். ஆனால் இன்று, தேடிச் செல்வதற்கு உறவுகளும் இல்லாமல், நாடி வருவதற்கு உறவுகளுக்கு இடமும் தராமல் இணையத்தோடு இறுக்கிக் கொண்டிருக்கிறோம். அன்று வீடுகள் தனியாக இருந்தன.

ஆனால் குடும்பங்கள் ஒன்றாக இருந்தன. இன்று வீடுகள் ஒன்றாக உள்ளன ஆனால் குடும்பங்கள் தனியாக இருக்கின்றன. சிறு குழந்தைகளுக்கு விளையாட்டுக் காட்டும் போது கூட, குழந்தையின் கையைப் பிடித்து ஒவ்வொரு விரலும் ஒரு உணவாகக் கூறுவர் இது சோறு, குழம்பு, ரசம், பருப்பு, அப்பளம். இந்தா அத்தைக்கு, மாமாவுக்கு, தாத்தாவுக்கு, பாட்டிக்கு கடைந்து கடைந்து காக்காய்க்கு ஊத்து! நண்டூருது! நரியூருது! கிச்சு கிச்சு எனக்கூறி குழந்தையை மகிழ்விப்பார்கள். இதன் பொருள் என்ன தெரியுமா? உறவுகளுக்கும் பிற உயிர்களுக்கும் நீ கொடுத்து வாழ்ந்தால் வாழ்வில் மகிழ்வாய் இருக்கலாம் என்ற உயரிய தத்துவத்தை விளையாட்டில் வைத்தவர்கள் நம் தமிழர்கள்.

உன்னத உறவுகள்:

ஒவ்வொருவர் வாழ்விலும் ஒரு கட்டத்தில் உறவுகளின் தாக்கம் இல்லாமல் இருந்திருக்க முடியாது. வைணவத்தின் விடிவெள்ளி இராமானுஜருக்கு அனைத்திலும் உதவியாக இருந்தது அவரது மாமா திருமலை நம்பி! திருநாவுக்கரசர் பெருமானுக்கு சைவத்தில் அடிகோலியவர் அவரது தமக்கை திலகவதியார்! இராஜராஜசோழனின் ஆன்மீகப் பணிக்கு ஊன்றுகோல் அவரது தமக்கை குந்தவை பிராட்டியார்! மூன்று சத்தியங்கள் வாங்கியதன் வாயிலாகத்தான் தன் மகன் மோகன்லால் கரம்சந்த் காந்தியை மகாத்மா காந்தியாக்கியது அவரது தாய் புத்திலிபாய்! தனது மகனுக்காக தன்னுயிரை இறைவனிடம் எடுத்துக் கொள்ள வேண்டியவர் முகலாய மன்னர் பாபர்!

தன் மகனை மராட்டிய சிங்கமாக வீரசிவாஜியிக்கியது அவரது தாய் ஜீஜீபாய்! ஷாஜகானின் இறுதிக் காலத்தில் உடனிருந்து அவரைப் பார்த்துக் கொண்டது அவரது கடைசி மகள்! தனது மகனை உலகில் சிறந்த விஞ் ஞானியாக்க ஊன்றுகோலாக இருந்தவர் தாமஸ் ஆல்வா எடிசனின் தாய் நான்சி எடிசன்! தாயை இழந்த சிறு பருவத்தில் பாரதியாரை ஆதரித்து காசிக்கு அழைத்துச் சென்றது அவரது அத்தை! காமராஜரின் தந்தை மறைவிற்கு பின் அவரை ஆதரித்தது அவரது தாய் மாமா கருப்பையா நாடார்! மேதகு அப்துல்கலாம் ஐயா அவர்களின் உயர்கல்விக்காக தக்க நேரத்தில் பொருளுதவி செய்தது அவரது சகோதரி. ஜொலிமா!

உறவுஇன்றிஉலகம்இல்லை.அதைஒவ்வொருவரும் உணர்ந்து கொண்டால் எல்லோரும் உறவினரே. உறவுகளோடு இருந்தால்தான் உயிர்ப்போடு இருப்போம் என்பதற்காகத்தான் தலைவர்களை கூறும் போது கூட உறவுகளைக் கூறியே அழைத்தார்கள். காந்தி தாத்தா, நேரு மாமா, அறிஞர் அண்ணா, அவ்வைப்பாட்டி, அன்னை தெரசா என்று வாழ்வில் உறவுகள் நமக்கு நம்பிக்கை தரும் பலமாக, வழிகாட்டும் பாலமாக உள்ளன. இவ்வுலகில் ஒருவன் பொருள் இல்லாமல் போனால் 'ஏழை' ஆனால் உறவு இல்லாமல் போனால் 'அனாதை'. ஏழையாக இருப்பதைவிட அனாதையாக இருப்பது மிகக் கொடுமை. எனவே உறவுகளைப் பேணி உறவாடி மகிழ்வோம்.

தமிழ் 2022

நற்றமிழரின் நாடித்துடிப்பு

JANUARY

FEBRUARY

MARCH

APRIL

MAY

JUNE

JULY

AUGUST

Su	Mo	Tu	We	Th	Fr	Sa
1	2	3	4	5	6	7
8	9	10	11	12	13	14
15	16	17	18	19	20	21
22	23	24	25	26	27	28
29	30	31				

SEPTEMBER

Su	Mo	Tu	We	Th	Fr	Sa
			1	2	3	4
5	6	7	8	9	10	11
12	13	14	15	16	17	18
19	20	21	22	23	24	25
26	27	28	29	30		

OCTOBER

Su	Mo	Tu	We	Th	Fr	Sa
					1	2
3	4	5	6	7	8	9
10	11	12	13	14	15	16
17	18	19	20	21	22	23
24	25	26	27	28	29	30
31						

NOVEMBER

Su	Mo	Tu	We	Th	Fr	Sa
	1	2	3	4	5	6
7	8	9	10	11	12	13
14	15	16	17	18	19	20
21	22	23	24	25	26	27
28	29	30				

DECEMBER

Su	Mo	Tu	We	Th	Fr	Sa
			1	2	3	4
5	6	7	8	9	10	11
12	13	14	15	16	17	18
19	20	21	22	23	24	25
26	27	28	29	30	31	

அடி தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com



Email: editor@ithamil.com

© Worldprints.com

VARSHA™

IDLI/DOSA BATTER

Let's eat the Best!